
REGD. No. M 4392




கல்கி



KALKI மே 7, 1950 4 அ


Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Gardens, Poonamallee High Road, Kilpauk, Madras



லிப்டன்ஸ்

என்றால்

சிறந்த டீ



கோடைகாலம் நாள் முழுவதும் வெயில் கொளுத்துகிறது. பூமி காய்கிறது. வயல்களில் பயிர்கள் வாடி வெளுத்து நிற்கின்றன. சந்தைகளில் புழுதி கிளம்பி மேகமண்டலம்போல் சூழ்ந்து நிற்கிறது. இச்சமயத்தில்தான் மனிதரும் மாக்களும் தணிக்க முடியாத தாகத்தால் தவிக்கின்றனர். இப்பொழுதுதான் டீ தனது மேன்மையை வெளிப்படுத்துகிறது. மலிவாகவும் சுலபமாகவும் கிடைக்கும் இந்த பானம் கோடைநாட்களின் கொடுமையைப்போக்கி, வாடிய உடலுக்கு புத்துயிரளித்து, வேலையைச் செய்ய ஊக்கமளிக்கிறது.

சென்ட்ரல் டீ போர்டின் வெளியீடு

பட்டுவாடா செய்து விட மாட்டார்களா என்று கேட்டிருக்கிறீர்கள்.

நான் இங்குள்ள ரயில்வே டிஸ்ட்ரிக்ட் என்ஜினீயர் ஆபீஸில் வேலையில் இருக்கிறேன். இங்கிருந்து நான் ஒரு வார லீவில் என்னுடைய சொந்த ஊருக்குப் போயிருந்தேன். அங்கு நான் திரும்பிக் கிளம்ப வேண்டிய தினம் என்னுடைய குழந்தைக்கு உடம்பு ரொம்பவும் அசௌகரியமாய் இருந்ததால், அதைத் தெரிவித்து எனக்கு மூன்று நாள் அதிகம் லீவு வேண்டுமென்று மனுச் செய்து கொண்டு என் ஆபீசுக்கு ஓர் கடிதமும், என்னுடைய நண்பருக்கு நான் புதன்கிழமை காலை வருவதாக ஒரு கடிதமும் எழுதினேன். காலதாமதம் ஆகக்கூடாதென்ற கவலையால் ஆபீசுக்கு எழுதிய கடிதத்தில் "எக்ஸ்பிரஸ் டெலிவரி" லேபிளும் இரண்டணா ஸ்டாம்பும் ஒட்டி போஸ்ட் செய்தேன். இவ்விரண்டு கடிதங்களும் திருவாரூரில் ஏப்ரல் 15-ந்தேதி போஸ்ட் செய்யப் பட்டன. சாதாரணமாக எக்ஸ்பிரஸ் டெலிவரி லேபின் ஒட்டிய கடிதம் ஞாயிற்றுக்கிழமை சாயந்திரமும், சாதாரணக் கடிதம் திங்கள்கிழமை காலையிலும் வந்து சேர வேண்டும். ஆனால் நான் புதன்கிழமை இங்கு வந்தபொழுது இரு கடிதங்களும் வந்து சேரவில்லை என்று தெரிந்து கொண்டேன். பிறகு வியாழக்கிழமை காலையில் என் நண்பருக்கு எழுதி யிருந்த கடிதம் வந்து சேர்ந்தது. அதை நானே பிரித்து அவரிடம் கொடுத்தேன். மறு நாள் வெள்ளிக்கிழமை (21—4—50) காலையில் "எக்ஸ்பிரஸ் டெலிவரி" லேபிளுடன் என் ஆபீஸுக்கு எழுதிய கடிதம் வந்து சேர்ந்தது. ஆகையால் தாங்கள் எக்ஸ்பிரஸ் டெலிவரி லேபிளுடன் போஸ்ட் செய்தால் அதைத் தந்தி இலாகா அடுத்த ஞாயிற்றுக் கிழமையாவது பட்டுவாடாசெய்து விடுவார்களா என்று கேட்டதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை!

குத்தி
23—4—50 ஆர். வீராசாமி

○●○

அச்சுக்கூலி மிச்சம்!

"வெள்ளைக் காயிதத்தைக் கருப்பு ஆக்கல்" என்பது பாலர்களிடையே பழகி வரும் ஓர் பழமொழி. காகிதம் நிறைந்த இக் காலில் தபால் ஆபீஸ்களில் மேலே கூறிய கருத்திற்கிணங்க தந்தி பாரங்களை சுதந்திர இந்திய சர்க்கார் அச்சுப் போட்டதாய்ப் பெயர் செய்து பொது மக்களுக்கு விநியோகம் செய்து வருவதை நினைத்தால் பிரதம நிர்வாகிகளின் வேலைத்திறன் நன்கு புலனாகிறது. சில நாட்களுக்கு முன் சென்னையில் தந்தி பாரங்கள் வாங்கினேன். கட்டை வண்டிக்குப் போடும் "மசகு" போன்ற கருப்பு மையைக் காயிதத்தில் தடவினாற்போ லிருந்தது. அச்சுப் போடுவதில் ஒன்றிரண்டு பாரங்கள் பழுதாய் விட்டிருக்கும் என்று எண்ணினேன். இன்று கோவையில் தந்தி பாரங்கள் வாங்க நேர்ந்தது. என்ன ஆச்சரியம்! சென்னையில் வாங்கிய பாரங்களைவிட மிகவும் மோசமா யிருந்தன. ஒரு எழுத்துக் கூடக் கண்ணுக்குத் தெரியவில்லை. இவ்வளவு கேவலமான முறையில் அச்சுப் போட்டு விநியோகிப் பதைவிடச் சாதாரண வெள்ளைக் காயிதத்தில் தந்தி எழுதினால் அச்சுக்கூலி மிச்சமாகும். பொது மக்களின் பணமும் மிஞ்சும். தென்னிந்திய ரயில்வேயில் அவுட் ஏஜென்சிகளில் கொடுக்கும் டிக்கெட்டுகளின் பின்புறம் ஒரே மையா யிருக்கும். சிறிய எழுத்துக்களால் அட்டையில் அச்சிடுவதால் அவ்விதம் ஏற்படுகிறது. ஆனால் பெரிய காகிதத்தில் தந்தி பாரம் அச்சுப் போடுவதில் சர்க்கார் அதிகாரிகள் சிறிது கவனம் செலுத்தினால் எவ்வளவோ நலமாயிருக்கும்.

தியாகராயநகர்
22—4—50 என். ஆர். குரு

○●○

தவறு!

ஏப்ரல் 23-ந்தேதி இதழில், 'வட்ட மேஜை'ப் பகுதியில், 'மானிடக் கொடுமை' என்ற தலைப்பின் கீழ் ஸ்ரீமதி சாரதா என்பவரால் எழுதப்பட்ட கடிதத்தை நான் வாசித்தேன். மேற்கண்ட கடிதத்தில் கண்ட விவரங்கள் தப்பிதமாகச் சொல்லப் பட்டிருக்கின்றன. நான் ஸ்ரீவைகுண்டவாசி. நீண்ட காலமாய் ஸ்ரீவைகுண்டத்தில் வசித்து வருகின்றேன். கோட்டைப் பிள்ளைமார்களையும், அவர்களுடைய பண்பு, நாகரிகம், பரந்த நோக்கம், அரிய சேவை முதலியவைகளையும் நான் நன்கு அறிவேன். மேற்கண்ட வகுப்பினரின் பெண்கள், கோட்டையை விட்டு வெளியே வருவதில்லையென்பது உண்மை. கோஷா முறையை அனுஷ்டிப்பவர்கள். அதை மானிடக் கொடுமையெனக் கூறுவது அறியாமை.

தவிரவும் மேலே குறிப்பிட்ட கடிதத்தில் மேற்கண்ட கோட்டையின் வாசல் ஒன்று அடைபட்டிருப்பது குறித்துச் சொல்லப் பட்டிருக்கும் கதையும் ஆதாரமற்றது. அவ்விதம் யாதொன்றும் நிகழ்ந்ததில்லை. நன்கு விசாரிக்காமல் வீணான கதைகளைக் கற்பித்து, கௌரவமும் கண்ணியமும் வாய்ந்த வகுப்பினர்களைக் குறை கூறுவது மிகவும் வருந்தத் தக்கதாகும். கோட்டையின் தெற்கு வாசலும் வடக்கு வாசலும் பாதுகாப்புக்காகத்தான் அடைத்து வைக்கப் பட்டு வருகின்றன. அவ்வளவுதான்!

ஸ்ரீவைகுண்டம்
25—4—50 பி. கண்ணபிரான் பிள்ளை

வட்ட மேஜைப் பரிசுத் தொகை ரூ. 25ஐ 'கம்பர் மேடு' என்ற கடிதம் எழுதிய ஸ்ரீ 'சுதாமா'வுக்கும் 'நீதமா? நியாயமா?' என்ற கடிதம் எழுதிய ஸ்ரீமதி நா. சாவித்திரிக்கும் ரூ. 12-8-0 வீதம் பிரித்து வழங்கப்பட்டது.

ஓர் தியாகியே. எனக்கு இந்த உத்தியோகமும், பதவியும் தானே வந்தன. நானே தேடிக் கொண்டது கிடையாது. தியாகிகள் விஷயமாக அலைந்து அலைந்து 700 ரூபாய் என் சொந்தப் பணம் அழிந்தது. உள்ளமும், உடலும் உலர்ந்தன. திருச்சியில் நிலம் கொடுத்துத் திண்டாட வைத்தார்கள். அது ஆட்சேபணையில் ரத்தாயிற்று. தஞ்சை ஜில்லா கலெக்டர் திருச்சி வாசியாகிய எனக்கும், மற்றும் ஆறு நண்பர்களுக்கும் தஞ்சை ஜில்லா மன்னார்குடி தாலுகா, பேரையூர் வட்டத்தில் 5-ஏக்கர் நிலம் வீதம் வழங்கி இருக்கிறார்கள். பரிச்சயமில்லாத ஊர். அறிமுகமில்லாத மனிதர்கள். அடடா! தியாகிகளை அந்தக் கிராம அதிகாரிகள் அலைக்கழிப்பதைப் பார்த்தால் மனம் புண்படுகிறது. இந்தத் தொல்லைகளை எல்லாம் நீக்கி அவரவர் ஜில்லாவிலேயே நிலம் பார்த்துச் சர்க்கார் ஏன் கூப்பிட்டுக் கொடுக்கக் கூடாது என்று தோன்றுகிறது.

திருச்சிராப்பள்ளி
8—4—50

எஸ். ஆர். திருவேங்கடம்

○●○

★ நிறமா? குணமா?

“வட்ட மேஜை”ப் பகுதியில் வெளி வந்த ஜாதகம் பார்ப்பது கோத்திரம் பார்ப்பது முதலியவற்றைப் பற்றி எழுதியிருந்த கடிதங்களைப் படித்தேன். சிலர் தங்களுக்குப் பெண் பிடிக்கவில்லை யென்றால் ஜாதகத்தின் மேல் பழியைப் போட்டு ‘ஜாதகம் பொருந்தவில்லை’ என்று கூறுகிறார்கள் என்று எழுதியிருந்ததையும் படித்தேன்.

உலகத்திலேயே எல்லாவற்றிலும் சுமாராக உள்ளவர்கள்தான் அதிகம். அழகிலும் அப்படித்தான். ரொம்ப அழகுள்ளவர்களும் கொஞ்சம்தான்; அழகில்லாதவர்களும் கொஞ்சம்தான். சுமாராக உள்ளவர்களில் சிலர் கருப்பு நிறமாக இருக்கிறார்கள். சிலர் சிவப்பு நிறமாக இருக்கிறார்கள். சுமாராகவும் இருந்து, நல்ல கருப்பு நிறமாகவும் இருந்தால் கொஞ்சம் மட்டமாய்த்தான் தோன்றுகிறது. அதற்கு என்ன செய்வது? கருப்பு நிறமுள்ள அப்பா அம்மாவிற்குப் பிறந்தவர்கள் கருப்பு நிறமாகத்தானே இருப்பார்கள்? யாருக்குமே நல்ல சிவப்பு என்றால் முகம் சிறிது பிரகாசமடைவதையும், நல்ல கருப்பு நிறம் என்றால் முகம் சிறிது சுளித்துப் போவதையும் பார்க்கிறோம். காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு என்றால், மனிதர்களுக்கு அவர்கள் குழந்தைகள் வைரக் குஞ்சுகள். சில மகானுபாவர்கள் கன்னத்தில் அறைவது போல் ‘பெண் கருப்பு; பிடிக்கவில்லை’ என்று சொல்லிவிடுகிறார்கள். இந்தப் பதிலைக் கேட்கும் பெண்ணுக்கும் பெண்ணின் பெற்றோர்களுக்கும் சிறிது கோமாவது மனது சங்கடமடையத்தான் செய்கிறது. இதில் இன்னொரு வேடிக்கை! கருப்புப் பெண் வேண்டாம் என்று சொல்லுகிறார்களே, அவர்களாவது நல்ல நிறமாக இருப்பார்களோ என்று நினைக்க வேண்டாம். அவர்கள் அந்தக் கருப்புப் பெண்களை விட மோசமான நிறமாகவும் இருக்கலாம்.

இதனால் வாலிபர்கள் நிறத்தைக் கண்டு மோகிக்காமல், குணத்தையே கண்ணாகக் கொண்டு முன் வந்தால் எவ்வளவோ பெண்களுக்கும், அவர்களுடைய பெற்றோர்களுக்கும் ஆறுதலாக இருக்கும்.

புதுக்கோட்டை
24—4—50

நா. சாவித்திரி தேவி

○●○

என் விருப்பம்

சில காலமாக “வட்டமேஜையில்” வரும் வரதட்சிணைக் கொடுமையின் கடிதங்களும், கோள் என்ன செய்யும் என்பன போன்ற ஜாதகப் பரிசீலனையைப் பற்றிய கடிதங்களும் என் மனதில் ஓர் விறு விறுப்பைக் கொடுத்திருக்கின்றன. நான் ஓர் சங்கோஜிதான். இருந்தாலும் ஸ்ரீமதிகள் அலங்காரம், திலகவதி போன்றவர்களின் கடிதங்கள் யாரிடமும் ஆவேசத்தைப் புகுத்தக் கூடியவை. பழைய தமிழரின் ரத்தம் ஓடும் வீர மரபில் வந்த தமிழ்நாட்டு வாலிபர்கள், சமூகத்திற்கே கேடும் அவமானமும் விளைவிக்கும் இவ்வரதட்சிணைக் கொடுமையை முறிக்கவேண்டும். நான் ஒரு டிபுடி கண்ட்ரோலர் ஆப் மிலிடரி அக்கவுண்ட்ஸின் மூத்தபிள்ளை. எனக்கு வயது 26 ஆகிறது. என் வாழ்க்கையை நடத்துவதற்கு பூனாவிலேயே ரூ. 110 சம்பளம் வாங்குகிறேன். நான் ஓர் வீர வாலிபனாக விரும்புகிறேன். என் போன்ற மற்றவர்களும் கிளம்பினால் நம் நாட்டில் தாண்டவமாடும் வரதட்சிணைப்பேய் ஒழியும். எனக்குத் தங்களைப் போன்ற அபிப்பிராயம் தான் ஜாதகப் பொருத்தம் பற்றி உள்ளது. ஜாதகம் கேட்பது மூலம் தட்டிக் கழிப்பது கோழைத்தனம் என்றே நினைக்கிறேன்.

34, சாஸ்தாபேட்,
பூனா—2

வி. எஸ். ஈசுவரன்
23—4—50

○●○

ஆச்சரியம் இல்லை!

தங்கள் ‘கல்கி’ ஏப்ரல் 16உ இதழில் “அக்கப்போர்” என்ற தலையங்கத்தின் கீழ் ஞாயிற்றுக்கிழமை தபால் பட்டுவாடா செய்ய கவரின்மீது “எக்ஸ்பிரஸ் டெலிவரி” என்ற சிவப்பு லேபிளுடன் 2 அணா ஸ்டாம்பும் ஒட்டினால், இந்த ஞாயிற்றுக் கிழமை பட்டுவாடா செய்யப்பட வேண்டிய கடிதங்களை அடுத்த ஞாயிற்றுக்கிழமையாவது



★ கம்பர் மேடு

“கம்பர் மேடு” அரசாங்கத்தாரின் பெரு முயற்சியால் தமிழ் நாட்டு மக்களின் மனதைப் பெரிதும் கவர்ந்திருக்கிறது. கவிச் சக்கரவர்த்தி கம்பரின் பெயரை இவ்விதம் எல்லோர் நாவிலும் வழங்கச் செய்து விட்டார்கள். இந்த அரும்பணியாற்றியதில் புதை பொருள் இலாகாக்காரர்களுக்குப் பெரும் பங்கு உண்டு. கம்பர் மேட்டுக்குப் போக, தென்னிந்திய ரயில்வேயில் ‘மெயின் லயனி’லுள்ள தேரழுந்தூர் ஸ்டேஷனில் இறங்கவேண்டும்.

தேரழுந்தூரின் பெயரும் மாயவரத்துக்குப் பக்கத்திலுள்ள திருவழுந்தூரின் பெயரும் கிட்டத்தட்ட ஒரேமாதிரி ஒலிப்பதால் அடிக்கடி தவறுதல்களும், சந்தேகங்களும் ஏற்பட ஹேதுவாகிறது. ‘கம்பர் மேடு’ என்று தேரழுந்தூர் ஸ்டேஷனுக்குப் பெயரிட்டு விட்டால் அத்தகைய குழப்பத்துக்கு இடமில்லை யல்லவா? மேலும் கம்பர்மேடு என்று பெயரிடுவதால் அந்த ஸ்டேஷன் கவியின் அழியாத ஞாபகச்சின்னமாக விளங்கும். கம்பர்மேடு என்ற வார்த்தை சொல்வதற்கு எளிதாயும், கேட்பதற்கு இனிமையாகவும், மற்ற எந்த ஸ்டேஷன் பெயரைப் போலவும் ஒலித்துக் குழப்பம் விளைவிக்காமலும் இருக்கிறது. ஆகையால் தேரழுந்தூர் ஸ்டேஷன் என்ற பெயரைக் கம்பர் மேடு என்று மாற்றுவதினால் ஒரு சிரமமுமிராது என்று நினைக்கிறேன். ‘கம்பர் மேடு’ என்ற ஸ்டேஷனில் போர்டு எழுதுவதோடு, அந்தப் பலகையிலேயே, ‘தேரழுந்தூருக்கு இங்கே இறங்கவும்’ என்று சேர்த்து எழுதிவைக்கலாம். ஆதலால் தென்னிந்திய ரயில்வே அதிகாரிகள் இக்காரியத்தில் மனமுவந்து ஈடுபட்டுத் தேரழுந்தூர் ஸ்டேஷன் என்றிருப்பதைக் ‘கம்பர் மேடு’ என்று மாற்றினால் தமிழ் நாட்டின் கலைக்கே, என் தமிழ் நாட்டுக்கே, பெருந் தொண்டு செய்தவர்களாவார்கள்.

தியாகராயநகர்
24—4—50 ‘சுதாமா’

ஏன் பாடவில்லை?

பாரதியாரின் பாடல்கள் ஒரு தனி மனிதரின் ஏகபோக உரிமையாக இருந்த போது அதற்கு எவ்வளவு காரசாரமான விவாதங்கள், கண்டனங்கள் இருந்து வந்தன? அதைப் பொதுச் சொத்தாக்க வேண்டும், தேசத்தின் சொத்தாக்க வேண்டும் என்றெல்லாம் பேசி, எழுதி, விவாதித்துக் கிளர்ச்சி செய்தவர்கள் பலர். இப்பொழுது பாரதி பாடல்கள் தேசத்தின் பொதுச் சொத்தாகிவிட்டன. எல்லோரும் பாடலாம். ஏழை, பணக்காரன், படிக்கத்தெரிந்தவன், பாடத் தெரிந்தவன், தெரியாதவன் எல்லோரும் ஆனந்தமாகப் பாடலாம். ஆனால் நடப்பதென்ன? இதை நினைத்தால், ‘நெஞ்சு பொறுக்குதில்லையே, இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்’ என்று பாரதி நெஞ்சு பொருமிப் பாடியது முற்றிலும் உண்மையாகவே இருக்கிறது. நாடெங்கிலும் பாரதியின் பாடல்கள் முழக்கப்படுகின்றதா? இந்தக் கேள்விக்குப் பதில் ‘இல்லை’ என்றுதான் வருத்தத்துடன் அளிக்கவேண்டியிருக்கிறது. சங்கீதக் கச்சேரிக்குப் போனால் எவ்வளவோ பேர்களுடைய கீர்த்தனங்களை வித்வான்கள் பிரமாதமாகப் பாடுகிறார்கள். ஆனால் பாரதியாரின் பாடல்கள் பாடப்படுவதில்லை. அப்படிப் பாடினாலும், மங்களம் பாடுவதற்கு முன்னால் ஒரு பாட்டைத் துக்கடாவாகப் பாடிவிடுகிறார்கள். ஏன் பாடுவதில்லை பாரதி பாடல்களை? எவ்வளவோ அழகான, அர்த்தம் பொதிந்த, உணர்ச்சியைத் தூண்டும் பாடல்களைப் பாரதி இயற்றவில்லையா?

நான் சங்கீத வித்வான்களை வேண்டிக் கொள்கிறேன். பாரதியின் புகழை எட்டுத் திக்கிலும் பரப்புங்கள். இது நீங்கள் நாட்டிற்குச் செய்யும் தொண்டு. தமிழ்த் தாய்க்குச் செய்யும் தொண்டு. ரேடியோ நிர்வாகிகள் இதில் பெரிதும் ஒத்துழைக்க வேண்டும். அகில இந்திய ரேடியோ நிர்வாகிகள் இது விஷயத்தில் கவனம் செலுத்தி, பாரதியின் பாடல்களுக்குப் புத்துயிர் அளித்து, அதன் புகழ் என்றும் மங்காது நாட்டின் எல்லாத் திசைகளிலும் சென்று இன்பமாக ஒலித்துப் பரவ உதவி செய்யவேண்டும். பாரதியின் தீஞ்சுவை பொருந்திய பாடல்களைக் கேட்டு அனுபவிக்க என்னைப் போல் ஆயிரக் கணக்கான மக்களும் காத்திருக்கிறார்கள்.


மேட்டூர் அணை
26—4—50 பி. ப. பார்த்தசாரதி

○●○

கூப்பிட்டுக் கொடு!

நான் ஓர் ஹிந்தி ஆசிரியர்; ‘சாரதி’ பத்திராதிபன். திருச்சி ஜில்லா அரசியல் தியாகிகள் சங்கக் காரியதரிசி; அடியேனும்

கோடை நாடகங்கள்!



"என்ன ஸார்! கொஞ்சம் பத்திரிகையைக் கொடுக்கிறீர்களா?"
"இதோ தந்து விடுகிறேன்!"
"உஸ்ஸ்... ஸ்... ஸ்... என்ன வெய்யில்! ஒரே புழுக்கம். உஸ்ஸ். அப்பாடா!"
சூட்டுக்காரர்:- வெய்யில் தீயாகக் கொளுத்துகிறதே! வாருங்கள், சூடாக ஒரு கப் காப்பி சாப்பிடலாம்!
"ஸார்! தயவு செய்து என்னை 'கூலிங்' செக்ஷனிலே மாற்றி விடுங்கள். அடுப்புப் பக்கத்திலிருந்து வேலை செய்ய முடியவில்லை!"
இந்த வெய்யிலில் இவர்கள் இப்படி மாறினாலும் ஆச்சரியமில்லைதான்.
"என்னப்பா! பாலைக் காய்ச்சியே கொண்டு வந்தாயா? ஒரே சூடாயிருக்கிறதே!"
"குழாய்த் தண்ணீர் சுடுகிறதே. அம்மா! நான் என்ன செய்யட்டும்?"
இளநீர்:- பாரேன்! இனிமேல் எனக்கு ஒரே கிராக்கிதான். ஒரு ரூபாய் கொடுத்தும் வாங்குவார்கள்.
விசிறி:- அட! என்னைக் கூடத்தான் பிளாக் மார்க்கெட்டிலே விற்பார்கள்!



லைப்பாயினால் அடிக்கடி கழுவுங்கள்

லைப்பாய் சோப்

அழுக்கிலிருக்கும்
கிருமிகளிலிருந்து
உங்களைக்காப்பாற்றுகிறது!



L. 140-50 TM.

எல்லோருக்கும் படிப்பு

ஸ்ரீபாத சங்கர்

எழுதப் படிக்கத் தெரியாத ஜனங்கள் ஏராளமாக இருந்து வரும் எந்த நாட்டையும் நாகரிகமான நாடாகவோ, முன்னேற்றமுள்ள நாடாகவோ யாரும் கருத மாட்டார்கள்; மதிக்கவும் மாட்டார்கள்.

உடம்பு வளர்ச்சிக்கு எப்படி உணவு தேவையோ, அதேபோல் அறிவு வளர்ச்சிக்குக் கல்வி மிகவும் முக்கியமானது.

நாட்டில் கல்வி பரவினால்தான், ஒழுக்கமுள்ள நல்ல சமுதாயத்தை ஸ்தாபிக்க முடியும். மேல் நாடுகளில் ஜனங்கள் நெருக்கடியான காலங்களில் எல்லாம் சர்க்காரை ஆதரிக்கிறார்கள் என்றால் அதற்கு மூல காரணம் ஜனங்களிடையே கல்வி பரவி இருப்பதுதான்.

நம் மாகாணத்தில் பள்ளிக்குப்போகும் வயதுள்ள எழுபது லட்சம் குழந்தைகளில் முப்பத்துமூன்று லட்சம்பேர்கள் மட்டுமே பள்ளிக்குப் போகிறார்கள். இவர்களுக்கு மட்டும் பதினொரு கோடி ரூபாய் செலவாகிறது. மற்ற முப்பத்தேழு கோடி சிறுவர் சிறுமியர்களுக்கு எழுதப் படிக்க வசதி செய்ய இன்னும் பன்னிரண்டு கோடி ரூபாயும் ஒரு லட்சம் ஆசிரியர்களும் தேவை.

ஒரு நாளைக்கு ஒரு வேளைப் பள்ளிக்கூட முறையைக் கையாண்டாலொழிய, வேறு எந்த விதத்திலும் இதைச் சரிக்கட்ட முடியாது. லட்சக்கணக்கான சிறு குழந்தைகளுக்கு எழுதப் படிக்க வசதி செய்து கொடுக்காமல் அவர்களை வீணாகக் காலம் கழிக்க விட்டு வருவது நம் குடியரசு ஆட்சிக்கே அவமானமாகும்.

சிறு வயதில் கல்வி போதிப்பதைவிட சிறந்த காரியம் வேறு ஒன்றுமில்லை. ஆகையால், நமது நாட்டின் எதிர்காலத்தை உத்தேசித்தாவது ஒரு வேளைப் பள்ளிக்கூடத் திட்டத்தை இந்த வருஷம் ஜூன் மாதத்திலிருந்தே ஆரம்பித்தால் லட்சக்கணக்கான குழந்தைகள் படிப்பதற்கு வேண்டிய வசதி ஏற்படும். இதைச் செய்வதில் சிரமம் ஒன்றுமே இல்லை. ஆனால் சர்க்கார் இந்தத் திட்டம் சரியானதாகக் கருதாமல் "இது அவ்வளவு எளிதல்ல. வெறும் புள்ளிகளை மட்டும் வைத்துக்கொண்டே எல்லாப் பிரச்னைகளையும் தீர்த்துவிட முடியாது. பத்து வருஷங்களுக்கு முன்பே இதை யோசித்து சில விதிகள் செய்யப்பட்டன. உள்ளதை சரிவர நடத்தினால் போதும், பள்ளிக்கூட நேரத்தையும், நாட்களையும் பாதியாக்கி விடுவதின் மூலம் இரு மடங்கு எண்ணிக்கையானவர்களுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுத்துவிடக்கூடும் என்று நினைப்பவர்கள் உண்மையான விவரங்களை உணராதவர்களே. பூரா விஷயமும் தெரியாத சீர்திருத்தக்காரர்கள் கூறும் இந்த எளிய வழியால் பள்ளிக்கூடப் பிரச்னை தீர்ந்துவிடக்கூடிய காரிய மன்று" என்றெல்லாம் சர்க்கார் "சென்னைச் செய்தி" என்ற தங்கள் பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார்கள்.

லட்சக்கணக்கான குழந்தைகள் எழுதப் படிக்க வசதி இல்லாமல் அவதிப்படுவது பற்றி இவர்களுக்குக் கவலை இல்லையா? வேறு என்ன ஏற்பாடுதான் இவர்களால் செய்யமுடியும்? தயவுசெய்து ஒரு மூன்று வருஷங்களுக்காவது ஒரு வேளைப் பள்ளிக்கூடத் திட்டத்தை நடத்திப் பார்க்கட்டுமே. இதனால் யாருக்கும் எந்தவித நஷ்டமோ, கஷ்டமோ, பணச் செலவோ ஒன்றுமே இல்லையே.

குழந்தைகளும் ஒரு வேளைப் பள்ளிக்கூடம் என்றால் உற்சாகத்துடன் படிப்பார்கள், அல்லவா? இவர்களுக்கு ஒரு நாளைக்கு இரண்டரை மணி நேரத்துக்கு மேல் படிப்பதற்குத்தான் என்ன இருக்கிறது? இப்பொழுது குழந்தைகள் சுமந்து கொண்டு போகும் புஸ்தகக் கட்டுகளைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. எதற்காக ஒரு நாள் பூராவும் குழந்தைகளை வகுப்பு அறைகளில் அடைத்துத் துன்பப் படுத்தவேண்டும்? இது குழந்தைகளின் தேக வளர்ச்சிக்கும் மனோ வளர்ச்சிக்கும் கேடு விளைவிக்கிறது.

சிறுவர் சிறுமிகளுக்குப் படிப்பும் ஒரு விளையாட்டாகவே இருக்கவேண்டும். பள்ளிக்கூடம் போகவேண்டுமென்ற பயமோ, வருத்தமோ ஏற்படாமல் இருக்க வேண்டும். பள்ளிக்கூடம் போக அவர்கள் ஆசைப்படவேண்டும்.

இவைகளை எல்லாம் உத்தேசித்து அன்னிய ஆட்சியின் கீழ் நடந்துவந்த பழைய விதிகளையும் முறைகளையும் பின்பற்றாமல் எல்லோருக்கும் படிப்புக் கற்றுக்கொள்ள வசதி அளிக்கும் ஒரு வேளைப் பள்ளிக்கூடத் திட்டத்தை நடத்த முன் வருவது சர்க்கார் நாட்டுக்குச் செய்யும் நல்ல காரியமாகும். லட்சக்கணக்கான சிறுவர்களுக்குச் செய்யும் கல்வி தானமாகும்.

பது போல், நடந்து தண்ணீர் இறைத்தன. அடிக்கடி மாது அவைகளை நிற்கச் செய்து அருகில் சென்று முதுகில் தட்டிக் கொடுத்தான். இந்தப் பாராட்டுதலைப் பெற்ற நரிகள் இன்னும் உற்சாகமாக வேலை செய்தன. ஒரு வாளிக்குப் பிறகு இன்னொரு வாளி என்று தண்ணீர் இறைக்கப்படுவதைக் கண்ட மாதுவின் உற்சாகம் அளவு கடந்து போய் கைகொட்டிக் குழந்தையைப்போல் ஆர்ப்பரித்தான். அவன் உற்சாகத்தைக் கண்டு தாமும் மனமார ஆமோதிப்பன போல், நரிகளும் வேகமாக தங்கள் அடர்த்தியான வால்களை ஆட்டித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தன.


முத்தண்ணாதான் அந்த நரிக் கூட்டத்தில் ரொம்பவும் பிரதான்யம் வகித்தது. எனினும் முத்தண்ணாவுக்கு இந்தமாதிரி காரியங்கள்செய்வதில் அவ்வளவு உற்சாகம் கிடையாது. பொதுவாகவே, சோம்பேறித்தனம் அதற்கு அதிகம். ஆனால், மாதுபோன்ற சினேகிதனுக்கு உதவ வேண்டியது தன் கடமை என்ற உணர்ச்சியோடுதான் வேலை செய்தது. அவசரக் குடுக்கைபோன்ற நரிகள், மிகவும் உற்சாகமாக வேலை செய்தன. அந்த வேலைக்குக் கூலியாகப் பக்கத்துக் கொல்லையிலிருந்து, அதாவது ராமன் கொல்லையிலிருந்து வேர்க்கடலைக் கொத்துகளைப் பிடுங்கி எறிந்தான். நரிகள் கடலையைத் தின்பதில் நேரங் கழித்தால், உடனே அவற்றின் காதுகளைத் திருகி வேலைக்கு இழுத்து வந்து விடுவான்.

பிச்சை முத்துவும் ராமனும் ஒருவரையொருவர் பயத்துடன் பார்த்துக் கொண்டனர். இந்த நரிக் கூட்டத்துக்குப் பதிலாக ஒரு தேவதைகளின் கூட்டம் வந்திருந்தால் கூட இவ்வளவு அவர்கள் பயந்திருக்க மாட்டார்கள். ஆனால் இந்த நரிகள், வயல்களுக்குத் தண்ணீர் இறைக்கும் காட்சியைப் பார்க்கப் பார்க்க அவர்களுக்கு அதிசயம் தாங்காமல் கல்லாய்ச் சமைந்து விட்டார்கள். இத்தனை நாழிகையும் தன்னையே மறந்திருந்த ராமன் வெகு தாராளமாகத் தன் கொல்லையிலிருந்து மாது கடலையைப் போட்ட காட்சியைப் பார்த்ததும், அதை ஆட்சேபிக்கும் முறையில் ஒரு பெரு மூச்சு விடப் பார்த்தான். அதையும் பிச்சை முத்துத் தன் துண்டைப் போர்த்தி மூடி மூச்சு வெளி வராமல் அடைத்து விட்டான். இப்படி மூச்சு விடவும், இருமவும் முடியாமல் மரத்தின் மறைவில் இவர்கள் உட்கார்ந்திருக்க, நரிகள் ஒரு விதப் பிரதி பிரயோஜனமும் எதிர்பாராமல், தங்கள் இனம் தலைவர் மாதுவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, சந்திரன் மறைந்த பிறகும் உற்சாகமாக வேலை செய்தன.

காலை வேளை நெருங்கியதும் மாது, அவைகளை அவிழ்த்து விட்டான். அவை உற்சாகமாகத் துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடின. மாதுவும் அவற்றைப் போலவே வயல்களையும் வரப்புகளையும்தாண்டிக் குதித்துக் கொண்டு ஓடினான்.

ராமனும், பிச்சை முத்துவும் 'அப்பாடா!' என்ற நீண்ட பெருமூச்சு விட்டு எழுந்திருந்து, தங்கள் குடிசையை நோக்கி வேகமாக நடந்தார்கள். (தொடரும்)

எந்த மடையனோ?



அப்படிச் சொல்லிக் கொள்ள முடியுமா? அவன் மட்டும் கடவுளின் செல்லப் பிள்ளையாகிவிடுவதற்கு என்ன உரிமையிருக்கிறது? பார்க்கப்போனால், பிச்சை முத்து ஒன்றும் பெரிய பக்தன் அல்ல. சிறு வயதில் நாட்டாண்மைக்காரனையும் கொஞ்சமும் பயமின்றிக் கோவில் சொத்தெல்லாம் திருடியது ஞாபகத்துக்கு வந்தது. ஆம், திருவிழாவுக்காக ஜனங்களிடம் திரட்டிய பணத்தைச் சொந்தச் செலவு செய்து விட்டுப் பொய்க் கணக்குக் காட்டியிருக்கிறான். இதையெல்லாம் பற்றித் தனக்குள் நினைத்தபோது அவனுக்குத் திடுக்கிட்டது! அவனுடைய நம்பிக்கைத் துரோகங்கள் எல்லாம் அந்தத் தெய்வங்களுக்குத் தெரியாது; அதனால்தான் அவன்மேல் இப்படி தனியான அன்பு கொண்டிருக்கின்றன என்று அவனால்தான் நம்ப முடியுமா?

ஆகவே, இதன் உண்மையை எப்படியாகிலும் அறிய வேண்டும் என்ற ஆவல் அவன் உள்ளத்தைப் பற்றியது. அன்றிரவே, உண்மையைக் கண்டு பிடித்து விடுவது என்று திட்டமிட்டு விட்டான்.

நள்ளிரவானதும், துண்டை எடுத்துப் போர்த்திக் கொண்டு, அடிமேல் அடி வைத்துச் சத்தப் படுத்தாமல் குடிசையை விட்டுவெளியேறினான். அவன் மனைவி நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். அதனால் பிச்சைமுத்துவுக்கு அவளை எழுப்ப மனமில்லை. முதலில் தன்னந் தனியாக நடந்து போகத்தான் தீர்மானித்திருந்தான். ஆனால் குடிசைக்கு வெளியே நாலு அடி எடுத்து வைத்ததும் அவனை ஏதோ ஒரு பயம் பற்றிக் கொண்டது. உடனே திரும்பி வந்து தன் பக்கத்து வீட்டுக்காரன் ராமன் குடிசை வாசலில் நின்றான். ராமன் வெறும் தரையில் படுத்துத் தூங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தான். அவன் அருகில் சென்று விரல்களினால் மெல்லத் தட்டினான்.

ராமன் விழித்துக் கொண்டதும், "என் கூட வா! ஏன், எதற்கு என்று கேட்காதே!" என்று கூறினான்.

ராமனும் ஒரு வார்த்தை கூடக் கேட்காமல் பின் தொடர்ந்தான். சீக்கிரத்திலேயே வயல்காட்டுக்குப் போய் விட்டார்கள். நிலவொளி அப்போது மங்கலாக இருந்தது. சீக்கிரம் நிலவும் மறைந்து விடும் என்பதும் அவர்களுக்குத் தெரியும். சாதாரணமாக அவர்களுக்கு இருளைக் கண்டு பயம் கிடையாது. அப்படி இருளைக் கண்டு பயந்தால் முடியுமா? அவர்கள் எத்தனையோ இரவுகள் வீட்டுக்குப் போகாமல், வயல் காட்டிலேயே இருந்திருக்கிறார்களே! ஆனால் இன்று ராமன், ராமனாக இருக்கவில்லை; பிச்சை முத்து, பிச்சை முத்துவாக இருக்கவில்லை. அதனால் அவர்களுக்குச் சற்று இன்றிரவு பயமாக இருந்தது.

அங்கே ஒரு மரம் இருந்தது. அந்த மரத்து நிழலில் ஒளிந்து கொண்டார்கள். அவர்கள் இருவர் கையிலும் இரண்டு கம்புகள் இருந்தன. அந்தக் கம்புகள் உபயோகப் படுத்தவேண்டிய சந்தர்ப்பம் வந்தால், தவறாமல் உபயோகப்படுத்த சர்வ ஜாக்கிரதையாக உட்கார்ந்திருந்தனர். சந்திரனின் வானநிலையிலிருந்து பாதிராத்திரி கழிந்து ஒரு மணி ஆகியிருக்கும் என்று நேரம் கணித்தார்கள்.

திடீர் என்று எங்கிருந்தோ ஒரு சிறுவன் வயலில் தோன்றினான். அவன் மாதுதான் என்பதை உடனே கண்டுபிடித்து விட்டார்கள். ராமன், "இந்தப் பயலுக்கு ராத்திரி—பகல் என்ற வித்தியாசமே கிடையாது போலிருக்கிறது. எப்போதும் திரிந்து கொண்டே யிருக்கிறான்" என்று முணு முணுத்தான்.

"உஸ்! சத்தம் போடாதே! அவன் சீக்கிரம் போய்விடுவான்" என்று பதில் கூறினான் பிச்சைமுத்து.

ஆனால் அவனோ போகவில்லை! அதற்கு மாறாக, கிணற்றடிக்குப் போய் ஏதோ செய்தான். அதைப் பார்த்த அவர்கள் திடுக்கிட்டார்கள். ஆம், அங்கே நின்ற மாது நரிகளைப் போலவே ஊளையிட்டான்! மாதுவை அவர்கள் பார்க்காதிருந்தால் நிஜமாகவே நரிதான் ஊளையிடுகிறது என்று எண்ணியிருப்பார்கள்.

ஊ! ஊ! ஊ! ஊ! என்ற அவன் குரல் எழும்பியதும், உடனே வேட்டைக்கு அழைக்கப்பட்ட நாய்கள்போல், நரிகள் எல்லாத் திசைகளிலிருந்தும் துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடிவந்தன. இதைப் பார்த்த பிச்சை முத்துவும் ராமனும் ஒரே ஆச்சர்யத்தில் மூழ்கி விட்டனர்.

ஒன்று, இரண்டு, மூன்று என்று ஒரே அதிசயத்துடன் இருபதுவரை எண்ணினார்கள். பிறகு மாதவன் ஏதோ கட்டளையிடுவது போல் கூவினான். அந்தச் சத்தத்தைக் கேட்டதும், நுகத்தடி மாட்டிக் கொள்வதற்குத் தயாராக நிற்கும் எருதுகளைப்போல் இரண்டு வரிசைகளாக அந்த நரிகள் நின்றன. அவைகளின் மேல் கிணற்றில் தண்ணீர் இறைப்பதற்காகக் கட்டி வைக்கப்பட்டிருந்த கயிற்றைத் தூக்கி எறிந்தான். அதை அவைகள் தம் பற்களிடையே கவ்விக் கொண்டு, கவலை மாடுகள், முன்னும் பின்னும் கடப்

"என் வயலைப் பார்த்தாயா?" என்று ஆவலுடன் கேட்டான் பிச்சைமுத்து. இந்த அதிசயம் எப்படி நேர்ந்தது என்பது அவன் விளக்கக் கூடுமா என்ற எண்ணத்தில் கேட்டான்.



"நான் எதற்காகப் பார்க்க வேண்டும்? எனக்கு என்ன வந்தது? ஆனால் நேற்று நானும் என் பெண்சாதியும் உன் வயல் விஷயமாகப் பேசிக் கொண்டிருந்தோம். சரியாக ஒரு வருஷம் பாடுபட்டால்தான், உன் வயல் பழைய நிலைமைக்கு வரும். ஆமாம்; என்ன பண்ணுகிறது? பாவமாகத்தான் இருக்கு உன்னைப் பார்க்கும்போது!" என்று ராமன் ரொம்பவும் பரிதாபப்பட்டான்.

'இவனைப் போய் நம் வயலுக்குத் தண்ணீர் விட்டிருப்பான் என்று நினைத்தோமே! எவ்வளவு பெரிய தவறு!' என்று பிச்சைமுத்து நினைத்துக் கொண்டே, "சே, அதைப் பற்றிச் சொல்லவில்லை, அப்பா! ஒருமாசத்துக்கு மேலே நாங்க யாரும் வயலுக்குப் போகவில்லை. நாங்களும் நாற்று எல்லாம் காய்ந்து கருகியிருக்கும் என்றுதான் நினைத்தோம். ஆனால் வயலைப் போய்ப் பார்த்தால் தண்ணீர் தேங்கி ஒரே ஈரமாக இருக்கிறது. என் வயலில் மட்டும், நாள் விடாமல் மழை பெய்து வந்திருக்கிறாப் போல்தான் தோன்றுகிறது. தவிர வேறு எந்த விதமாகவும் இதற்குக் காரணம் சொல்லத் தெரியவில்லை. வேண்டுமானால் நீயே வந்து பாரேன்" என்று கூறி, உற்சாகமாக ராமன் கையைப் பிடித்து இழுத்துச் சென்றான். ராமன் பிச்சைமுத்துவின் வயல்களைப் பார்த்து அப்படியே பிரமித்து நின்றான்.

"தெய்வம்தான் தனியான முறையில் என்மீது கருணை காட்டுவதாகச் சொல்ல வேண்டும். வேறு எந்த விதத்திலும் இதை விளக்க முடியாது!" என்று கூறி முடித்தான் பிச்சை முத்து.

* * *

இந்தச் செய்தி கிராமம் முழுதும் பரவியது. பிச்சை முத்துவுக்குக் கஷ்டகாலத்தில் கிடைத்த உதவி அவர்களுக்கும் கஷ்டம் ஏற்படும்போது கிடைக்கும் என்று நிச்சயமாக நம்பினார்கள். ஆகவே, முதல் தேவை ஜுரம்தான். ஜுரம் வந்து விட்டால், தங்கள் வயல்களை, தங்களை விட நல்ல முறையில் ஏதோ கண்ணுக்குப் புலனாகாத சக்தி பார்த்துக் கொள்ளும் என்று நம்பினார்கள். இன்னும் சிலர், இந்தமாதிரி அதிசயங்கள் ஏற்கெனவே நிகழ்ந்திருக்கின்றன என்று கூறினார்கள். கிராமத்துப் பெரியோர்கள் இதில் அதிசயப் படுவதற்கு ஒன்றுமேயில்லை என்றும், இப்படி அதிசயப்படுவது ஜனங்களுக்கு தெய்வ பக்தியும், தெய்வ நம்பிக்கையும் குறைந்து வருவதைத்தான் காட்டுகிறது என்றும், பேசிக் கொண்டார்கள். அதனாலேயே இத்தகைய அதிசய நிகழ்ச்சிகள் வர வர ரொம்பவும் குறைந்து அபூர்வமாகி வருகிறது என்றும் கோபமாகப் பேசிக் கொண்டார்கள்.

7. மாதுவும் நரிகளும்

பிச்சைமுத்து ஊர் ஜனங்களிடம் வேண்டுமானால் 'கடவுளின் அருமந்தப் பிள்ளை'தான் ஒருவனே என்று பெருமையாகப் பேசிக் கொள்ளலாம். ஆனால் தனியாக இருக்கும்போது தனக்குத்தானே

இந்த வருடம் அழிந்தோம், தொலைந்தோம் என்று எண்ணி முடிவு கட்டி வருந்திக் கொண்டிருந்தபோது இப்படி நிலத்துக்குத் தண்ணீர் பாய்ச்சுவது என்றால், அது எவ்வளவு பெரிய உதவி! அதை யார் செய்திருக்கக் கூடும்? ஒரு வேளை கிராம தேவதைகள் செய்திருக்குமோ?

இந்த அதிசயச் செய்தியைத் தன் கணவனிடம் அந்த நிமிஷமே சொல்ல வேண்டும் என்று அவளுக்கு ஆவல் உண்டாகிவிட்டது. நிஜமாக மலையாத்தாள் வீட்டுக்கு ஓடு ஓடு என்று ஓடினாள்.

இந்தச் செய்தி அவனுடம்பில் ஔஷதம் போல் வேலை செய்யும்; அவன் தேகஸ்திதியும் மன நிலையும் பழையபடி ஆகிவிடும் என்று எண்ணினாள். கட் புலனுக்கெட்டாத ஒரு சக்தி தனக்கு உதவியிருக்கிறது என்ற எண்ணமே அவனுக்கு நிச்சயம் ஒரு புது பலம் அளிக்கும் அல்லவா?

6. தெய்வச் செயலா?

மலையாத்தாள் வந்து இந்த அதிசயச் செய்தியைச் சொன்னதும் "நான்தான் அப்பவே சொன்னேனே!" என்று சொல்பவன் போல் பார்த்தான். வாஸ்தவத்தில், இந்தச் செய்தியைக் கேட்டதும், அவன் உள்ளத்தில் உண்டான உணர்ச்சி இதுதான்: நான் தெய்வ பக்தியோடு பூசையெல்லாம் செய்தேன், அதில் சந்தோஷப்பட்டு, தெய்வங்கள் எனக்கு இந்த உதவி செய்திருக்கின்றன.

இவ்விதம் நினைத்த கொஞ்ச நாழிகைக்கெல்லாம் 'இது என்ன பிதற்றல்?' என்று எண்ண ஆரம்பித்து விட்டான். அடுத்த வீட்டுக்காரன் ராமனையும், கருமான் கப்பனையும் விட இவன் எந்த விதத்தில் உயர்வு? அவர்கள் இரண்டு பேரும் இரண்டு வருஷத்துக்கு முன் பதினைந்து நாள் காய்ச்சலாகக் கிடந்ததில், ஒன்றுமில்லாமல் அழிந்து நிர்மூலமாகி விடவில்லையா? ஏன், அவர்களும் கோவிலுக்குப் போய் எவ்வளவு பூஜை பண்ணினார்கள்! ஏன், பிச்சை முத்துவைவிட அதிகமாகவே கோவிலுக்குப் போய் வந்திருக்கிறார்கள். பின் இவன் மட்டும் அவர்களைவிட எப்படி 'உசத்தி' ஆகிவிடுவான்?


பிச்சைமுத்து தானே போய் வயலைப் பார்க்க வேண்டும் என்ற விருப்பத்தை வெளியிட்டான். ஆனால் அவன் மனைவி, தலைக்குத் தண்ணீர் விடுவதற்கு முன் வீட்டை விட்டு வெளியே போகக் கூடாது என்று கண்டிப்பாகத் தடுத்து விட்டாள். அவனும் அதற்குக் கட்டுப்பட வேண்டியிருந்தது.

கடைசியில், தலைக்குத் தண்ணீர் விட்ட பிறகு போய்ப் பார்த்தான்; அவனுக்கு உண்டான அதிசயம் சொல்லி முடியாது.

முதல்நாள் இராத்திரி கூட யாரோ தண்ணீர் இறைத்திருக்கிறார்கள் என்பதை ரொம்பவும் அதிசயத்துடன் பார்த்தான்! ஆம், மாதக் கணக்காக மழையே பெய்யவில்லை. அப்படியிருந்தும் தன் வயலில் மட்டும் ஈரம்!

கடவுள்தான் இவ்விதம் தன்னை மட்டும் காப்பாற்றுகிறார் என்று நினைத்துக் கொண்டான். அவனுக்கு ரொம்பவும் பெருமையாக இருந்தது. கூடவே இது யார் வேலையாக இருக்கும் என்று யோசித்துப் பார்த்தான்; 'பக்கத்து வீட்டு ராமன் என்னுடைய நிலைமையைக் கண்டு பரிதாபப்பட்டு இவ்விதம் தண்ணீர் இறைத்து வருகிறானோ? இந்த விஷயத்தை அம்மை போட்டிருக்கிற வீட்டில் நுழையக் கூடாது என்பதற்காக வந்து சொல்லாமல் இருந்திருக்கிறானோ? ஒரு வேளை கோவிந்தனாக இருக்குமோ? அவனுக்கு ஒழியவே இல்லைதான். இருந்தாலும், பாதி ராத்திரியில் ஓடி வந்து தண்ணீர் இறைத்து விட்டுப் போகிறானோ? அல்லது இந்தக் கிராமத்தார்களில் யாராவது இருக்குமோ? அவர்கள் எல்லாம் இப்படி உதவும் அளவுக்கு நான்தான் அவர்களுக்கு அப்படி என்ன செய்துவிட்டேன்?'

இப்படியெல்லாம் எண்ணிக் கொண்டு திரும்பிப் போகும்போது, வழியில் ராமன் அம்பலக்காரனைப் பார்த்தான்.



மேல் ஆகிறதல்லவா வயல்பக்கம் போய்? இருந்தாலும், நான் நல்லவன் என்பதும் இந்த ஊர் தெய்வங்களும் என்மேல் கருணை கொண்டிருப்பதும் வாஸ்தவம் என்றால் என் நிலம் அழியாமல் இருக்கும். அதைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அந்தத் தேவதைகளுடையது. ஆனால் அந்தத் தெய்வங்கள் என்ன செய்கின்றனவோ என்ற கவலையாக இருக்கிறது. அதனால்தான் உன்னை இப்போதே போய்ப் பார்த்து விட்டு வரச் சொல்லுகிறேன்'' என்றான் பிச்சைமுத்து.

மலையாத்தாள் அவன் மனம் கசந்து கூறிய மேற்கண்ட வார்த்தைகளைப் பொறுமையுடன் கேட்டாள். அவன் மரண தேவதை வாய்க்குள் நுழைந்து விட்டுத்தான் பிழைத்திருந்தான். அவ்வளவு கடுமையாக இருந்தது நோய். அவன் அவ்வளவு மட்டுமாவது பிழைத்தானே என்ற திருப்தி மலையாத்தாளுக்கு. அவன் பிழைத்துப் பழையபடி நடக்கக் கொள்ள ஆரம்பித்து விட்டானானால், இந்த அழிந்து போன பயிர்களுக்கெல்லாம் இரண்டு நாளில் உயிர் ஊட்டி விடுவான் என்று மலையாத்தாள் நிடநம்பிக்கை கொண்டிருந்தாள். ஆம்; தன் கணவனின் சக்தியிலும் செல்வாக்கிலும் அவ்வளவு திட நம்பிக்கை மலையாத்தாளுக்கு. ஆனால் அவனாலும் சாதிக்க முடியாத சில காரியங்கள் இருக்கத்தான் செய்தன.

இப்படி அவன் சிந்தனையில் ஆழ்ந்து மோனத்திலிருந்ததைப் பொறுக்க முடியாமல், '' போய் முதலில் கழனியைப் பார்த்து விட்டு வருகிறாயா, இல்லையா? நீ போகவில்லையென்றால் நானே ஓடிப் போய் பார்த்து விட்டு வருகிறேன். அதற்கு வேண்டிய தெம்பு எனக்கு வந்து விட்டது!'' என்று இரைந்தான்.

மலையாத்தாள் அவன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து வெளியே ஒற்றையடிப் பாதை வழியாக நடந்து போனாள். அவர்களுடைய கடலைக் கொல்லை சுமார் இரண்டு மைல் தூரத்திலிருந்தது. 'பவுன் காய்ச்சிக் கொல்லை' என்று அது பிரசித்தமடைந்திருந்தது. ஆனால் அவளுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து அந்த வயல் வரகும் நிலக்கடலையும் கொடுத்து வந்ததே தவிரப் பவுனைக் கொடுத்ததில்லை. கிடைத்த கடலையும் வரகும், வெள்ளியோ பவுனோ வாங்கும் அளவுக்கு அபரிமிதமாகவும் இருக்கவில்லை. மேலும் பிச்சைமுத்து கிராமத்து நாட்டாண்மைக்காரன்தான் என்றாலும், கடன்காரர் தொல்லை அவனுக்கும் இருக்கத்தான் செய்தது. அவன் நிலமும், எல்லாருடைய நிலத்தைப் போலவே மகசூல் சமயத்தில் பெரிய சாக்குகளைக் கொண்டு வந்து விளைந்ததை யெல்லாம் எடுத்துச் செல்லும் கடன்காரர்களுக்கு அடகு வைக்கப்பட்டிருந்தது.

* * *

அவள் வயலை அடைந்த போது நன்றாகப் பொழுது விடிந்து விட்டது. அங்கே அவள் கண்ட காட்சி ஆனந்தத்தினால் அவளைத் தூக்கி வாரிப்போட்டது. அவளால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. காய்ந்து பாளம் பாளமாக விரிந்து கிடக்கும் என்று எதிர்பார்த்த வயல்கள் ஈரமாக இருந்தன; பயிர்கள் அவளைக் கண்டு முறுவலித்தன; கண் சிமிட்டிக் கெஞ்சின. வயல்களுக்கு நடுவே இருந்த கிணற்றுக்குப் போனாள். அங்கே யிருந்த மரச்சாலை யாரோ தினமும் உபயோகப் படுத்தி யிருப்பதாகத் தெரிந்தது. ஏன், நேற்றிரவு கூட யாரோ அதில் தண்ணீர் இழுத்து இறைத்திருக்க வேண்டும் என்று சந்தேகமறத் தெரிந்தது. இந்தப் பேருதவி யார் செய்திருக்கக் கூடும்? ஒரு வேளை தலையாரி கோவிந்தனாக இருக்குமோ...? இருக்காது. அவனாக இருக்க முடியாது. ஏனெனில் அவன் பக்கத்துக் கிராமத்தில் குடியிருந்தான். அவனுடைய தொல்லைகளே, அவனுக்குத் தலைக்குமேல் இருந்தன. அப்படியானால் இந்த உதவி யார் செய்திருக்கக் கூடும்? பலன் எதிர்பார்க்காமல், ஒரு நன்றி வார்த்தையும் விரும்பாமல் மௌனமாக இந்தப் பேருதவி இத்தனை நாளும் யார் செய்து வந்திருக்கிறார்கள்? அதுவும் பிச்சை முத்துவும், மலையாத்தாளும்! நாம்



நரிக்காட்டு ராஜா



எஸ். கோபாலன்

மொழிபெயர்ப்பு: எஸ்.வி.எஸ்

பிச்சைமுத்து, தன் கண் முன் தன் உருவமே தோன்றியதும் திடுக்கிட்டான். அதை வேறு சக்திகள் அழிப்பதைப் பார்த்தான்!

அதாவது அறுவடை காலத்துக் காட்சி அவன் கண்முன் வருகிறது. அவன் தன்னுடைய வயலில் நின்று கொண்டிருக்கிறான். அவனைச் சுற்றி எல்லா வயல்களிலும் செழிப்பாகப் பயிர்கள் வளர்ந்திருக்கின்றன. இதைப் பார்த்ததும் அவன் உள்ளத்தில் பொறாமைக்கனல் கொழுந்து விட்டெரிகிறது. இவனோ வீட்டுக்கு வெறும் கையுடன் திரும்புகிறான்; ஊரில் மற்றவர்கள் நல்ல அறுவடையுடன் திரும்புகிறார்கள். பிறகு ... அவன் ஏழையாகி விட்டான்; மிராசுதார் பணத்துக்குத் தொந்தரவு செய்கிறார்; பணம் கொடுக்க முடியாமல் போகிறது. கடைசியில் அவனைத் தன் நிலத்தை உழவேண்டாம் என்று தள்ளி விடுகிறார். பிச்சைமுத்து தொழிலையும் இழந்து விட்டு நிற்கிறான்.

இந்தப் பயங்கரக் காட்சிகள் எல்லாம் நினைவுக்கு வந்தவுடனே தலையை வேகமாக ஆட்டி "முடியாது; முடியாது!" என்று இரைந்தான். அவனால் இந்த எண்ணங்கள் தாங்கக் கூடியதாக இருக்கவில்லை. "இப்படி ஒருநாளும் நேராது. ஜமீன்தார் என்னை நிலத்தை விட்டு விரட்ட முடியாது! சட்டம் ஜமீன்தாரை அவ்விதம் செய்ய இடம் தராது!" என்று இரைந்தான்!

பிறகு அவன் மெள்ள எழுந்து பாயின் மீது உட்கார்ந்து சுற்று முற்றும் பார்த்தான். அவன் மனைவி வெறும் தரையில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். முதல் நாளிரவு அவன் அடிக்கடி விழித்துத் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்ததால், அன்றிரவு மலையாத்தாள் சரியாகத் தூங்கவில்லை. இன்று அவன் உடம்பு எவ்வளவோ குணமாகியிருந்தது. அதனால் இன்றிரவு நன்றாகத் தூங்கி விட்டான்.

பிச்சைமுத்து திறந்திருந்த கதவு வழியாக வெளியே அடிவானத்தைக் கூர்ந்து பார்த்தான். 'பொழுது விடியும் சமயம் போலிருக்கிறதே!' என்று நினைத்தான். அவன் நினைத்தது 'சரி' என்று சொல்வதுபோல், எங்கோ வெகு தொலைவிலிருந்து கோழி கூவும்சத்தமும் கேட்டது.

அவன் கதவு வரை நகர்ந்து வெளியே பார்த்தான். இருள் மெல்ல மெல்ல மறைந்து வைகறையின் மங்கல் ஒளி படரத் தொடங்கியது. அந்த மங்கல் ஒளியில் தூரத்தே ஒரு பனந்தோப்பு தென்பட்டது. அந்தப் பனந்தோப்பு அவனுடைய வயலின் ஒரு மருங்கிருந்தது. அதைப் பார்த்ததும் மறுபடியும் அவனுக்குத் தன் வயலைப் பற்றிய கவலையுண்டாகி விட்டது. ஆகவே, உட்புறம் திருப்பிப் பார்த்தான். அவன் மனைவி விழித்தெழுந்து உட்கார்ந்து கொட்டாவி விட்டுக் கொண்டிருந்தாள்.

"இன்றைக்கு என் உடம்பு ரொம்பவும் தேவலை; என் குணமாகி விட்டது என்றே சொல்ல வேண்டும். நம்ம பூசாரிக்குச் சொல்லியனுப்பி மாரியாயிக்கு பெரிய பூசை போட ஏற்பாடு செய். அப்படியே நீ வயலுக்கும் ஒரு நடை போய்ப் பார்த்து விட்டுவா. எனக்கு ஒரே கவலையாக இருக்கிறது. வீட்டை விட்டு வெளியே போய் ஒரு மாசத்துக்கு மேல் ஆகிறதல்லவா!" என்றான் பிச்சைமுத்து.

அவன் எழுந்து உட்கார்ந்து கண்களைக் கசக்கினான்.

"மலையாத்தா! இந்த வருஷம் நம்ம வயல் விளையாது என்பது எனக்குத் தெரியும். வயல் எல்லாம் காய்ந்து பாளம் பாளமாக விரிந்து கிடக்கும் என்பதும் தெரியும். சரியாக முப்பது நாளுக்கு

படித்துப் பாருங்கள்!

கண்ணன்

தமிழ்ப் பத்திரிகை யுலகத்தில் ஒரு புதுமையை நாம் இப்போது காண்கிறோம். எங்கே பார்த்தாலும் ஒரே குழந்தைப் பத்திரிகை மயமாக இருக்கிறது. பத்திரிகை விற்பனைக் கடைகளில் நாம் காணும் இருபது பத்திரிகைகளில் ஏறக்குறைய சரிபாதி யாவது குழந்தைப் பத்திரிகைகளாகவே இருக்கின்றன. குழந்தைகளுக்கு யோகம் என்றே சொல்ல வேண்டும். அந்த யோகத்துக்குச் சிறந்த அறிகுறியாகக் "கண்ணன்" என்னும் குழந்தை மாதப் பத்திரிகை உதயமாகி ஒளிர்ந்து வருகிறது.

'கண்ண'னில் வெளியாகி யிருக்கும் ஒவ்வொரு விஷயமும் குழந்தைகளின் இதயத்தை ஒட்டி உறவாடக் கூடிய முறையில் அமைந்திருக்கிறது. குழந்தைகளுக்கு வேப்பங்காயாகக் கசக்கும் சரித்திரமும் பூகோளமும் கூட அழகான கட்டுரை வடிவத்தில் கொடுக்கப்படுகின்றன. இவற்றைத் தவிர குழந்தைகளின் பொழுது போக்குக்கான முறையில் விநோதக் கணக்குகளும், புதிர்களும், சித்திர விநோதங்களும் நிறைந்திருக்கின்றன. "நான் பெரியவனானால்—" "நான் வாத்தியாரானால்—" என்ற தலைப்பில் குழந்தைகளின் புகைப் படத்தைப் போட்டு, அவர்கள் எழுதிய குறிப்புகளையும் அதற்குக் கீழே வெளியிட் டிருப்பது ஒரு புது அம்சம். 'கண்ணன்' நீடித்த காலம் வரை வாழ்ந்து தமிழ்நாட்டுக் குழந்தைகளுக்குத் தொண்டாற்று மென்று நம்புகிறோம். வருஷ சந்தா ரூ. 3. தனிப்பிரதி அணா 4. விலாசம்: 'கண்ணன்' காரியாலயம், தபால் பெட்டி 604, மயிலாப்பூர், சென்னை.

Madras Government Oriental Series

தஞ்சாவூர் சரஸ்வதி மகாலிலும் சென்னை சர்க்கார் ஏட்டுப் பிரதி நூல் நிலையத்திலும் இருந்துவரும் பல அருமையான பழைய ஏட்டுப் பிரதி நூல்களைச் செப்பனிட்டு அவற்றைப் புத்தக ரூபத்தில் பிரசுரித்து வருகிறார்கள். சமீபத்தில் வெளியாகி யிருக்கும் சில நூல்களாவன:

சிவஞான தீபம்: பதிப்பித்தவர்: வித்வான் டி. பி. பழனியப்ப பிள்ளை; விலை: ரூ. 1-6-0.

உபதேச காண்டம் (மூன்று காண்டங்கள்) பதிப்பித்தவர்: தணிகைமணி வி. எஸ். செங்கல்வராய பிள்ளை எம். ஏ; விலை: முதல் காண்டம்: ரூ. 4-10-0; இரண்டாம் காண்டம்: ரூ. 5: மூன்றாம் காண்டம் ரூ. 5-8-0.

கொங்குதேச இராசாக்கள்: பதிப்பித்தவர்: சி. எம். ராமச்சந்திரன் செட்டியார் பி. ஏ., பி. எல்; விலை. ரூ. 1-9-0.

கப்பல் சாத்திரம்: பதிப்பித்தவர்: டி. பி. பழனியப்பப் பிள்ளை; விலை ரூ. 1-10-0.

அநுபவ வைத்திய முறை (இரண்டு பாகங்கள்) பதிப்பித்தவர்கள்: டாக்டர் சி. துரைராஜன், டாக்டர் சி. எஸ். உத்தமராயன்; முதல் பாகம் விலை ரூ. 3-14-0; இரண்டாம பாகம் விலை ரூ. 4-8-0.

மேற்கண்ட புத்தகங்கள் கிடைக்கும் இடம்: Government Oriental Manuscripts Library, Madras.

தமிழ் இசை மலர்


தமிழ் இசைச் சங்கத்தார் அவ்வப்போது வெளியிட்டு வரும் மேற்படி மலர்களில் இது ஐந்தாவதாகும். புரொபஸர் பி. சாம்பமூர்த்தி, புலவர் மா. இராசமாணிக்கம், ஸ்ரீ ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை முதலிய அறிஞர்கள் எழுதிய கட்டுரைகள் இதில் இடம் பெற்றுள்ளன. விலை அணா 8; தமிழ் இசைச் சங்கம், சென்னை.

சினிமாக் கலை

ஒரு சினிமாப் படம் தயாரிக்க இன்றியமையாத தேவை லக்ஷக்கணக்கான ரூபாய். அடுத்தபடி சுவாரஸ்யமான கதை. பிறகு நடிகர்களும் நடிகைகளும். இவற்றை யெல்லாம் சேகரித்த பிறகு காமிராக்காரர், டைரக்டர், ஒலிப்பதிவாளர் இவர்க ளெல்லாம் திறமை வாய்ந்தவர்களாக அமைய வேண்டும். அப்புறம், சினிமாப் பாத்திரங்களைத் தத்ரூபமாய்த் தோன்றச் செய்யும் ஆற்றல் வாய்ந்த 'மேக்கப்' நிபுணர் ஒருவர் தேவை. இவ்வளவு வைபவங்களும் ஒற்றுமையாக ஒத்துழைத்தால்தான் ஒரு படம் வெள்ளித் திரைக்கு வர முடியும். படம் தயாரான மறு கணம் தேவையாயிருப்பது பொதுஜன ஆதரவு. அந்தப் பொதுஜன ஆதரவு யார் கையில் இருக்கிறது என்றால் நல்ல படம் தயாரிப்பவர் கையில் இருக்கிறது. இவ்வளவு விஷயங்களும் எதில் இருக்கின்றன என்றால் இந்த "சினிமாக் கலை" என்னும் புஸ்தகத்தில் இருக்கின்றன. ஆசிரியர்: சாண்டில்யன்; பிரசுரம்: ஸ்ரீ வெங்கட்டரமணா அண் கம்பெனி, 73, பெரிய தெரு, சென்னை. விலை: ரூ. 1.

இது உங்களுக்கு பலவருடங்கள் உழைக்கத்தக்க-வாறு தயாரிக்கப் பட்டிருக்கிறது

இன்றைய புதிய மாடல் '50 'ஓரியண்ட்'



இயந்திர கருவிகளால் முழுவதும் நிர்மாணிக்கப்பட்ட எங்களுடைய நவீன தொழிற்சாலையில் பெருவாரியான அளவில் ஓரியண்ட் '50' விசிறிகள் தயாரிக்கப்படுவதே அவைகளின் சிறந்த ரகத்திற்கும் குறைந்த விலைக்கும் காரணமாகும்.

தொழிற்சாலையிலிருந்து அனுப்பப்படுவதற்குமுன் ஒவ்வொரு ஓரியண்ட் விசிறியும் பிரத்தியேகமாக விஞ்ஞான முறைப்படி தீவிரமாக பரிசோதிக்கப்படுகிறது என்பதை கவனியுங்கள்— பல வருஷங்கள் கஷ்டம் கொடுக்காமல் உழைப்பதற்கு மற்றொரு உறுதி.

ஓரியண்ட் ஏ.ஸி. டி.ஸி. விசிறிகள்

தி கல்கத்தா எலக்ட்ரிகல் மான்யுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்
4, லட்டிங்கர் தெரு, மதறாஸ்.
போன் நெ: 2658
இதர ஆபீஸ்கள்:- கல்கத்தா, பம்பாய், டெல்லி, பாட்னா, கான்பூர்.

ஸீலிங், டேபிள் விசிறிகளும், ரெயில்வே கோச்சு விசிறிகளும், மின்சார பம்புகளும், கைப்பம்புகளும், மின்சார மோட்டார்களும் பெருவாரியான அளவில் தயாரிப்பவர்கள்.

முன்பு இதே பார்வைக்கும் புன்சிரிப்புக்கும் வள்ளி ஏங்கியிருக்கிறாள். கந்தசாமியின் பார்வையைச் சமாளிக்க முடியாமல் வெட்கத்துடன் தலையைக் குனிந்து கொள்ளுவாள். இப்பொழுது அவன் பார்வை அவளைச் சுட்டு எரிப்பதாக இருந்தது. அந்த அழகுசுந்தரி ஒரு பெரிய இடத்துப் பெண்ணாயிருப்பாள், இனி மேல் கந்தசாமிக்கு ஒன்றும் குறைவில்லை என்று அவள் நினைத்தாள்.

இப்பொழுதெல்லாம் வள்ளி, கந்தசாமியின் கார் வந்தால் அதைச் சட்டை செய்வதேயில்லை. அவள் என்னதான் மனதுக்குள் வேண்டாம் என்று நினைத்தாலும் முருகனுடைய சைக்கிள் வரும்போது மட்டும் அவள் மனம் அவளை ஏமாற்றி விட்டு அவனிடம் போய்விடும். அவள் பார்வையும் அவனிடம் உத்தரவின்றிப் போய்ச் சேர்ந்துவிடும்.

முருகனுக்கும் வள்ளிக்கும் ஒரு நல்ல நாளில் கல்யாணம் நடந்தது. அவர்களுடைய இல்வாழ்க்கையும் மிகவும் சந்தோஷமாக ஆரம்பமாயிற்று. முருகனுடைய அன்பு அவளை இந்த உலகிலேயே தன்னை விட அதிர்ஷ்டசாலி யாரும் இல்லை என்று நினைக்கும்படியாகச் செய்தது.



சில மாதங்களுக்கெல்லாம் கந்தசாமி சென்னையை விட்டுப் பம்பாய்க்குப் போய் விட்டான். அதுவும் அந்தப் பகட்டுக்காரியுடன் என்று கேள்வியுற்றபோது வள்ளி அவன் மீது அடைந்த வெறுப்பு கொஞ்சமல்ல. அதற்குப் பிறகு வள்ளி, கந்தசாமியைப் பற்றி முருகனிடம் பேச்சே எடுப்பதில்லை.

இப்போது ஊரிலிருந்து கந்தசாமி வருகிறான் என்றதும், அவள் மனம் பல வருஷங்களுக்கு முன்பு நடந்த குழாயடிச் சம்பவங்களை நினைவு கூர்ந்தன.

"வள்ளி, என்ன ஒரேயடியாக யோசனையில் ஆழ்ந்து போய்விட்டாய்! கந்தசாமி வந்து விட்டானே, பார்க்கவில்லையா?" என்ற முருகனின் அன்புக் குரல் அவளுக்கு உணர்வைத் தந்து சிந்தனையைக் கலைத்தது.

"வள்ளி, சௌக்கியமா?" என்று கேட்டுக் கொண்டே கந்தசாமி உள்ளே நுழைந்தான்.

வீட்டுக்கு வந்தவனை வா என்று அழைக்கக்கூடத் தோன்றவில்லை, அவளுக்கு. அந்த 'மினுக்கி' எங்கே என்று அவள் மனம் அலைந்தது. கந்தசாமி தனியாக வருவானேன்? ஏன் அவன் இளைத்துப் போய் விட்டான்? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் வள்ளக்குப் பதில் கிடைக்கவில்லை. அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. மனப் போராட்டத்தோடு முருகனுக்கும் கந்தசாமிக்கும் சாப்பாடெல்லாம் பரிமாறினாள்.

சாப்பாடு முடிந்ததும் கந்தசாமி சற்று நேரத்துக்கெல்லாம் இன்னொரு நாள் வருவதாகக் கூறிவிட்டுப் போய்விட்டான்.

"கந்தசாமிக்குப் பம்பாயிலேதானே வேலை? மறுபடியும் பம்பாய்க்குப் போய் விடுவார், இல்லையா?" என்று ஆவலுடன் கேட்டாள் வள்ளி.

"அதெல்லாம் இல்லை. வேலையை நம்பித்தான் அந்த நாடகக்காரியோடு பம்பாய்க்குப் போனான். அங்கே போன சில மாசங்களுக்குப் பிறகு அவள் கந்தசாமியை டிரைவர் வேலையிலிருந்து நீக்கிவிட்டு வேறொரு டிரைவரை நியமித்துக் கொண்டு விட்டாளாம். பிறகு பம்பாயில் எங்கெங்கெல்லாமோ வேலை பார்த்து ஒன்றும் சரிப்படாமல் சென்னைக்கே வந்து விட்டான்!" என்று முருகன் சொன்னான்.

"அவள் நாடகக்காரியா?" என்று கேட்டு வள்ளி அசைவற்றுக் கொஞ்ச நேரம் நின்று விட்டாள். கந்தசாமியைப் பற்றித் தான் நினைத்துக்கொண்டிருந்ததையெல்லாம் அவளால் இப்பொழுது நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. பெருகி வந்த கண்ணீரை அவள் சேலைத் தலைப்பினால் துடைத்துக் கொண்டாள்.

மறைந்த மாயம்

ஸோமாஸ்

"வள்ளி, கந்தசாமி ஊரிலேயிருந்து வந்திருக்கான். இன்னிக்கு நம்ம வீட்டுக்கு அவனை வரச்சொல்லியிருக்கேன். சாப்பாடு ஜோராத் தயார் பண்ணி வை!" என்று சொல்லிவிட்டு முருகன் வெளியே புறப்பட்டுப் போனான்.

"யாரு, கந்தசாமியா!" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் வள்ளி. ஆனால் அவளுக்குப் பதில் சொல்லுவதற்கு முருகன் அங்கே இல்லை. அதற்குள் அவன் வாசலுக்குப் போய்விட்டான்.

பல வருஷங்களுக்கு முன் பம்பாய்க்குப் போன கந்தசாமி இப்பொழுதுதான் சென்னைக்கு வருகிறான். வள்ளிக்கு அவன் பெயரைக் கேட்டதுமே பழைய ஞாபகங்கள் எல்லாம் நேற்று நடந்தவை போல் அவள் மனத்தில் பளிச்சிட்டன.

கந்தசாமிக்காக வள்ளி ஒரு சமயம் எவ்வளவு உருகியிருக்கிறாள்! அதை நினைத்தாலே அவளுக்கு இப்பொழுது அதிசயமாயிருந்தது.

வள்ளியின் அத்தை மகன் முருகன். மாமன் மகன் கந்தசாமி. இருவரும் அவளைக் கல்யாணம் செய்து கொள்ளப் போட்டியிட்டனர். "வள்ளியைக் கந்தன் மணந்தால் என்ன, முருகன் மணந்தால் என்ன? இரண்டும் ஒன்றுதான்! வள்ளி அந்த முருகப் பெருமானுக்குத்தானே சொந்தம்?" என்று வள்ளியின் தகப்பன் சிலேடை படச் சொல்லுவான். வள்ளி உள்பட வீட்டில் உள்ளவர்கள் எல்லோரும் சிரிப்பார்கள்.

ஆனால் வள்ளி அவர்களுக்கு எதிரில்தான் சிரிப்பாள். தனியாக இருக்கும்போது இந்த விஷயம் அவள் மனத்தில் பெரும் போராட்டமாய்ப் புகைந்து கொண்டிருக்கும். மாமன் மகனை கந்தசாமியை மணப்பதா—இல்லை, அத்தை மகன் முருகனுக்கு மாலையிடுவதா என்ற கேள்வியை எத்தனை தடவை அவள் தனக்குத் தானே கேட்டுக் கொண்டிருப்பாள்!

உண்மையாகவே அந்த விஷயம் ஒரு பிரச்னையாகத்தான் இருந்தது.

கந்தசாமி வாட்ட சாட்டமாக நல்ல ஆகிருதியுடன் இருப்பான். முருகன் இளமை எழிலுடனும் அரும்பிய மீசையுடனும் குறுகுறுப்பான முகத்துடனும் இருப்பான். முருகன் கொஞ்சம் படித்தவன். கொஞ்சம் பூமியும் அவனுக்கு இருந்தது. அத்துடன் பஞ்சு ஆலையில் அவன் வேலையும் பார்த்து வந்தான்.

வள்ளி தெருக் குழாயில் ஜலம் பிடிக்க வந்து அங்கே ஏற்கெனவே காத்திருக்கும் கும்பலுடன் தானும் காத்திருப்பாள். (வாசகர்கள் மன்னிக்கவும். சாதாரணமாக எல்லாக் காதல் கட்டங்களும் குளத்தங்கரையிலோ அல்லது ஆற்றங்கரையிலோதான் நிகழும். ஆனால் சென்னை, பெரம்பூரில் குடித்தனம் இருந்த வள்ளி குளத்தங் கரைக்கும் ஆற்றங் கரைக்கும் எங்கே போவான்?) ஆலையிலிருந்து திரும்பும் முருகன் அந்தத் தெருக் கோடிக் குழாயருகே வந்ததும் அவளை அறியாமலே அவள் கால்கள் தளரும்; கைகளும் தளரும். ஆம், அவன் சைக்கிளில்தான் வேலைக்குப் போய் வந்து கொண்டிருந்தான்.

அந்தத் தெரு வழியாக எத்தனையோ சைக்கிள்கள் போகும். ஆனால் வள்ளிக்கு முருகனுடைய சைக்கிள் மணிச் சத்தம் மட்டும் தனியாகத் தெரியும். இல்லாவிட்டால் முருகன் வரும்போது மட்டும் அவள் தன்னையறியாமலே அவன் பக்கம் திரும்புவானேன்?

அவளைப் பார்த்ததும் முருகன் முகத்தில் ஒரு புன்சிரிப்பு மலரும்; வள்ளியின் முகத்திலும் ஒரு புன்னகை தோன்றும். முருகன் ஏதாவது பேச நினைப்பான்; ஆனால் வார்த்தைதான் வராது. வள்ளி தலை கவிழ்ந்து கொள்ளுவாள்.

முருகன்—வள்ளி நாடகம் சில விநாடிகளுக்குள் முடிந்துவிடும். வள்ளி இரண்டு மூன்று பானை ஜலம் வீட்டுக்குக் கொண்டு போயிருப்பாள். சற்று நேரத்துக்கெல்லாம் 'பூம், பூம்' என்று சத்தம் போட்டுக் கொண்டு ஒரு சைக்கிள் வரும். வேண்டும் என்றேதான் அவன் தன் சைக்கிளுக்குச் சின்ன ஹாரன் அமைத்திருந்தான். அப்பொழுது அது அவன் சைக்கிள் என்று வள்ளி சத்தத்திலிருந்தே கண்டு கொள்ளுவாள். சைக்கிளிலிருந்து ஒரு கம்பீரமான முகம் அந்தக் குழாய்ப் பக்கம் பார்க்கும். ஆம், அந்த முகம் கந்தசாமியினுடைய முகம்தான். கந்தசாமி ஆசை பொங்கச் சிரிப்பான். வள்ளியும் இலேசாகச் சிரித்துக் கொண்டே அவனைப் பார்ப்பாள். அவ்வளவுதான்; சைக்கிள் மீண்டும் பறந்து விடும்.

வள்ளி அழகாயிருந்ததோடு மட்டுமல்லாமல் ரொம்பவும் நல்ல பெண். அதுவும் குழாயடி மகாநாட்டில் அவளுக்கு மிகவும் நல்ல பெயர். எல்லாரும் தண்ணீர் பிடித்துக் கொண்டு போன பிறகுதான் அவள் தன் பானையை வைப்பாள். தண்ணீர் ஊசிமாதிரி விழுவதைப்

பற்றி அவன் ஒருநாள்கூட அலுத்துக் கொண்டதில்லை. அவசரப்பட்டு யாருடனும் மோதியடித்துக் கொண்டு போட்டி போட மாட்டான். கார்ப்பொரேஷன் தண்ணீர்க் குழாயினிடம் அவன் மாதிரி அநுதாப முள்ளவர் யாரும் இருக்க முடியாது.

இதற்கெல்லாம் காரணம் இல்லாமற் போகவில்லை. முருகனையும் கந்தசாமியையும் பார்க்க வேண்டும் என்றால் அவள் கொஞ்சம் குழாயடியில் காத்திருக்க வேண்டி வந்தது. பானையில் ஜலம் மெதுவாக விழுந்தால் அவள் அங்கே காத்துக் கொண்டிருப்பது சிரமமாயிராதல்லவா? அதனால்தான் அவள் அவசரப்படுவதில்லை.

வள்ளியின் தகப்பனுக்கு முருகனை எல்லா விதங்களிலும் பிடித்திருந்தது. அவனுக்கே வள்ளியைக் கொடுத்து விடுவது என்று ஒருவாறு தீர்மானித்து வைத்திருந்தான். வள்ளியின் சம்மதங் கேட்டுக் கல்யாணத்தை முடிக்கவேண்டியதுதான்.

வள்ளி, முருகனையும் கந்தசாமியையும் குழாயடியில் தினந்தவறாமல் சந்தித்து வந்தாள்—இல்லை, முருகனும் கந்தசாமியும் அவளைத் தினந்தோறும் சந்தித்தனர். எப்படி வேண்டுமானாலும் சொல்லலாம்.

இப்படிச் சுவாரஸ்யமாக நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. வள்ளி எந்த விஷயத்தைப் பற்றி ஒரு முடிவுக்கும் வர முடியாமல் தத்தளித்தாளோ, அந்த விஷயத்தில் தானே ஒரு முடிவு ஏற்பட்டது. இல்லையென்றால் தினந்தவறாமல் குழாய்க்கருகே விஜயம் செய்து கொண்டிருந்த கந்தசாமி திடீரென்று அந்தப் பக்கம் வருவதையே நிறுத்திக் கொள்ளுவானா?

ஒரு வாரம், இரண்டு வாரம் சென்றன. மாதமும் சென்றது. கந்தசாமியின் சைக்கிள் அந்தப் பக்கமே வருவதில்லை. முருகன் மாத்திரம் மணி தவறாமல் அங்கே வருவான்.

அன்றைய தினம் அந்த வழியாகச் சென்ற கார் வள்ளியின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தது. காரணம் அந்தக் காரில் பளபள வென்று மின்னும் அழகுடனும் நவ நாகரிக உடையுடனும் ஒரு பெண்மணி அமர்ந்திருந்ததுதான். அஞ்சனம் தீட்டிய அவள் விழிகளை வள்ளி கவனித்துப் பார்த்தாள். ஒரு பூந்தோட்டம் அவள் தலையில் அலங்காரமாக அமர்ந்திருந்தது. மிகவும் மிடுக்குடன் அவள் ராணி மாதிரி ஒய்யாரமாகக் காரில் உட்கார்ந்திருந்தாள்.

கார் குழாய்க்கு அருகே வந்ததும் சில விநாடிகள் நின்று உடனே நகர்ந்தது. காரை ஓட்டிய ஆசாமியைக் கவனித்ததும் வள்ளிக்குத் தூக்கி வாரிப் போட்டது. அந்தக் கார் டிரைவர் வேறு யாரும் இல்லை; கந்தசாமிதான்!

கந்தசாமி எத்தனை நாட்களாக இப்படி மாறி விட்டானோ! எவ்வளவுதான் வருந்தி வருந்திச் சிங்காரித்துக் கொண்டாலும் அந்த அழகு ராணியின் பகட்டுக்கும் ஆடம்பரத்துக்கும் வள்ளி எங்கே போவாள்? இனிமேல் கந்தசாமி வள்ளியின் பக்கம் பார்வையைத் திருப்ப மாட்டான். இந்த எண்ணங்கள் தோன்றியதும் வள்ளியின் கண்களில் கண்ணீர் கசிந்தது.

ஒரு நாள் அல்ல, இரண்டு நாள் அல்ல. தினம் தவறாமல் கந்தசாமி அந்த வழியாகக் காரை ஓட்டிக் கொண்டு சென்றான்; காலை, மாலை, பகல் இப்படி ஒரு நாளைக்குப் பல தடவை அந்தக் கார் அந்த வழியாகச் சென்றது. ஒவ்வொரு தடவையும் அந்தப் பகட்டுக்காரியும் காரில் காட்சியளித்ததுதான் வள்ளிக்கு மன வேதனையை அளித்தது. அந்த வேதனையை அதிகப்படுத்துவதற்கு ஒவ்வொரு தடவையும் கந்தசாமி வள்ளியைப் பார்த்துக் கொண்டே புன் முறுவலுடன் காரை ஓட்டிக்கொண்டு போனான்.



உங்கள் பாதங்களைத் தொட்டு நமஸ்கரிக்க நான் கொடுத்து வைக்கவில்லை. ஆனாலும் நீங்கள் சென்ற கடல் நீரையாகிலும் நான் தழுவி நமஸ்கரிக்கிறேன்!" என்று கூவியபடியே, அவன் அன்று கடலில் விழுந்த காட்சி என் மனதிலே இன்றும் ஆழமாகப் பதிந்து கிடக்கிறது.

"அதன் பிறகுதான் கடல் கொந்தளித்து நகரத்தையே அழித்து விட்டது.

"எத்தனையோ மாதங்களுக்குப் பிறகு இந்த நகரம் அழிந்துவிட்ட பிறகு சர்யன் இங்கே வந்தான். அவனைப் பார்த்ததும் என் உடலே பதறியது. மணி முடி இருக்கவேண்டிய தலை பாழாய்க் கிடந்தது. பட்டும் முத்தும் அலங்கரிக்க வேண்டிய உடலில் காவித் துணி; ஒளி வீசும் அந்த மோகனக் கண்களிலே எல்லையற்ற அமைதி. அவனைப் பார்த்தால் பகவான் புத்தர் எழுந்து வருவது போலவே இருந்தது.

"வாயால் அவன் கூவி யழைக்காவிட்டாலும் அவன் நெஞ்சம் 'மாதங்கி, மாதங்கி!' என்று புலம்பி யிருக்கும். வழக்கமாக அவர்கள் உட்காருமிடத்திற்கு வந்ததும் அவன் கண்களில் நீர் துளித்தது.

"எனக்குத் தெரியும்—அவன் மகா ஞானி. விரதம் கலையாத உத்தமன். ஆனால் மாதங்கியை மறக்க அவனால் முடியாது. பெண்ணை விட்டுப் பிரிந்து எட்டப் போய் விடலாம். ஆனால் விராகரித்துவிட முடியாது. பிக்ஷுவாகி விடலாம்; ஆனால்தெய்வமாகிவிடமுடியாது!"

கோவில் மறுபடியும் எல்லையற்ற மௌனத்தில் ஆழ்ந்தது; குளம் அரச மரத்தின் நிழலில் கண் அயர்ந்தது.

புதை பொருள் ஆராய்ச்சிக்காரர்கள் ஒரு பக்கத்தில் பழமையைத் தேடிக் குழி தோண்டிக் கொண்டிருந்தார்கள்.

காலக்ஷேபம்

ஒருவர் ரயில்வே ஸ்டேஷன் புக்கிங் ஆபீஸில் ஒரு நோட்டை வீசி எறிந்து ஒரு டிக்கெட்டை வாங்கிக் கொண்டு போனார்.

அவர்:—(சற்று நேரத்துக் கெல்லாம் திரும்பி வந்து):—ஸார், பாக்கிச் சில்லறை தப்பாகக் கொடுத்திருக்கிறீர்கள்!

டிக்கெட் கொடுப்பவர்:— மன்னிக்க வேண்டும். நான் சில்லறை தந்த உடனே நீங்கள் எண்ணிப் பார்த்துச் சொல்லியிருக்க வேண்டும். இப்பொழுது சொல்லிப் பிரயோஜனமே இல்லை!

அவர்:—அப்படியானால் சரி; நீங்கள் ஐந்து ரூபாய் அதிகமாகக் கொடுத்து விட்டீர்கள்!

★

பிரசங்கம் நடந்து கொண்டிருந்தது. பின்புற நாற்காலியிலிருந்து ஒரு குரல், "உரக்கப் பேசு, ஐயா!" என்றது.

முன் நாற்காலியிலிருந்து ஒருவன், "ஏன், இவர் பேசுவது ஒன்றும் உன்னுடைய காதில் விழவில்லையா?" என்று கேட்டான்.

"ஒரு வார்த்தைகூட விழவில்லை!"

"அப்படியானால் பேசாமல் வாயை மூடிக்கொண்டு உட்கார், நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி!"

கறிகாய்க்காரன்:—நேற்று இதே வெண்டைக்காய் என்ன விலை விற்றது தெரியுமா? நீங்கள் கேட்டால் மலைத்துப் போய் விடுவீர்கள்.

வாங்க வந்தவர்:—விலை அதிகமாயிருந்திருக்கலாம். ஆனால் நேற்று இது இவ்வளவு உலர்ந்து போயிருந்திருக்காதல்லவா?

★

எஜமானி:—ஏண்டி சொர்ணம், உன்னை இன்னும் எத்தனை நாளைக்கு நான் 'சீக்கிரம் வா, சீக்கிரம் வா!' என்று சொல்லுவது?

வேலைக்காரி:—இன்னும் பதினைந்து நாட்களுக்குச் சொல்லி வாருங்கள், அம்மா! நான் இந்த மாதம் முதல் தேதியோடு வேலையிலிருந்து நின்று கொள்ளுகிறேன்.

★

ரயில் வண்டியில் ஒருவர் இருமிக் கொண்டே இருந்தார். பக்கத்திலிருந்தவர் அவரை அநுதாபத்துடன் பார்த்துவிட்டு, ஒரு மருந்துப் புட்டியை எடுத்து அவரிடம் கொடுத்தார்.

அவர்:—இந்த மருந்தினால் பலன் ஏற்படுமா?

இவர்:—பலனா! எனக்கு இருமல் வந்து முப்பது வருஷங்கள் ஆகின்றன. நான் இதைத் தவிர வேறு எந்த மருந்தையும் உபயோகித்ததில்லை.

விட்டு மறையவில்லை. கண்களில் நீர் துளிக்க மண்டியிட்டு மாதங்கி கேட்ட கேள்வி உலகம் உள்ளவரை என்மீது வீசும் காற்றிலே கலந்து ஒலித்துக் கொண்டேதா னிருக்கும்.

" 'என் சுவாமி, என்னை உங்கள் வித்யா விஹாரத்தில் மறந்துவிட மாட்டீர்களே? எப்போதாகிலும் ஒரு முறை நான் இல்லாவிட்டாலும் சங்கீதத்தின் அதிதேவதையான மாதங்கி மாதாவை நினைக்கும்போதாவது என் நினைவு வரும், இல்லையா!'

"சத்யன் வழக்கமான அந்தச் சிரிப்புடன் பதிலளித்தான்: 'மாதங்கி, உன்னை மறந்தாலல்லவா மறுபடியும் நினைப்பதற்கு! என்னையே என்னால் எங்கேயாவது மறக்க முடியுமா?' "

அது வரை மௌனமாக இருந்த குளத்தங்கரை அரசமரம் ஆவலோடு கேட்டது: "அது சரி, சத்யன் ஏன் நாலந்தாவுக்குப் போனான்? அவன் ஏன் மாதங்கியைக் கைவிட்டான்? இதெல்லாம் எனக்குத் தெரியாது. நான் புதுசாய் வந்தவன்தானே!"

கோவில் கதையைத் தொடர்ந்தது:

"அப்போது நாலந்தா ரொம்பப் பிரசித்தி பெற்ற இடம். உலகத்திலே எங்கிருந்தெல்லாமோ வந்து அங்கு கல்வி பயின்றார்கள். எனக்கென்ன தெரியும்? சொல்லக் கேள்விதானே! நான் என்ன, சுற்றித் திரியும் நாடோடியா, என்னமோ கல்லாக நிற்கிறேன் திருஷ்டிப் பரிகாரமாக! அழகான நகரம் சீரழிந்து போய் விட்டது. உம்......அந்த நாலந்தாவிலே பௌத்த மதம் தழைத்து நின்ற காலம் அது. புத்த விஹாரத்திலேதான் கல்வி பயின்றார்கள் எல்லோரும். சீனா, திபேத், சாவகம் – இங்கிருந்தெல்லாம்கூட ராஜகுமாரர்களும் மற்றவர்களும் வந்து படித்தார்களாம். இங்கே காஞ்சியிலிருந்து தின்னாகர் என்பவர் அப்போது அங்கே போயிருந்தார். பெரிய கல்விமான். வடநாட்டில் இந்த நாலந்தாவில் பிரசித்தி பெற்ற நாகார்ஜுனர், ஆரியதேவர் இவர்களைப் போல இந்தத் தின்னாகரும் பெயர் வாங்கிவிட்டாராம். அரசர் உடனே சத்யனை அவருடன் நாலந்தாவுக்கு அனுப்பிவிட்டார் கல்வி பயில. கல்விக்காகப் போனவன் ஆண்டியாகத் திரும்புவான் என்று கண்டாரா?

"என்னமோ விதி அப்படிச் செய்தது. நல்ல அறிவுத் தேர்ச்சி பெற்றதும் அவன் மனசு மாறி விட்டது. எந்த நேரமும் அந்த புத்த விஹாரத்திலே மௌனமாக உட்கார்ந்து கிடப்பானாம். தின்னாகர் எவ்வளவோ சொல்லிப் பார்த்தாராம். அவன் கேட்கவில்லை. 'சுவாமி, கல்வி



கற்றவன் அதைப் பலருக்கும் கற்றுக் கொடுக்க வேண்டும். நான் பிக்ஷுவாக வாழ்க்கை நடத்துவேன். ராஜ பிக்ஷுக்களான அசோகனும் ஹர்ஷனும் வளர்த்து விட்ட இந்த நாலந்தாவில் படித்தபிறகு அவர்கள் செய்த மகா தியாகத்தில் ஆயிரத்திலொரு பங்காவது நான் செய்ய வேண்டுமல்லவா? எனக்கு விடை கொடுங்கள்!" என்று கிளம்பி விட்டான்.

"அவன் சன்யாசம் வாங்கிக் கொண்டான் என்று கேள்விப்பட்டதும் மாதங்கி எப்படித் துடித்தாள் என்பதைச் சொல்ல முடியாது. ஒவ்வொரு நாளும் ஆசையுடன் அவள் காத்திருந்ததும், நாட்கள் வளர வளர அவள் உடல் வாடியதும், ஏக்கத்தின் சாயை முகத்திலே படர அவள் இங்கே வந்து வழக்கமாக இவர்கள் உட்காருமிடத்தில் கண்ணீர் விட்டதும், என் உடலில் இருக்கும் ஒவ்வொரு கற்களுக்கும் தெரியும். ஏன், குளக்கரையில் இருக்கும் படிக்கட்டுகளைக் கேட்டால் கூடச் சொல்லுமே, அவள் கடைசியாக இங்கே வந்து போன நாளை!

"சத்யன் இங்கு வரவேயில்லை. எங்கோ தூர தேசம் போய்விட்டதாகச் சொல்லிக் கொண்டார்கள். அப்போதுதான் அவளுக்குக் கோபம் வந்துவிட்டது.

" 'சுவாமி, இங்கு வந்தால் இந்தப் பாவியால் உங்கள் விரதத்திற்குப் பங்கம் ஏற்பட்டுவிடும் என்ற எண்ணமா? ஒருநாளும் நான் என்னுடைய வாழ்வுக்காக உங்கள் தியாக வாழ்வைக் கெடுக்க மாட்டேன். என்னைப் பார்த்து இந்த நகரமே சிரிக்கும். காத்துக் கிடந்தாள், ஏமாந்து போனாள் என்று பழிக்கும். என்னால் உங்களைக் காண முடியவில்லை.

குளமும் கோவிலும்

துஷ்யந்தன்

கடல் கொண்டு போனதுபோக எஞ்சி நிற்பது இந்தக் கோவிலும் குளமும்தான். எவ்வளவு பெருமையுடன் இருந்த நகரம் அழிந்து போய் இப்போது மண்ணுக்குள் புதைந்து கிடக்கிறது! பழமையின் பெருமையை எடுத்துச் சொல்ல ஒரு செப்பேடு கிடைக்காதா என்று புதை பொருள் ஆராய்ச்சிக்காரர்கள் தோண்டித் தோண்டிப் பார்க்கிறார்கள். கடலருகே இருப்பதால் தோண்டுமிடமெல்லாம் நீர் வந்து விடுகிறது. அவர்கள் முயற்சியும் நின்று விடுகிறது. புகழ் மங்கிப் போன அந்த நகரத்தை நினைத்துப் பார்த்துப் பெருமூச்சு விட்டது கோவில்.

"பழங்காலத்து நினைவெல்லாம் வருகிறதோ?" என்று மெதுவாகக் கேட்டது குளம்.

"மறக்கத்தான் முடியுமா, நீயே சொல்லு?" என்று கோவில் தன் மனக் குறையை வெளியிட்டது.

"ஆமாம், எதை மறந்தாலும் அந்தக் கடைசி நாளை மறக்கவே முடியாது. இப்போது நினைத்தாலும் பயமாயிருக்கிறதே! பொங்கி யெழுந்த கடல் எத்தனை கோபத்துடன் இந்த நகரத்தை அழித்து விட்டுப் போய் விட்டது! இருந்தாலும் ஒரு பெண்ணுக்கு இத்தனை கோபம் கூடாது. மாதங்கி மட்டும் அப்படி ஆவேசமாகப் போய்க் கடலில் விழாமல் இருந்தால் இந்த நகரம் ஏன் அழிகிறது?"



கோவில் சிரித்தது. "நீ சொல்வாய், உனக்கென்ன தெரியும் அவள் மனசு பட்ட பாடு! காலமெல்லாம் வருவான், வருவான் என்று கன்னியாகவே காத்திருந்து, கடைசியில் ஏமாற்றமடைந்தால் எந்தப் பெண்ணுக்குத்தான் மனசு தாங்கும்? அதுவும் மாதங்கி எப்படி சத்யனைக் காதலித்தாள் என்பது எனக்குத்தான் தெரியும். இருவரும் இந்தக் கோவிலைத்தான் நாடி வருவார்கள் சந்திப்பதற்கு. அடடா! அவர்கள் இருவரையும் பார்த்த கண்கள் இனி எந்தத் தம்பதிகளையும் அத்தனை ஆர்வத்துடன் பார்க்க முடியாது. அழகு என்றால் அது அந்த இரண்டு பேரிடம்தான் அமைந்திருந்தது......."

குளம் குறுக்கிட்டது: "அதிருக்கட்டும், மாதங்கி என்னவோ நாட்டியமாடுகிறவள் என்கிறார்களே, அவளுக்கும் அரசகுமாரன் சத்யனுக்கும் எப்படி இந்தக் காதல் ஏற்பட்டது?"

கோவில் அலட்சியமாகச் சொல்லிற்று: "மாதங்கி கால்களில் சதங்கை கட்டி ஆடும்போது நீ பார்த்ததில்லை. அது சாதாரண நாட்டியமா? இந்தப் புவனமெல்லாம் அவள் பாத காணிக்கையாகக் கொடுத்தாலும் ஒரு மோகனச் சிரிப்புக்கு ஈடாகாதே! அவள் ஆடப் பிறந்தவள்; சத்யன் பாடப் பிறந்தவன். அவன் பாட, அவள் ஆட...... இந்த லோகமே மறந்து விடும் அப்போது! மாதங்கி நல்லவள்; மகா பண்டிதை. அவளுக்கும் அரசகுமாரனுக்கும் குருகுலத்திலேதான் நட்பு ஏற்பட்டது. அரசருக்கும் இது தெரியும். அவர்கூட இதைத் தடுக்கவில்லை. இருவரையும் நன்றாகப் பார்த்தவர்கள் யாரும் அவர்களைப் பிரிக்க வேண்டும் என்று கனவுகூடக் கண்டிருக்க மாட்டார்கள்."

குளம் வியப்புடன் கேட்டது: "அப்படியிருந்தவர்கள் பின் ஏன் பிரிந்துவிட்டார்கள்? மாதங்கி ஏதாவது......"

கோவில் சட்டென்று சொல்லிற்று: "ஐயோ, அப்படி நினைப்பதுகூடப் பாவம்! மாதங்கி கன்னித் தெய்வம். சத்யனை நினைத்து அவள் ஏங்கிக் காத்துக் கிடந்தது எனக்கல்லவா தெரியும்? என்னமோ எனக்கே புரியவில்லை. சத்யன் செய்தது சரியா என்பது வேறு விஷயம். மாதங்கியை மறக்க அவனால் முடிந்தது என்பதை என்னால் நம்ப முடியவில்லை. அவன் நாலந்தாவுக்குப் போவதற்கு முன்னால் சந்தித்த காட்சி என் கண்ணை

இமயத்திலுள்ள பூக்களின் குளுமையான பரிமளத்தைப்போல் மலர்ச்சியைத்தருவது



இமயத்திலுள்ள பூக்களைப்போன்ற பரிமளம்கொண்ட ஹிமா
லயா புக்கெ டாய்லட் பௌடர் குளுமையைத்தருகிறது.
மேலும், அது சருமத்தை பட்டுப்போல் மழமழப்பாகச்செய்வ
தோடு அதன் நீடித்துநிற்கும் பரிமளம் உங்களுக்கு
மகிழ்ச்சியைத்தருகிறது.

ஹிமாலயா புக்கெ

டாய்லட் பௌடர்

இன்னுமொரு நேர்த்தியான **இராஸ்மிக்** தயாரிப்பு

[illegible]

"அக்கிரமம்!" என்றார் முதலியார்.

"சட்ட விரோதம்!" என்றார் அவருக்கு அருகிலிருந்தவர்.

"இந்தமாதிரி அக்கிரமங்கள், சட்ட விரோதங்களெல்லாம் என்னைப்போலொத்த ஏழைங்ககிட்ட சர்வ சாதாரணமுங்க!" என்றான் நாச்சியப்பன்.

"ஏழைகளாயிருந்தால் என்ன? இந்த அபினுக்குப் பதிலாகப் பால் வாங்கி ஊற்றக் கூடாதா?"

"ஊத்தலாம்; இப்போகூட பால் ஊத்தித்தான் எடுத்துக்கிட்டு வந்தேன். ஆனா இது நெனைச்சுக்கிட்டு அழறப்போவெல்லாம் பால் வாங்கி ஊத்த என்னாலே முடியுங்களா?"

"உன்னாலே முடியாவிட்டால், என்ன? உன் மனைவி இல்லையா?"

"அதை ஏன் கேட்கிறீங்க! உலக வழக்கத்தை யொட்டிச் சொல்லப் போனா அவ 'செத்துப் போயிட்டா'ன்னு மறைச்சுச் சொல்லணும். ஆனா நான் நிஜத்தையே சொல்லிப்பிடறேன்—அவளுக்கு இல்லாத மானமா, எனக்கு......?"

"அது என்ன அப்பா, அப்படிப்பட்ட விஷயம்.........?"

"அதுவுங்களா! அவ என்னை மோசம் பண்ணிப்பிட்டு அந்தப் பாவிப் பயலோட ஓடிப் போயிட்டாளுங்க!"

"எந்தப் பாவிப் பயலோடு......?"

"அவனை என்னமா உங்களுக்குத் தெரியுமுங்க? அவன் எங்க ஊர்ப் பையன்; இந்தச் சண்டையிலே பாவ புண்ணியத்துக்கு அஞ்சாம பேரம் பண்ணி நாலு காசு சம்பாதிச்சி வச்சிருந்தான். அவனோடே அவ போயிட்டா! போன புண்ணியவதி சும்மா போவாம இந்தச் சனியனை வேறே என் காலிலே கட்டிப்பிட்டுப் போயிட்டா! பெண்டாட்டி, பிள்ளையெல்லாம் என்ன என்கிறீங்க?—நம்ம கையிலே நாலு காசு இருந்தாத்தான்!"

"சரி, அவள் போனால் போகிறாள்; நீ இருக்கிறாயோ, இல்லையோ?"

"நான் இருந்து என்னத்தைப் பண்ணறதுங்க? பொழைப்பைத் தேடிப் போவேனா, இந்தப் புள்ளையைப் பார்த்துக்கிட்டு இருப்பேனா?—அதுக்குத்தான் இதுக்குத் தினம் கொஞ்சம் அபினைக் கொடுத்துப் படுக்க வச்சுடுவேன்; இது போதையிலே விறைச்சுக்கிட்டுக் கிடக்

கும். நான்பாட்டுக்கு என் வேலையைப் பார்க்க எங்கேயாச்சும் போயிடுவேன்...!"

"ஆமாம், இப்போதுதான் 'இந்த இழவு'களை யெல்லாம் சர்க்கார் ஒழித்து விட்டார்களே, இது உனக்கு ஏது?"

நாச்சியப்பன் சிரித்தான். "உங்களைப் போலொத்த 'பெரிய மனுஷ'ருங்க இருக்கிறப்போ லோகத்திலே எதுதான் கிடைக்காதுங்க? ஒண்ணுக்கு நாலு விலை கொடுத்தா கிடைக்காததெல்லாம் கிடைக்குங்களே!" என்றான்.

அவ்வளவுதான்; முதலியாருக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்து விட்டது. "டேய், ஜாக்கிரதையாகப் பேசு! நீ நினைப்பதுபோல் நான் பெரிய மனுஷனுமில்லை; 'பிளாக் மார்க்கெட்' காரனுமில்லை!" என்று ஒரு துள்ளுத் துள்ளினார்.

"போயும் போயும் அந்த அற்பப் பயலோடு நீங்கள் இவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருந்தீர்களே! அப்போதே அவனைப் பேசாமல் போலீஸாரிடம் பிடித்துக் கொடுத்திருக்க வேண்டும்!" என்றார் முதலியாருக்குப் பக்கத்தில் இருந்தவர்.

இதைச் சொன்னதும் நாச்சியப்பன் வெலவெலத்துப் போய்த் தன்னிடம் சரணாகதி யடைந்து விடுவான் என்று அவர் எதிர்பார்த்தார். ஆனால் அவனோ விழுந்து விழுந்து சிரித்தான்.

முதலியார் அவனை ஏற இறங்கப் பார்த்தார்.

"எதற்கும் ஒரு தகுதி வேண்டாமா? தகுதி யில்லாதவனிடமெல்லாம் போய்த் தகாதவற்றை யெல்லாம் பேசிக் கொண்டா இருப்பது? போலீஸைக் கூப்பிடுங்கள், ஸார்!" என்றார் முதலியாருக்கு எதிர்த்தாற்போல் இருந்தவர்.

"ரயிலோ ஓடிக் கொண்டிருக்கிறது; போலீஸோ இந்தப் பெட்டிக்குள் இல்லை!" என்று சொல்லி, வேடிக்கையாகக் கையை விரித்தார் புரொபஸர்.

"போனாற் போகிறது, புண்ணியமாய்ப் போகட்டும் என்று பார்த்தேன். இவன் இவ்வளவு அதிகப் பிரசங்கியா யிருப்பான் என்று நான் கண்டேனா? அடுத்த ஸ்டேஷன் வந்ததும் இவனைக் கட்டாயம் போலீஸாரிடம் பிடித்துக் கொடுத்துவிட வேண்டியதுதான்!" என்றார் முதலியார்.

நாச்சியப்பன் மேலும் மேலும் சிரித்தான்; சிரித்துக் கொண்டே இருந்தான்.

"தம்பி! பொறு அப்பா, பொறு! சும்மா சிரித்துக் கொண்டே இருக்கிறாயே!" என்றார் முதலியார் பல்லைக் கடித்துக் கொண்டு. அதற்குள் அடுத்த ஸ்டேஷன் வந்து விட்டது. வண்டியும் நின்றது. வண்டி நின்றதோ இல்லையோ, "போலீஸ், போலீஸ்!" என்று கத்தினார் முதலியார். அவரைப் பின்பற்றி அவருடைய ரயில் நண்பர்களும் "போலீஸ், போலீஸ்!" என்று கூக்குரலிட்டனர்.

'என்னமோ, ஏதோ' என்று இரண்டு போலீஸ் ஜவான்கள் அவர்கள் இருக்குமிடத்துக்கு விழுந்தடித்துக் கொண்டு ஓடி வந்தனர்.

நாச்சியப்பனை அவர்களுக்குச் சுட்டிக் காட்டி, "இவன் அபின் வைத்திருக்கிறான்; இவன் அபின் வைத்திருக்கிறான்! இவனைப் பிடித்துக் கொண்டு போங்கள், இவனைப் பிடித்துக் கொண்டு போங்கள்!" என்று ஏககாலத்தில் எல்லோரும் காட்டுக் கத்தலாகக் கத்தினர்.


இப்பொழுதும் நாச்சியப்பன் அவர்கள் எதிர்பார்த்தபடி பதுங்கவுமில்லை, பயப்படவுமில்லை; தயங்கவுமில்லை, தாமதிக்கவுமில்லை. அமைதியுடன் எழுந்தான்; அனுப்புடன் குழந்தையைத் தூக்கினான்.

பாவம், அளவுக்கு மீறிய அபின் மயக்கத்தால் அந்தக் குழந்தை சில்லிட்டுப் போயிருந்தது; அதனுடைய கடைசி மூச்சும் நின்று விட்டிருந்தது!

"இனி கவலை யில்லை; கடவுள் இப்பொழுதுதான் என்னிடம் கருணை காட்டி யிருக்கிறார்!" என்றான் நாச்சியப்பன்.

போலீஸார் அவன் கையைப் பற்றினர்!

"மவராசர்கள்! நல்லா யிருக்கணும். என்ன இருந்தாலும் கொஞ்ச காலத்துக்கு எனக்கு வயித்துக் கவலை இல்லாமல் செய்த புண்ணியம் அவர்களைச் சேர்ந்தது தானே!" என்று அவன் தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.



குருக்கள்:— இப்படிக் கும்பலாக வந்து தொந்தரவு செய்தால் நான் என்ன செய்வது? எல்லாரும் வரிசையாக 'க்யூ'விலே வந்து நின்றால் தான் அர்ச்சனை பண்ணுவேன்!

ததைக் கவனிக்கவில்லை. முதலியார் இதைக் கவனித்ததும் தம்முடைய மனைவியை மெல்லத் தொட்டு, "தங்கம், தங்கம்!" என்றார்.

தங்கம் திடுக்கிட்டு எழுந்து, "எந்தப் பட்டணம் பாழாய்ப் போச்சு?" என்று எரிந்து விழுந்தாள்.

முதலியார் நெருப்பை மிதித்து விட்டவர்போல் குதித்து அவள் பக்கம் திரும்பி, "இதுகூட விடா, என்ன? 'குழந்தை அழுகிறது' என்று சொல்ல வந்தால் இப்படி எரிந்து விழுகிறாயே!" என்றார் பரிதாபத்துடன்.

தங்கம் போனாற் போகிறதென்று பொங்கி வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு, குழந்தையைத் தூக்கிக் கொண்டாள்.

ஆனால் அந்தக் குழந்தையோ பொல்லாத குழந்தையாயிருந்தது. அது 'கண்ணே!' என்றாலும் கேட்கவில்லை; 'கற்கண்டே!' என்றாலும் கேட்கவில்லை. திறந்த வாயை மூடாமல் அழுத அந்தக் குழந்தையை எப்படி எப்படியெல்லாமோ தேற்றிப் பார்த்தாள் தங்கம். அது எதையும் லட்சியம் செய்யவில்லை. பால் கொடுத்தாலும் குடிக்க மறுத்து அது வீரிட்டு அழுதது.

முதலியார் பெட்டியைத் திறந்து ஒரு 'ஜாக்ஸோ' பிஸ்கட்டை எடுத்துக் குழந்தையிடம் கொடுத்தார். அந்தப் பிஸ்கட்டை வாங்கி அது ஒரு கணமும் உற்றுப் பார்த்தது. பிறகு, கீழே விட்டெறிந்து விட்டு 'ஓ'வென்று அலறியது.

அடுத்தாற்போல் ஓர் ஆரஞ்சுப் பழத்தை எடுத்துக் கொடுத்தார்; அதையும் கீழே உருட்டி விட்டது.

முதலியார் சளைக்கவில்லை; "இது வேணுமாடா, ராஜா!" என்று சொல்லிக் கொண்டே, மூன்றாவதாக ஒரு 'ஸெலுலாய்ட்' பொம்மையை எடுத்துக் கொடுத்தார்.

அதை வாங்கிக் கொண்டதும் குழந்தை அழுகையை நிறுத்தி விட்டது. அதன் தாயார் மீண்டும் 'பணக்காரத் தூக்க'த்தில் ஆழ்ந்து விட்டாள்!

★

"அப்பாடி! மழை ஓய்ந்தது!" என்று சொல்லிக்கொண்டே முதலியார் நாச்சியப்பன் பக்கம் திரும்பினார்.

"இது என்ன மழையுங்க? நம்ம குழந்தை அழும்போது பார்க்கணும்!" என்றான் நாச்சியப்பன்.

அவ்வளவுதான்; 'அதற்காக நீங்கள் காத்திருக்க வேண்டாம்!' என்று சொல்வதுபோல், அவனுடைய குழந்தை திடீரென்று விழித்துக் கொண்டு கத்த ஆரம்பித்து விட்டது.

'கண்ணே, கற்கண்டே!' என்று கொஞ்சுவதற்குப் பதிலாக, 'சனியனே, பீடையே!' என்று திட்டிக் கொண்டே நாச்சியப்பன் குழந்தையைத் தூக்கினான். அது தன் அழுகையை நிறுத்தவில்லை. அதற்காக நாச்சியப்பன் பெட்டியைத் திறந்து 'ஜாக்ஸோ' பிஸ்கட்டையோ, ஆரஞ்சுப் பழத்தையோ, 'ஸெலுலாய்ட்' பொம்மையையோ எடுத்து அதன் கையில் கொடுக்கவில்லை; அவற்றுக்குப் பதிலாக அந்தக் குழந்தையின் கன்னத்தில் அவன் 'சுளீர்' என்று ஓர் அறை கொடுத்து விட்டுத் தன்னுடைய கோட்டுப் பையில் கையை விட்டான். அவன் எடுக்கப் போகும் வஸ்துவைப் பார்ப்பதற்காக முதலியார் தம் கண்களை ஆவல் மிகுதியால் அகல விரித்துக் கொண்டார். நாச்சியப்பன் ஒரு சின்னஞ் சிறு தகர டப்பியைக் கையில் எடுத்தான். அதற்குள் பாலா இருந்தது என்கிறீர்கள்?—இல்லை, அபின்!

"இதென்ன, அபின்போலிருக்கிறதே!" என்றார் முதலியார்.

"என்ன, அப்படிச் சொல்றீங்க?—இது அபினேதான்!" என்று சொல்லி, நாச்சியப்பன் அவருடைய சந்தேகத்தைத் தீர்த்து வைத்தான்.

"இது என்னத்துக்கு!" என்று முதலியார் ஒன்றும் புரியாமல் கேட்டார்.

"நம்ம குழந்தைக்குத்தானுங்க!" என்று நாச்சியப்பன் சாவதானமாகச் சொன்னான்.

"அட, பாவி! குழந்தைக்கு யாராவது அபினைக் கொடுப்பார்களோ!" என்று அலறினார் முதலியார்.

நாச்சியப்பன் சிரித்தான்.

"நிஜமாகவா!" என்று முதலியார் மீண்டும் கேட்டார்.

"ஆமாங்க, ஆமாம்!" என்று சொல்லிக் கொண்டே, அழுத குழந்தையின் வாயில் அவன் கொஞ்சம் அதிகமாகவே அபினைத் திணித்தான். சிறிது நேரத்துக்கெல்லாம் அது அபின் தின்ன மயக்கத்தில் அயர்ந்து தூங்க ஆரம்பித்து விட்டது. "இனிமே பொழுது விடியற வரை தொல்லையில்லீங்க!" என்று மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொண்டே, அவன் அந்த டப்பியை எடுத்து மீண்டும் கோட்டுப் பையில் பத்திரமாக வைத்துத் தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

இருந்தாலும் அதை ஒருவாறு அடக்கிக் கொண்டு, 'எழுதப் படிக்கத் தெரியாதவன்கிட்ட சூது வாது ஏதுங்க? வேணும்னா இதோ பாருங்க!" என்று சொல்லி, அவன் தன் மடியில் பத்திரமாக முடி போட்டு வைத்திருந்த டிக்கெட்டை அவிழ்த்துக் காட்டினான்.

அதே சமயத்தில் அடுத்த ஸ்டேஷனில் வண்டி நின்றது. எதிர்பாராத விதமாக காச்சியப்பன் ஏறியிருந்த பெட்டிக்குள் டிக்கெட் பரிசோதகர் ஏறினார். அவன் சொன்னதற்கு ஏற்றாற்போல் அவரைக் கண்டதும் 'எழுதப் படிக்கத் தெரிந்தவன்' ஒருவன் ஓடி ஒளிந்து கொள்ளப் பார்த்தான். டிக்கெட் பரிசோதகர் விடவில்லை; விரைந்து சென்று, "எங்கே டிக்கெட்?" என்று கேட்டார். அவன் விழித்தான். உடனே அவனைக் கீழே இறக்கி விட்டுவிட்டு அவர் மேலே போனார்.

இந்தக் காட்சியைக் கண்டதும் எல்லோருடைய வாய்களும் அடைத்து விட்டன. காச்சியப்பன் காலியான இடத்தில் கூனிக் குறுகி உட்கார்ந்து கொண்டான். இந்த அவனியில் எடுத்ததற்கெல்லாம் அஞ்சி அஞ்சிச் சாகும் கூட்டத்தைச் சேர்ந்தவன்தானே, அவன்?

★

இத்தனை ரகளைகளையும் அதுவரை கவனித்தும் கவனியாதவர் போலிருந்த பீதாம்பர முதலியார், "ஏன், அப்பா! உனக்கு எந்த ஊர்?" என்று காச்சியப்பனைப் 'பொழுது போக்கு'க்காகக் கேட்டு வைத்தார்.

"மாயவரம்தானுங்க!" என்றான் காச்சியப்பன்.

"இப்பொழுது எங்கே பயணம்?"

"பட்டணத்துக்குத்தான்!"

"அங்கே என்ன வேலையோ?"

"வேலை என்ன வேலை! வயித்துப் பிழைப்புக்கு அங்கே ஏதாச்சும் வழி பிறக்கும்னுதான் போறேன்."

"இதற்கு முன்னே நீ என்ன வேலை செய்து கொண்டிருந்தாய்?"

"மரம் ஏறிக்கிட்டு இருந்தேனுங்க."

"அப்படின்னா, நீ 'மாஜி-கள் இறக்கும் தொழிலாளி' போல இருக்கு!"

"ஆமாங்க."

"அதுதானே பார்த்தேன் — குடிக்கக் கள் இறக்கிக் கொடுத்து நீ எத்தனையோ குடிகளைக் கெடுத்தாயல்லவா? அந்தப் பாவமெல்லாம் சேர்ந்து உன்னை இந்தக் கதிக்கு இப்போது கொண்டுவந்து விட்டிருக்கிறது!" என்றார் 'புண்ணியம் செய்து வந்த' முதலியார்.

காச்சியப்பன், "இந்த இடத்திலேதானுங்க உங்களுக்கும் எனக்கும் வித்தியாசப் படுது! நீங்க சொல்லுகிறாப்போல நான் செய்தது பாவமா இருந்திருந்தா நானும் உங்களைப் போலவே இருந்திருப்பேனுங்களே!" என்றான்.

முதலியாரை இது தூக்கிவாரிப் போட்டது. ஒருகணம் அவர் அயர்ந்து போனார். மறுகணம் தம்முடைய இயற்கையான சுபாவத்தால் அதைச் சமாளித்துக் கொண்டு, "பேஷ், பேஷ்! உலகத்தில் பாவம் செய்கிறவர்கள்தான் நன்றாயிருக்கிறார்கள் என்று நீ சொல்கிறாய் போலிருக்கிறது! நல்ல ஆளப்பா, நீ!" என்று கூறிச் சிரித்தார். ஆனால் அந்தச் சிரிப்பு உள்ளத்தோடு ஒன்றவில்லை என்பதை அவருடைய பரந்த முகம் பளிச்சென்று எடுத்துக் காட்டிற்று.


இந்தச் சமயத்தில் தூங்கிக் கொண்டிருந்த முதலியாரின் குழந்தை விழித்துக் கொண்டு அழுதது. அதற்குள் 'பணக்காரத் தூக்க'த்தில் சற்றே லயித்துவிட்டிருந்த அதன் தாயார், குழந்தை அழு



ராமு (தன் தகப்பனாரிடம்):—என் உபாத்தியாயர் ரொம்பவும் நன்றி கெட்டவர், அப்பா!

தகப்பனார்:—ஏன்டா?

ராமு:—ஏனா? என் பேனாக் கத்தியை வாங்கி அவர் தன் பென்சிலைச் சீவிக் கொண்டு அந்தப் பென்சிலால் எனக்குக் குறைந்த மார்க்குக் கொடுத்தார்!



யானை :— அடி சமத்தே! நான் தூணிலே ஒளிந்து கொண்டிருப்பதை எப்படியோ கண்டுபிடித்து விட்டாயே!

எழுந்து விட்டால் அதனுடன் மாரடிப்பதற்கு வேண்டிய தெம்பும் அவனுக்கு அந்தச் சமயம் இல்லை. கீழே உட்கார்ந்து விடலாம் என்று பார்த்தாலோ எங்கும் ஒரே பெட்டியும் படுக்கையுமா யிருந்தன. அவற்றின் மேலே உட்காருவதற்கும் அவனுக்கு 'என்ன சொல்வார்களோ, என்னவோ' என்று கொஞ்சம் அச்சமா யிருந்தது. ஆனாலும் அவன் குழந்தையை வைத்துக் கொண்டு எவ்வளவு நேரம்தான் நின்று கொண்டிருக்க முடியும்? — கொஞ்சம் துணிந்து அங்கிருந்த பெட்டி ஒன்றைச் சிறிது நகர்த்த முயன்றான்.

அவ்வளவுதான்; அந்தப் பெட்டிக்கு அடுத்தாற்போலிருந்த பெஞ்சியில் காலை நீட்டிக் கொண்டு படுத்திருந்த அதன் சொந்தக்காரர் சீறி எழுந்து, "ஓ! எடு, கையை! என்னிடம் சொன்னால் நான் நகர்த்த மாட்டேனா? நீ எதற்கு என்னுடைய பெட்டியைத் தொட வேணும்? எவ்வளவு பளு இருக்கிறது என்று பார்த்துக் கொள்கிறாயா — கண்ணை மூடினால் அடித்துக் கொண்டு போய்விடலாமென்று? எட்டிப் போடா, நாயே!" என்று இரைந்தார்.

உண்மையிலேயே நாச்சியப்பன் நாயாயிருந்திருந்தால் அவரைக் கட்டாயம் கடித்திருப்பான். ஆனால் ஏனோ அவன் மனிதனாயிருந்தான். அதன் காரணமாக, "நானும் எவ்வளவு நேரமா நின்னுக்கிட்டு வாரதுங்க? குழந்தை வேறே கையிலே இருக்குது. இல்லாட்டிப்போனா, நான் பேசாம நின்னுக்கிட்டே வருவேன். பெட்டிதானே, தொட்டா தோசமில்லேன்னு தொட்டேன்; அதுக்கு இப்படிக் கோவிச்சுக்கிறீங்களே!" என்றான்.

"கோபித்துக் கொண்டேனா! உன்னுடைய கையையே ஒடித்துப் போட்டிருப்பேன்; போனாற் போகிறதென்று சும்மா விட்டேன்!" என்று உறுமினார் பெட்டிக்காரர்.

பொறுமை இழந்த நாச்சியப்பன், "அப்படிப்பட்டவரு இப்படிக் 'கும்பலிலே கோவிந்தா' போட்டுக்கிட்டு வரக் கூடாதுங்க!" என்றான்.

உடனே, "அதிகப் பிரசங்கி! பல்லை உடைத்து விடுவேன், பல்லை!" என்று முஷ்டியை மடக்கிக் கொண்டு எழுந்தார் பெட்டிக்காரர்.

அதற்குள் அங்கிருந்த சில பிரயாணிகள், "கிடக்கிறான், கழுதை! விட்டுத் தள்ளுங்கள், ஸார்!" என்று பெருந்தன்மையுடன் சொல்லி, அந்தப் பெட்டிக்காரரை உட்கார வைத்தனர்.

"பல்லை உடைக்க வேண்டுமானால் அவனைத் தொட வேண்டுமே என்று பார்க்கிறேன். இல்லையென்றால் கட்டாயம் அவனுடைய முப்பது பற்களையும் உடைத்துக் கையில் கொடுத்திருப்பேன்!" என்று உச்சஸ்தாயியில் கத்திக் கொண்டே உட்கார்ந்தார் 'உயர்ந்த ஜாதிக்கார'ரான பெட்டிக்காரர்.

"ஏன், வெளியே வீசி எறியப்படாதோ? கையில்தான் கொடுக்க வேண்டுமோ?" என்றார் அவருக்கு எதிர்த்தாற்போலிருந்த ஓர் அழுத்தல் பேர்வழி.

அவருக்கு அருகிலிருந்த ஒரு புரொபஸர், "தப்பு! தப்பு! மொத்தம் முப்பத்திரண்டு பற்கள், ஸார்!" என்று கூறி 'ஹோ' வென்று சிரித்தார்.

"எல்லாம் பார்த்துத்தான் சொன்னேங்காணும்! அவனுக்கு முன் வரிசையில் இரண்டு பற்களைக் காணோம்!" என்றார் பெட்டிக்காரரும் சிரித்துக் கொண்டே.

இந்தச் சமயத்தில் இன்னொரு பிரயாணி ஒரு பெரிய சந்தேகத்தைக் கிளப்பி விட்டார். "ஏன், ஸார்! இவன் டிக்கெட் வாங்கியிருப்பானோ!" என்னும் சந்தேகம்தான் அது!

அவன் டிக்கெட் வாங்கியிருக்காவிட்டால் தாம் வாங்கிக் கொடுக்கலாம் என்ற நோக்கத்துடன் அவர் அந்தச் சந்தேகத்தைக் கிளப்பி விடவில்லை. 'டிக்கெட் செக்கர்' வந்து அவனை இறக்கி விடுவதற்கு முன்னால் தாமே இறக்கி விட்டு விடலாமே என்ற பரந்த நோக்கத்துடன்தான் அவர் அந்தச் சந்தேகத்தைக் கிளப்பிவிட்டார்!

இதைக் கேட்டதும் நாச்சியப்பனுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.



திருந்த மீசைகள் மட்டும் அவனுடைய குழி விழுந்த கன்னங்களை மறைத்துக் கொண்டிராவிட்டால், அவனை ஒரு கணம் கூட யாராலும் பார்த்துச் சகித்துக் கொண்டிருக்க முடியாது. தலையையாவது அவன் கொஞ்சம் எண்ணெய் தடவி வாரிக் கொண்டிருக்கலாம். அதற்கும் அவனுக்கு வசதியில்லையோ, நேரமில்லையோ, அல்லது மனந்தான் இல்லையோ—யார் கண்டார்கள்?

இந்த லட்சணத்தில் இருந்த அவனைத் தொடர்ந்து நல்ல வேளையாக 'மனைவி' என்று சொல்லும் முறையில் யாரும் வரவில்லை. ஆனால் அவனுடைய இடுப்பில் மட்டும் ஒரு குழந்தை இருந்தது. தோற்றத்தில் அது அவனையே ஒத்திருந்தது. அந்தக் குழந்தைக்கு ஒரு வருஷம் பூர்த்தியாகி யிருக்கலாம். 'இன்று சாகுமோ, நாளை சாகுமோ!' என்று இருந்த அதற்குக் குரல் மட்டும் எட்டரை கட்டைக்கு மேல் இருந்தது. ஜனக் கூட்டத்தில் இடிபட்டு அது 'வீல், வீல்' என்று கத்திய சத்தம், ரயிலின் ஊதல் சத்தத்தைக்கூடத் தோற்கடித்து விட்டதென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

நாச்சியப்பனுடைய கையில் பெட்டியும் இல்லை, படுக்கையும் இல்லைதான். ஆனால் அவை யிரண்டும் இருந்தால் அவனுக்கு எவ்வளவு தொந்தரவா யிருக்குமோ, அதற்குமேல் அந்தக் குழந்தை இருந்தது தொந்தரவா யிருந்தது!—'சிசுஹத்தி' செய்வது மகா பாவமென்றும், அதனால் ஏழு நரகங்களுக்கும் மேலான நரகத்துக்குச் செல்லவேண்டி நேரும் என்றும் சாஸ்திரம் பயமுறுத்துவதாக நாச்சியப்பன் மட்டும் கேள்விப்பட்டிராவிட்டால், நிச்சயம் அந்தக் குழந்தையை அவன் உடைப்பில் தூக்கிப் போட்டுக் கொன்றே விட்டிருப்பான்!

★

பீதாம்பர முதலியாரும் நாச்சியப்பனும் ஏறக்குறைய ஒரே சமயத்தில்தான் அந்தப் பெட்டிக்குள் ஏறினர். ஆனால் எதற்கும் ஒழுக்கத்தைக்கூட மீறி நிற்கும் அந்தப் பாழாய்ப் போன 'அந்தஸ்து' என்று ஒன்று வந்து குறுக்கே நிற்கிறதல்லவா? அதன் காரணமாக, முதலியாருக்கும் அவருடைய மனைவிக்கும் மட்டும்தான் உள்ளே இருந்தவர்கள் நெருக்கியடித்து உட்கார்ந்து கொஞ்சம் இடம் விட்டனர். நாச்சியப்பனையோ யாரும் கவனிக்கவேயில்லை. எல்லோரும் அவனை ஏதோ ஒரு விநோத ஜந்துவைப் பார்ப்பது போல் பார்த்தனர். அப்படிப் பார்த்தவர்கள் சும்மா இருக்கவும் இல்லை; தங்களுக்குள் அடிக்கடி ஏதோ பேசிக் கொள்வதும், 'களுக், களுக்' கென்று சிரிப்பதுமாக இருந்தனர்.

உலகத்தில் ஏழை, எளியவர்களைக் கண்டால் எள்ளி நகையாடுபவர்கள்தான் அதிகம் என்னும் உண்மையை நாச்சியப்பன் உணர்ந்திருந்தானோ என்னமோ, மேற்கூறிய காட்சிகளையெல்லாம் கண்டும் காணாதவன் போல் இருந்தான். அந்தச் சமயத்தில், தான் உட்காருவதற்கு எப்படியாவது கொஞ்சம் இடம் கிடைத்தால் போதும் என்பதுதான் அவனுடைய ஒரே நோக்கமா யிருந்தது. அதற்காக, அந்தப் பெட்டிக்குள் உட்கார்ந்திருந்த ஒவ்வொருவரையும் அவன் பரிதாபத்துடன் பார்த்தான்; "கொஞ்சம் இடம் விடுங்கள், ஐயா!" என்று கெஞ்சிக் கெஞ்சிக் கேட்கவும் கேட்டான். ஊஹூம், யாரும் அசைந்து கொடுக்கவில்லை.

நேரம் போய்க் கொண்டே இருந்தது. ஸ்டேஷனுக்கு ஸ்டேஷன் வண்டி நிற்பதும் கிளம்புவதுமாக ஓடிக் கொண்டே இருந்தது. ரயிலின் ஆட்டத்துக் கேற்ப நாச்சியப்பன் ஆடிக்கொண்டே சென்றான். அந்த ஆட்டத்தில் குழந்தையின் தூக்கம் எங்கே கலைந்து விடுமோ என்று அவனுக்குப் பயமா யிருந்தது. அப்படி

'மவராசர்கள்!'

விந்தன்

"வழியில் எந்தவிதமான ஆபத்தும் நேராமற் போய்ச் சேரவேண்டுமே, கடவுளே!" என்று எண்ணிப் பெருமூச்சு விட்ட வண்ணம், மாயவரம் ஜங்ஷனில் 'திருவனந்தபுரம் பாஸஞ்சர்' வந்து நின்றது. தங்களுடைய பெட்டி, படுக்கைகளுடன் ஜனங்கள் விழுந்தடித்துக் கொண்டு ரயிலை நோக்கி ஓடினர். அப்படி ஓடியவர்களில் பிரபல வியாபாரியான பீதாம்பர முதலியாரும் ஒருவர். அவர் தம்முடைய 'யுத்தகாலத் தொந்தி'யைச் சுமக்க முடியாமல் சுமந்து சென்றது பார்ப்பதற்கு வேடிக்கையாயிருந்தது. அவரைப் பின்பற்றி அவருடைய மூன்றாவது மனைவி, கையில் குழந்தையுடன் ஓட்டமும் நடையுமாக நடந்தாள். அவர்கள் இருவரையும் தொடர்ந்து 'போர்ட்டர்' ஒருவன் தலையில் பெட்டியுடனும் கையில் படுக்கையுடனும் மூக்கி முனகி நடந்து கொண்டிருந்தான்.



ஏற்கெனவே முதல் வகுப்பில் வேண்டிய இடத்துக்கு 'ரிஸர்வ்' செய்துவிட்டு, அப்புறம் சாவகாசமாக வந்து வண்டி ஏறுவதற்குரிய வசதி பீதாம்பர முதலியாருக்கு இருக்கத்தான் இருந்தது. இருந்தாலும் சிக்கனத்தை உத்தேசித்து முதலியார் எப்பொழுதும் மூன்றாம் வகுப்பில்தான் பிரயாணம் செய்வது வழக்கம். 'சௌகரியமாக வாழ்வதற்கு வசதியிருந்தும் உலகத்தில் வாழத் தெரியாதவர்கள் எத்தனையோ பேர் இல்லையா? — அவர்களில் முதலியாரும் ஒருவர் போலிருக்கிறது!' என்று நீங்கள் நினைத்து விடாதீர்கள். ஏனெனில், மூன்றாம் வகுப்பில் பிரயாணம் செய்வதற்கு முதலியார் சொல்லும் காரணமே வேறு. அந்தக் காரணம் என்னவாம், தெரியுமா? மகாத்மா காந்தி மூன்றாம் வகுப்பில் பிரயாணம் செய்து கொண்டிருந்தாராம்; அவரைப் பின்பற்றி நம் முதலியாரும் சிரமத்தைப் பொருட்படுத்தாமல் மூன்றாம் வகுப்பில் பிரயாணம் செய்கிறாராம்!

இவ்வாறு சொல்லிக் கொள்வதின் மூலம் முதலியார் தம்மை மகாத்மா காந்திக்கு அடுத்த வாரிசாக எண்ணிக் கொண்டிருந்தார். அந்த மகானைப் போலவே தாமும் ஏழைகளிடத்தில் இரக்கம் கொண்டவர் என்று அவர் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் உண்மையோ வேறு விதமாயிருந்தது. ரயில் பிரயாணத்தில்தான் நம்முடைய முதலியார் காந்தி மகாத்மாவைப் பின்பற்றினாரே தவிர, வாழ்க்கைப் பிரயாணத்தில் அவரைப் பின்பற்றவில்லை. அப்படிப் பின்பற்றியிருந்தால் ஒருவேளை அவருக்கு அந்த 'யுத்தகாலத் தொந்தி' விழாமலே இருந்திருந்தாலும் இருந்திருக்கலாமல்லவா?

இந்த 'ஏழை-பங்காளர்' ஏறி உட்கார்ந்ததும் ரயில் நகர்ந்தது. அந்தச் சமயத்தில் 'கார்டு' அலறியதையும் பொருட்படுத்தாமல் ஒருவன் தலை தெறிக்க ஓடிவந்து முதலியார் ஏறியிருந்த பெட்டிக்குள் ஏறினான். அவன் பெயர் நாச்சியப்பன். யாரோ ஒரு 'மவராசன்' குப்பையில் எறிவதற்காக வைத்திருந்த பழைய கோட்டு ஒன்றை அவனிடம் கொடுத்து, அவனுக்குத் தெரியாமல் திருட்டுத்தனமாகப் புண்ணியத்தைச் சம்பாதித்துக் கொண்டிருந்தான். அந்தக் கோட்டைத்தான் அவன் அன்று அணிந்து கொண்டிருந்தான். அதற்குள் சட்டையோ, பனியனோ ஒன்றுமில்லை. அவனுடைய அரையை ஓர் அழுக்கடைந்த 'கைலி' அலங்கரித்துக் கொண்டிருந்தது. முகத்தின் அழகைப் பற்றியோ சொல்லவே வேண்டாம். அந்த நீண்டு வளர்ந்

வாத்தியம் கிருஷ்ணய்யரைப் பரீட்சை செய்து விட வேண்டும் என்று அவர் எண்ணியிருந்தார். அவருடைய விஷயங்களையெல்லாம் பிறர் மூலம் நன்கறிந்திருந்த கிருஷ்ணய்யரும் இதற்குத் தயாராகவே இருந்தார். இவ்விதம் இருவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அந்த ரசமான சந்திப்பு எங்கள் வீட்டிலேயே நேர்ந்தது. "கிருஷ்ணா, நீ பாடிக்கொண்டே வாசிக்கும் திறமையுள்ளவன். ஆகையால் வலது கையில் கண்டஜாதி அடதாளத்தையும் இடது கையில் திச்ர ஜாதி திருபுடை தாளத்தையும் அமைத்துக் கொண்டு 'விரிபோணி' வர்ணத்தைப் பாடிக் காண்பிக்க முடியுமா?" என்று கேட்டார். உடனே கிருஷ்ணய்யர் "இம்மாதிரி பாடிக் காட்டத் தங்களுக்கு எவ்வளவு நேரம் பிடித்தது?" என்று கேட்டார். "நான் சில மணி அவகாசத்தில் சாதித்து விட்டேன். உன்னால் எப்போது சொல்ல முடியும்?" என்று சுப்பிரமணிய ஐயர் கேட்டார். இதைக் கேட்ட கிருஷ்ணய்யர், "நான் ஒரு விஷயம் தங்களைக் கேட்க விரும்புகிறேன். அதாவது நீங்கள் சொல்லிய அடதாளத்தை இடது கையிலும் திருபுடை தாளத்தை வலது கையிலும் அமைத்து அந்த வர்ணத்தைப் பாடிக் காட்ட முடியுமா?" என்று கேட்டார். இதைக் கேட்டதும் சுப்பிரமணிய ஐயருக்கு அளவில்லாக் கோபம் உண்டாகி விட்டது. "பாட்டுக்கு ஏற்பட்ட தாளத்தை வலது கையினால்தான் போட வேண்டும். நீ சொல்லுகிறபடி சாதிக்க யாராலும் இயலாது" என்று சொன்னார். உடனே கிருஷ்ணய்யர் "பெரியவர்களாகிய தாங்கள் கோபிக்கக் கூடாது. 'இது யாராலும் இயலாது' என்று நீங்கள் சொன்னதை இதோ நான் பாடிக் காட்டுகிறேன்" என்று அம்மாதிரியே மாற்றி யமைத்துப் பாடியுங் காட்டினார். இதைக் கண்ட சுப்பிரமணிய ஐயர் திடுக்கிட்டார். "ராட்சஸனுக்கும் ஒரு புரோட்சஸன் உண்டு என்றபடி என்னை இன்று நீ ஜயித்தே விட்டாய்!" என்று மிகவும் பாராட்டிக் கொண்டாடினார்.

* * *

ஸ்ரீ கிருஷ்ணய்யர் கடவாத்தியத்தில் சாதித்த ஆச்சரியமான வேலைகளைக் கண்டு வியந்த சிலர் தாங்களும் அம்மாதிரி செய்ய எண்ணியபோது ஏற்பட்ட சில சம்பவங்கள் மிகவும் விநோதமானவை.

குரும்பல் வேம்புவையர் என்று ஒருவர் இருந்தார். அவருக்குக் கிருஷ்ணய்யரிடம் மட்டற்ற பக்தி உண்டு. அவருக்கு உபாயமான தாள ஞானம் இருந்த படியால், ஸ்ரீ கிருஷ்ணய்யர் வாசிப்பை அடிக்கடி கேட்டு, தாமும் பஜனைகளிலாவது கடம் வாசிக்கவேண்டும் என்றெண்ணி, ஓயாமல் சாதகம் செய்து வந்தார். தாள விஷயங்களில் அவருக்கு நல்ல தேர்ச்சி இல்லை. ஆனால் பானையை எறிவது, பிடிப்பது, சுற்றுவது, உருட்டுவது போன்ற செய்கைகளில் வெகுவாய் ஈடுபட்டிருந்தார். ஒருநாள் பஜனையில் இவர் வாசித்துக் கொண்டிருக்கையில், இவருடைய நண்பர்கள் தனியாவர்த்தம் வாசிக்கும்படி உற்சாகப்படுத்தினார்கள். அவரும் குஷியாய் வாசித்து வந்தார். அப்போது கிருஷ்ணய்யரைப் போலவே பானையைத் தூக்கி எறிந்து பிடித்தார். அனைவரும் கரகோஷம் செய்தார்கள். பிறகு பானையை வலது கையால் பிடித்து தலையைச் சுற்றிக்கொண்டு வரும்போது சுற்றுப்புற அமைப்பின் நிகர் இல்லாத படியால், பின் பக்கத்திலிருந்த சுவரில் பானை மோதி, அதன் வாய் விளிம்பு மட்டும் கடைசியில் வேம்புவையர் கையில் மிருந்து நின்றது!

தஞ்சாவூரில் பெருமினை கோவிந்தன் என்ற தவில் வித்துவான் ஒருவர் இருந்தார். அவருக்குக் கடம் கிருஷ்ணய்யரிடம் தேவதா விசுவாசம். அவரைப் போலவே தன்னுடைய வாத்தியத்திலும் ஏதாவது விசித்திரமான செய்கைகளைச் சாதித்துக் காட்ட எண்ணி, வலது கையில் உள்ள தவில் வாசிக்கும் கழியை மேலே சுழற்றி எறிந்து இடது கையால் பிடிப்பதும், அதே போல் இடது கையால் எறிந்து வலது கையால் கழியைப் பிடிப்பதுமான ஓர் அபூர்வ சாதகத்தைச் செய்திருந்தார். தவிலில் தனியாவர்த்தம் வாசிக்கையில் இம்மாதிரி செய்து வந்தார். ஒரு சமயம் கல்யாண வீட்டில் வாசித்துக் கொண்டிருக்கையில், இந்தச் செய்கையால் அனைவரையும் மகிழ்விக்க எண்ணி, கழியை மேலே சுழற்றி எறிந்தார். ஆனால் வலது கையை விட்டுச் சுழன்று கொண்டே புறப்பட்ட கழியானது திரும்பி வராமல் மேலே உள்ள கீற்றுக் கொட்டகையில் பாய்ந்து சிக்கிக் கொண்டது. உடனே நாதசுர வித்துவான் "அண்ணா, கொஞ்சம் பொறுங்கள்! அது திரும்பி வரத் தாமதமாகும்!" என்று சொன்னார். அன்று முதல் அவர் இந்த அடாபிடியை நிறுத்தி விட்டார்.

கற்றோரும் மற்றோரும் வியக்கும் வண்ணம் கடவாத்தியத்தில் தமக்கு முன்னுமில்லை, பின்னுமில்லை என்ற இணையற்ற கீர்த்தியை நிலை நாட்டிய கிருஷ்ணய்யர் சுமார் பதினைந்து வருஷம் இந்தக் கலைக்குப் பணியாற்றி முப்பத்தெட்டாம் வயதில் முருகன் திருவடி அடைந்தார்.



திறமை குறைந்தவராயும் இருந்தார். ஆகையால் எல்லா சிரமத்தையும் பஞ்சாபகேச பாகவதரே மேற்கொள்ள வேண்டியதாயிருந்தது. அதே கல்யாண வீட்டில் கச்சேரிக்காக அழைக்கப்பட்டிருந்த கடம் கிருஷ்ணய்யர் மேற்படி கதைக்கு வந்திருந்தார். பாகவதர் சிரமப்படும் நிலைமையை அவர் உணர்ந்தார். இனி அதை வளரவிடக் கூடாது என்றெண்ணி கிருஷ்ணய்யர் உடனே எழுந்தார். பின் பக்கம் போய் தாசரதி பாகவதரிடம் இருந்த தாளத்தைத் தம் கையில் வாங்கிக்கொண்டு பின்னால் நின்று பாட ஆரம்பித்து விட்டார். காலஞ்சென்ற கிருஷ்ண பாகவதரின் கதைகளில் அவர் சில வருஷங்களாக அடிக்கடி கடம் வாசித்து அனுபவப் பட்டிருந்தபடியால், அன்று நடந்த நந்தன் சரித்திரத்தைத் திறம்பட வகித்துப் பாடிக் கதைக்குப் பூர்ணமான சோபையை அளித்து விட்டார். சபையோர்களும் ஸ்ரீ கிருஷ்ணய்யரின் சிநேகப் பான்மையையும் கர்வமற்ற சுபாவத்தையும் வியந்து புகழ்ந்தார்கள். அது மட்டுமா? பஞ்சாபகேச பாகவதருக்குத் தகுதியான 'ஸெட்' அமையும் வரை, சில மாதங்கள் அவரே பின்பாட்டாக நின்று பாடி வந்தது குறிப்பிடத்தக்கது.

* * *

மைசூர் ஆஸ்தான வித்துவானாகிய திருவையாறு சுப்பிரமணிய ஐயர் நல்ல லயஞானி. தாள சாஸ்திரத்தில் கரை கண்டவர். அவருக்குக் கச்சேரி செய்ய வசதியான சாரீரம் இல்லாததால் முழுதும் தாள விவகாரங்களிலேயே ஈடுபட்டிருந்தார். வலது கையில் ஒரு தாளமும் இடது கையில் ஒரு தாளமும் அமைத்துக்கொண்டு பல்லவி பாடுவார். குதர்க்கமான கேள்விகளையும் சிரமசாத்தியமான கணக்குகளையும் தயார் செய்திருந்தபடியால் ஏதாவது கேள்விகளைக் கேட்டுத் திணற அடித்து விடுவார். ஆகவே யாரும் இவரை மனதார விரும்புவதில்லை. கட

கடம் கிருஷ்ணய்யர்

கோட்டு வாத்தியம் ஸ்ரீ துரையப்ப பாகவதர்

கடம் கிருஷ்ணய்யருக்கு ஏற்பட்டு வந்த புகழைக் கண்ட புதுக்கோட்டை மாமுண்டியாப் பிள்ளை என்ற பெரிய கஞ்சிரா வித்துவான் அவரைப் பரீட்சிக்க எண்ணி புதுக்கோட்டைக்கு வரவழைத்தார். இலுப்பூர் பொன்னுசாமிப் பிள்ளை என்ற வித்துவானும் ஸ்ரீ மாமுண்டியாப் பிள்ளையுமாகச் சேர்ந்து சிரமப்பட்டு இவருக்கென்றே பதினாறு களைச் சவுக்கத்தில் மிகவும் நெரடலான ஒரு பல்லவியைத் தயாரித்து வைத்திருந்தார்கள். பொன்னுசாமிப் பிள்ளை பிடில் வாசிக்க, மாமுண்டியாப் பிள்ளையும் கிருஷ்ணய்யரும் பக்க வாத்தியம் வாசித்தார்கள். அப்போது ஏற்கெனவே தயாரித்திருந்த சவுக்க காலப் பல்லவியைப் பொன்னுசாமிப் பிள்ளை மறதியினாலோ, அல்லது வேண்டுமென்றோ எடுப்பை மாற்றியமைத்துப் பல்லவியை வாசித்தார். மாமுண்டியா பிள்ளையோவெனில், ஏற்கெனவே தயாரித்திருந்த பிரகாரம் வாசிக்க ஆரம்பித்தார். இதைச் சடுதியில் உணர்ந்த ஸ்ரீ கிருஷ்ணய்யர் சபையோரை நோக்கி இந்த இருவரும் தலைக்கு ஒரு விதமாய் வாசிப்பதால் தமக்கு யாரைப் பின்பற்றி வாசிப்பது என்று தெரியவில்லை என்று கூறினார். அந்தச் சபையில் மாமுண்டியாப் பிள்ளையின் ஆத்மீக குருவாகிய ஒரு பெரியார் மத்தியஸ்தராயிருந்து, மாமுண்டியாப் பிள்ளை வாசித்த கணக்குப்படி வாசிக்கலாம் என்று சொன்னார். உடனே கிருஷ்ணய்யர் அதே அமைப்பில் பல்லவியைப் பாடிக்கொண்டே சில ஆவர்த்தங்கள் வாசித்தார். கடைசியில் ஒரு தனி ஆவர்த்தமும் வாசித்து முடித்தார். எல்லோரும் ஆச்சரிய வெள்ளத்தில் மூழ்கித் திளைத்தார்கள்.

மத்தியஸ்தராயிருந்த பெரியார் மகா மேதாவியான ஸ்ரீ கிருஷ்ணய்யரைப் புகழ்ந்து ஒரு சிறு உபன்யாசம் செய்தார். அதன் சுருக்கம் பின்வருமாறு: "சங்கீதக் கலையில் கையாளப்பட்டு வரும் வாத்தியங்கள் எல்லாம் அநேகமாய் மரத்தாலாகியவை. ஆகவே இந்த மரங்களுக்கெல்லாம் காலக்கிரமத்தில் மிகுந்த கர்வம் தலைக்கேறிப் போய், தங்கள் தாயாகிய மண்ணை உபயோகமற்றவளாய் எண்ணிப் பரிகசிக்க ஆரம்பித்தன. இதைச் சகிக்காத பூமாதேவி பகவானைக் குறித்துத் தவம் செய்தான். அதில் சந்தோஷமடைந்த பகவான் பிரத்தியட்சமாகி, 'என்ன வரம் வேண்டும்?' என்று கேட்டார். தன் குழந்தைகளாகிய மரங்களால், தான் வெகு அலட்சியமாய் நடத்தப்படுவதையும் இந்த அபகீர்த்தி நீங்கும்படி செய்யவேணும் என்றும் கேட்டுக் கொண்டான் பூமாதேவி. உடனே பகவான், 'நீ வருத்தப்படாதே. கூடிய சீக்கிரம் உன் மனக்குறை என்னால் நீங்கும்' என்று வாக்களித்தார். அதன்படி பகவானே இந்தக் கிருஷ்ணய்யராய் வந்து தோன்றியிருக்கிறார் என்று எண்ணுகிறேன். அவர் மண்ணாலாகிய இந்த வாத்தியத்தைக் கையாண்டு அதற்கோர் பிரத்தியேகமான கௌரவத்தை உண்டாக்கி வருகிறார். நமது புதுக்கோட்டை வித்துவான்கள் நாட்கணக்கில் சிரமப்பட்டுத் தயாரித்த பல்லவியைக் கணப்பொழுதில் அறிந்து கொண்டதுடன், சில நிமிஷங்களில் தகர்த்தே எறிந்து விட்டார். ஆகவே இவர் தெய்வாம்சம் பொருந்தியவர். இந்தக் கலைஞருக்கு நிகரானவர்களை நான் பார்த்ததே இல்லை" என்று மனமாரப் புகழ்ந்தார்.

• • •

தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதர் காலமான பிறகு அவர் செட்டிமார் நாட்டில் ஏற்கெனவே ஒப்புக் கொண்டிருந்த சில கதைகளைச் செய்ய வேண்டுமென்று என் தந்தையும் மேற்படி பாகவதரவர்களின் முக்கிய சிஷ்யருமாகிய தஞ்சாவூர் பஞ்சாபகேச பாகவதருக்கு அழைப்புக்கள் கிடைத்தன. அவற்றைச் செய்து முடிக்க பஞ்சாபகேச பாகவதர் அங்கு போயிருந்தார். ஸ்ரீ பஞ்சாபகேச பாகவதருக்குத் தமக்கெனத் தக்க பின்பாட்டுக்களை அமைத்துக்கொள்ளப் போதிய அவகாசம் இல்லை. ஆகையால் கதைகளில் சுமாராகப் பாடி அநுபவமடைந்திருந்த தாசரதி பாகவதரையும் அவர் தம்பியையும் அழைத்துக் கொண்டு போயிருந்தார். பெரியவர் வயது சென்றவராயும் நிர்வகித்துப் பாடும்

பறி போய்விட்டது. இனி..." என்றான். அதற்குமேல் அவனால் பேசமுடியவில்லை. அவன் நாத் தழுதழுத்தது. அவனுடைய குரலைக் கேட்க மிகவும் பரிதாபமாக இருந்தது.

குமாரகிரி சித்திரலேகாவின் அருகில் நெருங்கிவந்தான். "எல்லாம் தீர்ந்துவிட்டதா? எங்கேயாவது ஏதாவது தீருவது உண்டா? ஒன்று தீர்ந்தால் இன்னொன்று ஆரம்பமாகிறது. ஒன்றின் முடிவுதான் இன்னொன்றின் ஆரம்பம். அப்படியிருக்கும் பொழுது எல்லாம் தீர்ந்து விட்டது என்று எப்படிச் சொல்ல முடியும்?" என்றான்.

குமாரகிரியின் குரலில் வரவர மென்மை அதிகரித்தது; இனிமை தவழ்ந்தது. ஆனந்தபரவசமாகும் பொழுது உண்டாகும் புல்லரிப்பு அதில் தாண்டவமாடியது. "சித்திரலேகா! நான் உன்னைக் காதலிக்கிறேன் என்பது உனக்குத் தெரிந்த விஷயம். நீயும் என்னைக் காதலிக்காவிட்டாலும் என்னை வெறுக்கவில்லை. நீ என் வாழ்க்கையில் வர விரும்புகிறாய். ஆனால் இதுவரை உன்னால் என் வாழ்க்கையில் வாழமுடியவில்லை. ஏனெனில் இதற்குக் காரணம் பீஜகுப்தன் தான். நீ அவனுடைய வாழ்க்கையைத் துயர மயமாக்கிவிட்டாய். அவனும் உன் வாழ்க்கையைத் துயர மயமாக்கிவிட்டான். பீஜகுப்தனுக்கு இப்பொழுது ஒரு ஆதாரம், ஒரு பிடிப்பு, ஒரு ஊன்று கோல் கிடைத்துவிட்டது. அதே போல் நீயும் உனக்கென்று ஒரு ஆதாரத்தை, ஒரு பிடிப்பைத் தேடிக் கொள்ள வேண்டும்!" என்றான். அடுத்த விநாடி குமாரகிரி மெதுவாகச் சித்திரலேகாவின் கைகளைப் பற்றினான்.


சித்திரலேகாவும் எவ்வித எதிர்ப்பும் இன்றித் தன் கைகளைக் குமாரகிரியிடம் ஒப்படைத்து விட்டாள். பிறகு அவள் இலேசாகத் தன் தலையை நிமிர்த்திக் குமாரகிரியின் முகத்தை உற்று நோக்கலானாள். சிறிது நேரத்துக்கெல்லாம் இருவருடைய கண்களும் ஒன்று கலந்தன.

குமாரகிரி இன்ப போதையில் என்னவெல்லாமோ சொல்லிக் கொண்டே போனான்: "காதல்! காதல்! காதல்! காதல்தான் என் தர்மம். காதல்தான் என் கடமை. என் வாழ்க்கையில் நீயாகவே உன் இஷ்டப்படி பிரவேசித்தாய். நீ எனக்குக் காதலை—காதலின் மகிமையை உபதேசிக்கும் குருவாக வந்திருக்கிறாய். வா! வா! நீயும் நானும் ஒன்றாக இணைந்து விடுவோம்! ஒன்றாக ஒன்றிவிடுவோம்!"

இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே குமாரகிரியின் முகம் கீழே தாழ்ந்தது. சித்திரலேகாவின் முகம் சற்று உயர்ந்தது. இருவருடைய உதடுகளும் ஒன்று கலந்தன.

குமாரகிரி பித்தனைப் போல உளறத் தொடங்கிவிட்டான். "ஆகா! இதில்தான் என்ன இன்பம்! என்ன இன்பம்! இந்த வாழ்க்கையில்தான் என்ன சுகம்! இந்த ஆனந்தத்துக்கு, இந்தப் புல்லரிப்புக்கு ஈடு இணை உண்டா? நடன ராணி! நீதான் நான் பூஜிக்கும் தெய்வம்! என் உயிருக்குயிரான காதலி! இன்று நான் உன்னுடைய ஆழங் காண முடியாத யௌவனக் கடலில் மூழ்குவதற்குத் தயாராக வந்திருக்கிறேன்!" என்று சொல்லியவாறே இன்பக் கற்பனையில் ஆழ்ந்து விட்டான். அடுத்த கணம் அவனுடைய இரு கண்களும் மூடிக் கொண்டன. சித்திரலேகாவின் கண்களும் தம்மை அறியாமலே மூடிக் கொண்டன.

"சரி! அப்படியானால் இப்படியேதான் இருக்கட்டுமே!" என்று மெதுவாக முணுமுணுத்தாள் சித்திரலேகா. (தொடரும்)



காக இல்லாத பாடு எல்லாம் பட்டாய். ஆனால் யசோதரா அவனைச் சரியான சமயத்தில் கை கொடுத்துக் காப்பாற்றி விட்டாள். இப்பொழுது பீஜகுப்தன் மணம் புரிந்து கொண்டு இல்வாழ்க்கையின் இன்பத்தை நுகர்ந்து கொண்டிருக்கிறான். நினைவிருக்கட்டும்!" என்றான்.

அவன் சொன்னதைக் கேட்டதும் சித்திரலேகாவின் முகம் 'குப்'பென்று வியர்த்து விட்டது. அப்பொழுது அவளுடைய முகம் போயிருந்த போக்கைச் சொல்லி முடியாது. ஒரேயடியாக வெளுத்துப் போய் சாம்பல் நிறமாகக் காட்சியளித்தது. "யோகி! தாங்கள் சொல்லுவது உண்மைதானா? பீஜகுப்தன் உண்மையாகவே யசோதராவை மணம் செய்து கொண்டு விட்டானா? இருக்காது, யோகி! இருக்காது. நீங்கள் சொல்லுவது கனவிலும் நடக்காத காரியம். பீஜகுப்தனாவது, யசோதராவை மணந்து கொள்ளுவதாவது? நடக்கவே நடக்காத காரியம்" என்றாள்.

"நடக்காத காரியமா? என் நடக்காத காரியம்?" என்று கேட்டான் குமாரகிரி. அவனுடைய அந்தக் கேள்வியில் ஈட்டியைப் போல உள்ளத்தில் சுருக்கென்று குத்தக் கூடிய எண்ணம் தொனித்தது. "நீ காம வசப்பட்டுப் பரிசுத்தமான அன்பை உதறித் தள்ளிவிட்டு என்னிடம் ஓடி வருவது மட்டும் நடக்கக் கூடிய காரியம்! பீஜகுப்தன் ஈடு இணையற்ற தெய்விகப் பெண் ஒருத்தியைத் திருமணம் புரிந்து கொண்டு பரிசுத்தமான குடும்ப வாழ்க்கையை மேற்கொள்ளுவது மட்டும் நடக்காத காரியம்! இதுதானே உன் எண்ணம்? அப்பப்பா! உனக்குத்தான் எத்தனை மண்டைக் கர்வம்! உன் மீதே உனக்கு எவ்வளவு அபார நம்பிக்கை! நான் சொல்வதில் உனக்கு நம்பிக்கை ஏற்படவில்லையா? அப்படியானால் நீயே நேரில் போய்ப் பார்த்து வா! புதிதாக மணமான தம்பதிகள் இன்று காலையில் தான் திரும்பி வந்திருக்கிறார்கள். போய் அவர்களுக்கு வாழ்த்துக் கூறி விட்டு வா!—போ, நீ உன் கண்களாலேயே உன் காதலன்—இல்லை. இல்லை உன் அடிமை இன்னொரு பெண்ணைக் காதலித்துக் கடிமணம் புரிந்து கொண்டு ஆனந்தமாக இன்பவாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பதைக் கண்டு களித்துவா! போ! போ!" என்று பிடித்துத் தள்ளாத தோஷமாகச் சொன்னான் குமாரகிரி.

"என்ன? அவர்கள் வந்து விட்டார்களா?" என்று கேட்டவாறே சித்திரலேகா எழுந்து நின்றாள். அவளுடைய உடல் 'வெட வெட' வென்று நடுங்கிக் கொண்டிருந்தது. அவளுடைய முகம் இன்னும் வெளுத்து மிகவும் கோரமாகக் காட்சி அளித்தது. அவள் பாடலிபுத்திர நகரம் இருக்கும் திக்கை நோக்கிப் பார்த்தாள். பிறகு, "என்ன? உண்மையாகவே அவர்கள் திரும்பி வந்து விட்டார்களா? யோகி! நான் கைகூப்பிக் கேட்கிறேன். தாங்கள் சொன்னது அவ்வளவும் பொய் என்று வாய் திறந்து ஒரு வார்த்தை—ஆமாம், ஒரே ஒரு வார்த்தை சொல்லுங்கள், போதும்!" என்று கெஞ்சினாள்.

"பொய் என்று சொல்லவேண்டுமா? ஹஹ்ஹஹ்ஹா! உண்மையை பொய் என்று சொல்லவேண்டுமா? முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதா? போ! நீயே நேரில் போய்ப் பார்த்து வா!" என்று மிகவும் கடுமையாகக் கூறினான் குமாரகிரி.

சித்திரலேகா அப்படியே அசந்து போய் உட்கார்ந்து விட்டாள். "வேண்டாம். இனி போய்ப் பார்ப்பானேன்? எல்லாம் தீர்ந்து விட்டது. போய்ப் பார்த்துத்தான் இனி என்ன பயன்? நான் போகப் போவதில்லை. என் உயிருக்கு உயிரான பொருள்



நிற்பவர்:- உம்முடைய பெண்ணை எனக்குக் கல்யாணம் செய்து கொடுப்பீரா, மாட்டீரா?

உட்கார்ந்திருப்பவர்:— அவள் உன்னைவிட ஐந்து வயது பெரியவளாயிற்றே!

நிற்பவர்:— அப்படியானால் நான் ஐந்து வருஷம் காத்திருந்த பிறகாவது கொடுப்பீரா?



போலீஸ்காரன் :—இந்தப்பா, 'பெல்' இல்லாமல் போகிறாயே, சைக்கிளை நிறுத்து!

சைக்கிள்காரன் :—அடாடா, பிரேக் இல்லையே சைக்கிளை நிறுத்துவதற்கு!

"அதை நான் எப்படி ஒப்புக் கொள்ள முடியும்? நீ தன்னைத்தானே இம்மாதிரிச் சொல்லி ஏமாற்றிக் கொள்ளுகிறாய், தேவி சித்திரலேகா! நீ பீஜகுப்தனை வேண்டாம் என்று உதறித் தள்ளிவிட்டு வந்தாயே, எதற்காகத் தெரியுமா? நீ என்னைக் காதலிக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் அவனைப் புறக்கணித்துவிட்டு வந்தாய்! உன் சாகஸம் எனக்குத் தெரியாது என்று எண்ணாதே!" என்றான் குமாரகிரி. அவனுடைய குரல் வர வர மேலோங்கியது.

அன்று குமாரகிரி தன்னிடத்தில் அதே பழைய உற்சாகம், அதே பழைய விறுவிறுப்பு, அதே பழைய வேகம், அதே பழைய தேஜஸ் எல்லாம் மறுபடியும் உதித்திருப்பதை உணர்ந்தான். அவையெல்லாம் அவனுடைய வாழ்க்கையில் என்று சித்திரலேகா பிரவேசித்தாளோ அன்றே மங்கி மறைந்து போயிருந்தன.

"நீ பீஜகுப்தனை ஏமாற்றலாம். என்னை ஏமாற்றலாம். ஆனால் உன்னையே நீ ஏமாற்றிக் கொள்ள முடியாது. நீ காமக் கலக்கத்தில் கட்டுண்டு பரிசுத்தமான அன்பை உதறித் தள்ளிவிட்டாய். நீ என்னிடத்தில் எதையோ கண்டாய்; கண்டு மையல் கொண்டாய்; கடைசியில் உன் உள்ளத்தையே என்னிடம் பறி கொடுத்துவிட்டாய்! அப்பொழுது உன்னிடத்தில் மிருகத்தன்மை மேலோங்கிக் கிடந்தது. நீ மனிதத் தன்மையைக் காற்றில் பறக்க விட்டு விட்டாய். பீஜகுப்தனுடைய விருப்பத்துக்கு விரோதமாக, பீஜகுப்தனுடைய வாழ்க்கையைப் பெரும் சுமையாக்கி விட்டு என்னிடம் வந்து விட்டாய். ஆனால் பீஜகுப்தனோ?—ஒரு சாதாரண நடனமாதுமீது மையல் கொண்டு தன் குடும்ப சுகத்தைத் தியாகம் செய்து விட்டான். அது மட்டும் அல்ல; தன் வாழ்க்கையையே பாழ்படுத்திக் கொண்டு விட்டான். அவன் இப்படியெல்லாம் எதற்காகச் செய்தான்? உன்னை உயிருக்குயிராகக் காதலித்தான். உன் காதலில் பரிசுத்தத் தன்மை இருப்பதாக நம்பினான்! இல்லாவிட்டால் இப்படியெல்லாம் அவன் மகத்தான தியாகம் செய்திருப்பானா?" என்று கேட்டான் குமாரகிரி.

"போதும்! நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்!" என்று உரக்கக் கூச்சலிட்டாள் சித்திரலேகா.

குமாரகிரி தன் கண்களைச் சித்திரலேகாவின் மீது புதைத்து விட்டான். பிறகு 'ஹஹ்ஹாஹ்ஹா!' என்று மிகவும் ஏளனமாக நகைத்தான். "நிறுத்த வேண்டுமோ? எதற்காக நிறுத்த வேண்டும்? இந்தச் சின்னஞ் சிறு அற்ப விஷயத்தைக் கூடவா உன்னால் பொறுக்க முடியவில்லை, நடனராணி? எதற்காக இத்தனை பதட்டமடைகிறாய்? முடியாது! நான் நிறுத்த முடியாது. சொல்ல வேண்டியது முழுவதையும் சொல்லத்தான் போகிறேன். நீ கேட்டுத்தான் ஆகவேண்டும். நீ செய்த காரியத்துக்குக் கையோடு கையாக உனக்குப் பலன் கிடைத்து விட்டது! 'வினை விதைத்தவன் வினை அறுப்பான்; தினை விதைத்தவன் தினை அறுப்பான்' என்பது பொய்யாமொழி. பீஜகுப்தன் உன்னை இன்னும் காதலிப்பதாக நீ கனவு காண்கிறாய். பீஜகுப்தன் திரும்பி வந்த பிறகு நாம் அவனிடம் போனால் அவன் நம்மை ஏற்றுக் கொண்டு விடுவான் என்றும் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கிறாய். இம்மாதிரியெல்லாம் நீ நினைத்தால் அது மாபெரும் தவறு என்றுதான் நான் சொல்லுவேன். உன் விஷத்தின் பிரபாவத்தைப் போக்கும் சக்தி வாய்ந்த அமிர்தம் அவனுக்குக் கிடைத்துவிட்டது. இனி உன் விஷம் அவனை ஒன்றும் செய்ய முடியாது. நீ அவனை ஆழக் குழி தோண்டிப் புதைத்துப் புல் பூண்டு கூட முளைக்காமல் செய்வதற்

குடும்ப வாழ்க்கையை மேற்கொள்ளுவது தானே உசிதமும்கூட!” என்றான்.

“அது எனக்குத் தெரியாது, அது எனக்குத் தெரியாது!” என்றாள் சித்திரலேகா. அதைச் சொல்லும் பொழுது அவளுடைய குரல் வரவர உச்சஸ்தாயியை அடைந்தது. “தயவு செய்து என்னிடம் பீஜகுப்தனைப் பற்றி ஒன்றும் சொல்லாதீர்கள்” என்று சொல்லி அவள் தன் இருகைகளாலும் தன் இரு காதுகளையும் பொத்திக் கொண்டாள்.

“பீஜகுப்தனைப் பற்றி ஒன்றும் சொல்லக் கூடாதா? ஏன்? நீ அவனைக் காதலிக்கிறாய் என்பதற்காகவா? பீஜகுப்தன் இன்னொரு பெண்ணைக் காதலிப்பது உனக்குப் பிடிக்கவில்லையா? பொறுக்கவில்லையா? அப்படியானால் நீ பீஜகுப்தனை விட்டு ஒழித்து விட்டு இங்கே வருவானேன்? பெண்களுக்கு எது வேண்டுமானாலும் செய்ய உரிமை உண்டு, ஆண்களுக்கு அப்படிக் கிடையாது என்பது உன் எண்ணம்போலும்! பீஜகுப்தன் உனக்குத் தாஸானுதாஸனாக, அடிமையாகக் கிடக்க வேண்டும் என்பதுதான் உன் எண்ணமா? நீ அப்படி நினைத்தாயானால் அது சுத்தத் தப்பு. அம்மாதிரி கனவிலும் நடக்காது. தெரியுமா?” என்று சொன்னான் குமாரகிரி.

அவனுடைய அந்தப் பேச்சில் அவளைப் பழி வாங்கவேண்டும்; மட்டம் தட்டி அவமானப் படுத்த வேண்டும் என்ற எண்ணம் தோய்ந்திருந்தது. எந்தப் பெண் தன்னை வெற்றி கொண்டாளோ, அவளை வெற்றி கொண்டு விடவேண்டும் என்ற மிகத் தீவிரமான நோக்கம் அவனுடைய உள்ளத்தில் படிந்திருந்தது.

ஆவேசத்தில் சித்திரலேகாவின் உடல் நடுங்கியது; குரல் தழுதழுத்தது. அவள் காத்தமாற,

“நான் செய்தது அனைத்தும் பீஜகுப்தனுடைய நன்மைக்காகத்தான் செய்தேன். சமூகத்தின் கண்களுக்கு நான் பீஜகுப்தனைக் கீழே குழி பறித்துத்தள்ளிக் கொண்டிருப்பதாகப் பட்டது. அவருக்கு நான் எந்தவிதமான சிறு தீங்கும்கூட இழைக்க விரும்பவில்லை. அவர் பெருமைக்குக் களங்கம் உண்டாக்கவும் விரும்பவில்லை. ஆகவேதான் அவரை விட்டுவிட்டு வெளியேறினேன். இதில் என்ன தவறு? நான் செய்த இந்தக் காரியம் அவருக்கு உபகாரமாக இருக்குமே ஒழிய அபகாரமாக இராது. ஏனெனில், நான் அப்படிச் செய்ததானது எவ்வித இடையூறுமின்றித் தன்னைத் தானே உயர்த்திக் கொள்ளும் விஷயத்தில் அவருக்கு உதவியாக இருக்கலாம் அல்லவா?” என்று கேட்டாள்.



அந்தச் சாதனையில் அவன் தோல்வியுற நேர்ந்தது. அப்பப்பா! அவனுக்குக் கிட்டிய அந்தத் தோல்வியின் பயங்கரத்தை என்னவென்று சொல்லுவது? அவன் தன்னிடம் தோற்றதோடு மட்டும் அல்ல; மிக மிகச் சாதாரணமான நடனமாதினிடமும் அல்லவா தோற்றுவிட்டான்! தன்னிடம் தானே தோற்றுப் போனதிலேயே அவனுக்கு அளவற்ற வருத்தம். அதைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமான வருத்தம் கேவலம் ஒரு நடன மாதினிடத்தில் தோற்று விட்டோமே என்பதனால் ஏற்பட்டது. அந்த வருத்தம் சிறுகச் சிறுகக் கோபமாக உருவெடுத்தது. கடைசியில் அந்த வருத்தம் இருந்த இடம் தெரியாமல் அமுங்கி மறைந்தது. கோபம் மேலோங்கியது. குமாரகிரி பல்லை 'நறநற'வென்று கடித்துக் கொண்டு, தனக்குத் தானாகவே, "தோல்வியா? ஒரு காலும் இல்லை. நடன ராணி சித்திரலேகாவை எந்த விதத்திலும் வசப்படுத்தித் தான் ஆக வேண்டும்; அடக்கித்தான் ஆகவேண்டும். ஆனால் அது எப்படி முடியும்?" என்று முணுமுணுத்துக் கொண்டான்.

"சித்திரலேகா என்னைக் காதலிக்கவில்லையே, ஏன்?" என்ற கேள்வி குமாரகிரியின் உள்ளத்திலே எழுந்தது. "அவள் வேறு ஒருவனைக் காதலிக்கிறாள். அதனால் தான் அவளால் என்னைக் காதலிக்க முடியவில்லை. பீஜகுப்தனுடைய காதலை மறக்க வேண்டும். அப்பொழுதுதான் அவளால் இன்னொருவனைக் காதலிக்க முடியும். அம்மாதிரி நிலை ஏற்பட்டால் அவள் என்னையே காதலிக்கலாம் அல்லவா? வீண் சந்தேகம் எதற்கு? கட்டாயம் என்னையேதான் காதலிப்பாள்; எனக்கேதான் தன்னை ஆத்ம சமர்ப்பணம் செய்வாள். அவள் என்னிடம் ஈடுபாடு கொள்ளுவதற்கு என்ன செய்யலாம்? எங்கள் இருவருக்கும் இடையே இடையூறாகச் சுவர் போல நிற்கும் பீஜகுப்தனை எப்படியாவது அகற்ற வேண்டும். அப்பொழுதுதான் நம் காரியம் கைகூடும். ஆகவே அதற்கான முயற்சியில் நாம் ஈடுபட வேண்டும்" என்ற தீர்மானத்துக்கு வந்தான் குமாரகிரி.

சித்திரலேகா குமாரகிரியின் இருப்பிடத்துக்கு வந்து இரண்டு மாதங்களுக்கு மேலாகிவிட்டது. நடந்த சம்பவம் பழைய சம்பவமாகியும் ஒரு மாதத்துக்கு மேலாகிவிட்டது. இதன் மத்தியில் குமாரகிரி தன்னை மிகவும் அடக்கி ஆண்டான். துளிக் கூடத் தன் பலவீனத்தைக் காட்டிக் கொள்ளவில்லை. சித்திரலேகாவைத் தன்னிடத்திலேயே வைத்துக் கொண்ட பொழுதிலும் காம வாசனைக்குச் சிறிதும் இடம் கொடுக்கக்கூடாது என்று அவன் தன் மனதில் திடசங்கற்பம் செய்துகொண்டான். ஆனால் அவனுடைய அந்த திடசங்கற்பம் நெடுங்காலம் நீடித்து நிற்கவில்லை; வெகு சீக்கிரமே ஆட்டம் கொடுத்துவிட்டது. ஒரு தடவை மூட்டப்பட்ட தீ மூட்டப்பட்டதுதானே? அது கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது. 'ஆஹுதி வேண்டும், ஆஹுதி வேண்டும்' என்றும் கேட்கத் தொடங்கியது. ஆகவே குமாரகிரியினால் தன் தீர்மானத்தில் நிலைத்து நிற்க முடியவில்லை.

அன்றிரவு குமாரகிரி சித்திரலேகாவைத் தன் அருகில் அழைத்து உட்காருமாறு சொன்னான். பிறகு அவளைப் பார்த்து, "தேவி சித்திரலேகா! ஒரு மாதத்துக்கு மேலாகிவிட்டது. இதன் மத்தியில் நான் என்னையே உயர்த்திக் கொள்வதற்கான முயற்சிகள் செய்தேன். அம்முயற்சியில் நான் ஒருவிதத்தில் வெற்றியும் கண்டுவிட்டதாக நினைக்கிறேன். என்னுடைய பலவீனங்கள் என்னைவிட்டு அகன்று விட்டதாகவும் எண்ணுகிறேன்" என்றான்.

"இருக்கலாம்!" என்று சொன்ன சித்திரலேகா இலேசாகப் புன்முறுவல் பூத்தாள்.

குமாரகிரி சிறிது நேரம் மௌனம் சாதித்தான். பிறகு தன் உதடுகளை இலேசாகக் கடித்துக் கொண்டு, "பீஜகுப்தன் காசி யாத்திரைக்குப் புறப்பட்டுப் போயிருப்பதாக நான் கேள்விப்பட்டேன். அவனுடன் கூடவே மதிப்புக்குரிய மிருத்யுஞ்ஜயரும் அவருடைய பெண் யசோதராவும் கூடப் போயிருக்கிறார்களாம்!" என்றான்.

"என்ன? யசோதராவும் பீஜகுப்தனுடன் போயிருக்கிறாளா?" என்று கேட்ட சித்திரலேகா துணுக்குற்றாள்.

அதைக் கண்ட குமாரகிரி இலேசாகச் சிரித்தான். பிறகு, "இதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது? தேவி சித்திரலேகா! யசோதராவைக் கல்யாணம் செய்துகொண்டு சுகமாகக் குடும்பவாழ்க்கை நடத்த வேண்டும் என்று சொல்லித் தானே நீ பீஜகுப்தனைத் தியாகம் செய்தாய்? என்னைக் கேட்டால் நீ செய்தது மிகவும் நியாயமான காரியம் என்று சொல்லுவேன். நீ சொன்னது போல பீஜகுப்தன் யசோதராவைக் கல்யாணம் செய்து கொண்டு



முப்பத்திரண்டாம் அத்தியாயம்

காதல்! காதல்! காதல்!

சித்திரலேகாவின் நடவடிக்கையைக் காணக் குமாரகிரிக்கு ஆச்சரியமாயிருந்தது. கல்லைக் கண்டால் நாயைக் காணோம், நாயைக் கண்டால் கல்லைக் காணோம் என்பார்களே, அது போலச் சித்திரலேகா குமாரகிரியிடம் வந்து விடவேண்டும் என்று துடியாய்த் துடித்துக் கொண்டிருந்த காலத்தில் சித்திரலேகாவிடம் குமாரகிரியின் மனம் நாட்டம் கொள்ளவில்லை. அதற்கு நேர் மாறாகச் சித்திரலேகாதான் தன்னுடைய உள்ளத்தைக் குமாரகிரியிடம் பறிகொடுத்திருந்தாள். யானைக்கு ஒரு காலம் என்றால் பூனைக்கும் ஒரு காலம் உண்டல்லவா? அதே போலச் சித்திரலேகாவின் மனம் மாறிய காலத்தில் குமாரகிரியின் மனமும் மாறியது. சித்திரலேகாவிடம் இந்த விசித்திரமான திடீர் மாறுதல் எப்படித்தான் ஏற்பட்டதோ, தெரியவில்லை!


சற்றுத் தீர ஆலோசித்துப் பார்த்த பொழுது குமாரகிரிக்குச் சித்திரலேகாவின் நடத்தையால் ஏற்பட்ட ஆச்சரியத்தைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாகத் தன் நடத்தையிலே ஆச்சரியம் ஏற்பட்டது. முன்பு அவன் சித்திரலேகாவைத் தன்னிடம் நெருங்கவிடாமல் தூர விலக்கி வைப்பதற்காகத் தன்னால் இயன்ற முயற்சிகளையெல்லாம் செய்தான் அல்லவா? அப்படியிருக்கும்பொழுது அவள் தன்னுடன் வந்து இருப்பதற்கு அவன் ஏன் சம்மதித்தான்? அவன் தன் மீது தனக்கே ஏற்பட்ட அவநம்பிக்கையைப் போக்கிக் கொள்ளுவதற்காகத் தான் அப்படிச் செய்தானோ? குமாரகிரிக்குப் போகும் இடங்களில் எல்லாம் வெற்றி! செய்யும் காரியங்களில் எல்லாம் வெற்றி! வெற்றியைத் தவிர அவனுக்கு வேறு ஒன்றுமே தெரியாது; 'தோல்வி என்றால் என்ன?' என்று கேட்கும் நிலையில் இருந்தான் அவன். அவனுக்கு அதுவரை தோல்வியே ஏற்பட்டது கிடையாது. தோல்வி அவனுக்கு முதன்முதலாகப் புதிதாக ஏற்பட்ட அநுபவம். ஒருவேளை குமாரகிரி தன் பலவீனத்தை நன்கு உணர்ந்திருந்தானோ, என்னவோ? அந்தப் பலவீனத்தைப் போக்கிக் கொள்ளுவதற்காகவே அவன் சித்திரலேகாவை ஏற்றுக் கொண்டிருக்கலாம் அல்லவா? ஆம், அப்படித்தான் இருக்கவேண்டும்; அதற்காகவே தான் அவன் சித்திரலேகாவை ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும்.

சித்திரலேகாவை ஏற்றுக் கொண்டதும் முதன் முதலாக அவன் தன் பலவீனத்தை முறியடிக்கும் சோதனையில் இறங்கினான்.

இன்னும் அதிகக் கோபம் கொண்டு காலிபை அடிப்பதற்காக ஒரு தடி எடுத்துவர வெளியே சென்றான்.

உடனே காலிப் தன்னுடைய செம்படவ உடைகளைக் களைந்து எறிந்து விட்டு, மாளிகையின் மத்தியிலிருந்த சிங்காதனத்தில் கம்பீரமாக அமர்ந்தான். ஒரு புறம் அவனுடைய மெய்க்காப்பாளனும் மற்றொரு புறம் மந்திரி கபூரும் நின்றிருந்தார்கள். இப்ராஹிம் தடியும் கையுமாக உள்ளே நுழைந்த போது சிங்காதனத்தைப் பார்த்தான். அவனுக்குத் திகில் ஏற்பட்டது. சிம்மாசனத்தில் காலிப் உட்கார்ந்திருப்பதையும் அவனருகில் செம்படவனின் உடைகள் இருப்பதையும் மாறி மாறிப் பார்த்தான். நடந்த சூழ்ச்சியை அறிந்து கொண்டான். பயத்தினால் அவன் உடல் நடுங்கிற்று. உடனே காலிபின் பாதத்தில் விழுந்து தான் செய்த பெருந் தவறுகளையெல்லாம் மன்னித்து விடும்படி மன்றாடினான்.

காலிப் கிழவனின் நடுக்கத்தைக் கண்டு சிரித்தான். தன்னுடைய சாமர்த்தியத்தால் அன்று நடந்த நிகழ்ச்சிகளை நினைத்துப் பார்த்தபோது அவனுக்கே மிக்க ஆச்சரியமாயிருந்தது. அவன் கிழவனை மன்னித்தான். (தொடரும்)



சென்ற வாரம் வெளியான புதிருக்கு விடை.

சண்டைக்குக் காரணம்

அமெரிக்காவின் புகழ் பெற்ற ஜனாதிபதி அப்ரஹாம் லிங்கன் வீட்டிலிருந்து ஒருநாள் ஏகப்பட்ட இரைச்சல் கேட்டது. அந்த இரைச்சலைத் தொடர்ந்து அடியும் குத்தும் உதையும் பிரமாதமாகக் கேட்டன.

பக்கத்து வீட்டு நண்பர் ரொம்ப நேரம் வரையில் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார். அவர் பொறுமை எல்லை மீறிவிட்டது. எழுந்து வெளியே வந்து அப்ரஹாம் லிங்கன் பங்களாவுக்குள் நுழைந்தார்.

லிங்கன் அப்போது ஏதோ ஒரு புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு நிம்மதியாகப் படித்துக்கொண்டிருந்தார். நண்பர் அவரைப் பார்த்து, "ஸார், என்ன உங்கள் வீட்டில் ஒரே ரகளையாயிருக்கிறது? நீங்கள் பேசாமல் இருக்கிறீர்களே!" என்று விசாரித்தார்.

அதைக் கேட்ட அப்ரஹாம் லிங்கன் கடகடவென்று சிரித்து விட்டு, "அதுவா? என் புத்திர சிகாமணிகள் இருவரும் சண்டை போட்டுக் கொள்ளுகின்றனர்!" என்றார்.

"ஆளுக்கு இரண்டு அறைகொடுத்து விலக்கி விடக் கூடாதா? நீங்கள் ஏன் இதை சகித்துக் கொண்டே இருக்கவேண்டும்?" என்று கேட்டார் நண்பர்.

"முடியாது, ஸார்! முடியவே முடியாது. அவர்கள் சண்டையைத் தீர்த்து வைக்க முடியாது. இன்றைக்கு உலக நாடுகளெல்லாம் எதற்காகத் தமக்குள் சண்டையிடுகின்றனவோ அந்த மாதிரிக் காரணம்தான் இவர்கள் சண்டைக்கும்!" என்றார் அப்ரஹாம்.

நண்பர், "நீங்கள் சொல்லுவது எனக்குப் புரியவில்லையே! அப்படி என்ன காரணம் இவர்கள் சண்டையிடுவதற்கு?" என்று கேட்டார்.

"அப்படிப் பிரமாதமாக ஒன்றுமில்லை. வீட்டில் மூன்று மாம்பழங்கள் இருக்கின்றன. இரண்டு பேருக்கும் அந்தப் பழங்களைப் பங்கு பிரித்துக்கொள்ளுவதில்தான் சண்டை. ஆளுக்கு இரண்டு பழம் வேண்டுமாம்! எப்படிக் கொடுப்பது? நீங்களே சொல்லுங்கள்" என்றார் அப்ரஹாம். —ஸோமாஸ்.




தற்கு வழி கண்டுபிடித்து விட்டதாக நூருடன் மகிழ்ச்சி யடைந்தான். உடனே அவன் துறை முகத்தை நோக்கிப் புறப்பட்டான்.

தன்னைச் செம்படவனிடம் விட்டு விட்டு நூருடன் போய் விட்டதால், பேரழகி துக்கம் மேலிட்டு அங்குள்ள சோபாவில் சாய்ந்து, விம்மி விம்மி அழுதாள். காவலாளியான ஷேக் இப்ராஹிமுக்கு செம்படவ வேஷத்தில் இருந்த காலிப் மீது பொறாமை ஏற்பட்டது. அவன் உடனே செம்படவனைப் பார்த்து, "அடே, மீன்காரத் திருடா! என்னுடைய மேற்பார்வையிலுள்ள நந்தவனத்தில் திருட்டுத்தனமாக நுழைந்து மீன் பிடித்ததுமன்றி, வந்த விருந்தாளியின் மனைவியையும் தந்திரமாக அடித்துக்கொண்டு போக நீ சூழ்ச்சி செய்கிறாயா? அது முடியாது. இவளை நான்தான் வைத்துக் கொள்வேன்" என்றான்.

அதற்கு காலிப், "நீர் சொல்லுவது நியாயம் அல்ல. இந்த அடிமைப் பெண் என்னுடையவள். அவளிடம் நீர் உரிமை கொண்டாடுவதை நான் அனுமதிக்கவே மாட்டேன்" என்றான்.

அதைக் கேட்ட இப்ராஹிம் அளவிலாக் கோபம் கொண்டான். அருகிலிருந்த சீனக் கோப்பை ஒன்றை எடுத்து காலிப் மீது வீசினான். அவன் அப்பால் நகர்ந்து கொள்ளவே, கோப்பை சுவர் மீது பட்டு ஆயிரம் சுக்காக நொறுங்கிப் போய் விட்டது. தன் குறி தப்பிப் போகவே இப்ராஹிம்



காட்டினான். நூருடீனும் பேரழகியும் அவற்றைப் பார்த்து மிக்க மகிழ்ச்சியடைந்து அவன் கேட்ட பணத்தைக் கொடுத்து மீன்களை வாங்கிக் கொண்டனர். பணத்தைப் பெற்றுக் கொண்ட காலிப் அவர்கள் அருகே ஒரு மூலையில் உட்கார்ந்தான். பேரழகி ஒரு வாத்தியத்தை எடுத்து வைத்துக் கொண்டு இனிமையாக வாசிக்கத் தொடங்கினாள். செம்படவன் அந்த வாசிப்பைக் கேட்டு மெய்ம்மறந்து உள்ளம் பூரித்தான். பேரழகியை அவன் வாயாரப் புகழ்ந்தான். அவன் புகழ்ந்ததைக் கேட்ட நூருடீன் அவனை நோக்கி, "நண்பா, இந்தப் பெண்ணின் வாசிப்பை நீ மிகவும் புகழ்வதால் இவளை உனக்குப் பரிசாக அளிக்கிறேன். ஏற்றுக்கொள்" என்றான்.



இதைக் கேட்ட பேரழகி தன் கணவனின் அலட்சிய புத்தியைக் கண்டு துயரத்தில் ஆழ்ந்தாள்.

செம்படவன் மிக்க பணிவுடன், "ஐயா, இவ்வளவு அழகு வாய்ந்த ஒரு பெண்ணைப் பரிசாகப் பெற நான் சற்றும் தகுதியில்லாதவன்" என்றான்.

தனக்கு நேர்ந்த கஷ்டங்களையெல்லாம் கேட்டால் செம்படவன் இன்னும் அதிக வியப்படைவான் என நூருடீன் நினைத்து தன் வரலாறு முழுவதையும் அவனிடம் கூறினான்.

அதைக் கேட்ட காலிப், "ஐயா, நீங்கள் இனி அனாவசியமாகப் பல இடங்களுக்கும் சென்று அலைய வேண்டாம். பட்டதெல்லாம் போதும். பல்ஸோராவுக்குச் செல்லுங்கள். நான் ஜெனபீ மன்னனுக்கு ஒரு கடிதம் கொடுக்கிறேன். அதை நான் கொடுத்ததாக அவரிடம் கொடுங்கள். உங்களுக்கு நன்மை உண்டாகும். அப்புறம் உங்களை யாரும் எதிர்த்து ஒன்றும் சொல்ல முடியாது" என்றான்.

இதைக் கேட்டதும் நூருடீன் ஆச்சரியமடைந்தான். ஒரு சாதாரணச் செம்படவனின் கடிதத்துக்கு ஒரு மன்னன் அவ்வளவு மதிப்புக் கொடுப்பான் என்பதை நம்ப அவனால் கொஞ்சமும் முடியவில்லை.

நூருடீன் சந்தேகப்படுவது கண்டு காலிப் கூறினான்: "ஐயா, சந்தேகப்பட வேண்டாம். மன்னனும் நானும் ஒரே உபாத்தியாயரிடம் படித்தோம். அந்தக் காலத்திலிருந்து நாங்கள் மிகவும் சிநேகமாயிருந்து வருகிறோம். நான் மிக்க ஏழையாயிருந்தாலும் அரசர் என்னிடம் வெகு அன்பாயிருக்கிறார். நான் என்ன கேட்டாலும் அவர் செய்து தருவார். ஆகையால் நீங்கள் கவலைப்படாமல் இந்தக் கடிதத்தை அவ்வரசரிடம் கொடுங்கள்."

இதைச் சொல்லிவிட்டு அவன் ஒரு கடிதம் எழுதி அதை நூருடீனிடம் கொடுத்தான். கடிதத்தில் என்ன எழுதியிருந்தது என்பது நூருடீனுக்குத் தெரியாது. "உடனே புறப்படுங்கள், துறைமுகத்தில் ஒரு கப்பல் புறப்படத் தயாராயிருக்கிறது" என்று காலிப் அவனை அவசரப்படுத்தினான்.

சுலபமாகத் தனது கஷ்டங்களைத் தீர்த்துக்கொண்டு சுகமாக வாழ்வ

பாப்பா மலர்

அடிமைப் பெண்

5. யார் அந்தச் செம்படவன்?

ரா.கி

நூருடீனையும் அவன் மனைவியையும் கண்டு இப்ராஹிம் பிரமித்துப் போனான். அவ்வளவு அழகு வாய்ந்த தம்பதிகளை அவன் அதற்கு முன் பார்த்ததே இல்லை.

சற்று நேரம் கழித்து நூருடீன் விழித்தெழுந்தான். அப்போது எதிரில் நின்ற இப்ராஹிமைப் பார்த்து அவன் ஆச்சரியமடைந்தான். அவனைப் பார்த்து மிகவும் பணிவாக, “ஐயா, நாங்கள் இருவரும் இவ்வூருக்குப் புதியவர்கள். இன்றிரவு இங்கே தங்க அனுமதி தரவேண்டும்” என்று கேட்டான்.

“ஆகட்டும். அப்படியே செய்யுங்கள்” என்றான் இப்ராஹிம்.

நூருடீன் இப்ராஹிமிடம் பணம் கொடுத்து எல்லோரும் உண்டு களிப்பதற்கு வேண்டிய உணவுப் பொருள்களை வாங்கிக் கொண்டு வரும்படி வேண்டிக் கொண்டான். அவ்விதமே ஷேக் இப்ராஹிம் வெளியே சென்று உணவுப் பொருள்களை வாங்கிக் கொண்டு வந்தான். அவன் உணவு வகைகளுடன் திரும்பியதும், “நாம் எல்லோரும் மாளிகைக்குள்ளே போய் அங்கு சாப்பிடுவோமா?” என்று நூருடீன் கேட்டான். இப்ராஹிம் அதற்கு இணங்கி மாளிகையைத் திறந்து இருவருக்கும் உணவு பரிமாறினான். அவர்கள் சாப்பிட்ட பிறகு அவனும் சாப்பிடத் தொடங்கினான். வயிறு புடைக்கச் சாப்பிட்டான்.

சாப்பாடு முடிந்த பிறகு நூருடீன் இப்ராஹிமைப் பார்த்து, “இங்கே மிகவும் இருட்டாயிருக்கிறது. எல்லா விளக்குகளையும் ஏற்று, பார்ப்போம்” என்றான். இப்ராஹிம் எல்லா விளக்குகளையும் ஏற்றினான். அப்போது மாளிகை முழுவதும் ஒரே ஜகஜ்ஜோதியாயிற்று. வெகு தூரம் வரை அந்த வெளிச்சம் தெரிந்தது. அந்தச் சிங்கார மாளிகைக்கு அருகில்தான் காலிப் ஹாரூனின் மாளிகையும் இருந்தது. சிங்கார மாளிகை ஜோதிமயமாக இருப்பதைக் கண்டதும் காலிபுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. அங்கு யார் விளக்கு ஏற்றியிருப்பார்கள் என்பதை அறிய ஆவல் கொண்டான். உடனே அவன் தன் மந்திரி கபூரையும் மெய்க்காப்பாளனையும் அழைத்துக் கொண்டு சிங்கார மாளிகைக்குச் சென்றான்.

அந்த மாளிகைக்கு வெளியே ஒரு தடாகம் இருந்தது. அதில் ஒரு செம்படவன் மீன் பிடித்துக் கொண்டிருந்தான். காலிப் அதைப் பார்த்தான். அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. உடனே செம்படவனிடம் சென்று, “அப்பா, எனக்கு இரண்டு மீன்கள் கொடு” என்றான். செம்படவன் இரண்டு பெரிய மீன்களை எடுத்து காலிபுக்குக் கொடுத்தான். காலிப் அவற்றை வாங்கி ஒரு மூட்டையில் கட்டிக் கொண்டான். பிறகு தன்னுடைய உடைகளை அவனுக்குக் கொடுத்து விட்டு, அவனுடைய உடைகளை வாங்கித் தான் அணிந்துகொண்டு மந்திரியுடனும் மெய்க்காப்பாளனுடனும் சிங்கார மாளிகைக்குள் சென்றான். பேரழகியையும் நூருடீனையும் பார்த்தவுடன் அவனும் ஒரு நிமிஷம் பிரமித்து நின்றான். பிறகு தன் மூட்டையை எடுத்துக் கொண்டு நூருடீனிடம் சென்று, “ஐயா, நான் இந்த ஊரில் உள்ள ஒரு செம்படவன். என் பெயர் கரீம். உங்களுக்காக இரண்டு மீன்கள் கொண்டு வந்திருக்கிறேன். நீங்கள் விலைக்கு வாங்கிக் கொள்கிறீர்களா?” என்று கேட்டான்.

“எங்கே காட்டு, பார்க்கலாம்!” என்றான் நூருடீன்.

காலிப் மூட்டையை அவிழ்த்து மீன்களைக்



அகங்காரம் என்பது ஒரு சாம்பற் குப்பை போன்றது. அதன்மேல் எவ்வளவு அறிவுத் தண்ணீர் ஊற்றினாலும் உறிஞ்சிக் கொண்டுவிடும். பகவானைப் பக்தி செய்து உருகினாலொழிய அகங்காரம் நீங்காது. எவ்வளவு சமுஸ்கிருதம் ஓதினாலும், எவ்வளவு மனனம் பண்ணினாலும் அவையெல்லாம் சாம்பற் குப்பைமேல் ஊற்றின தண்ணீரைப் போலாகி விடும். பரம்பொருளைக் காணும் வழியைத் தான் நூல்கள் காட்டும்; ஒழுக்கமும் பக்தியும் தியானமுமின்றி நூல்களைத் திரும்பத் திரும்பப் படிப்பதினால் மட்டும் பயன் உண்டாகாது.

* * *

கடையில் வாங்க வேண்டிய சாமான்களை ஒரு சீட்டில் எழுதிக் கொண்டு போய்ச் சாமான்களை விலைக்கு வாங்கிக் கொள்கிறோம். இன்னது வாங்க வேண்டும் என்று தெரிந்து விட்ட பிறகு, சீட்டில் என்ன விசேஷம்? சாஸ்திரங்களில் சொல்லப்படுவதெல்லாம் இந்த மார்க்கம் சென்றால் ஆண்டவனை அடையலாம் என்பதுதான். மார்க்கத்தை அறிந்த பிறகு அடுத்தபடி அதில் நடக்க வேண்டியது அவசியம். அதைச் செய்யாமல் சீட்டையே மனனம் செய்து கொண்டிருந்தோமானால் கடைச் சாமான் வீட்டுக்கு வருமா? ஒரு ஊருக்கு வழி தெரிந்துகொண்டு அந்த வழியைப் பிடித்து நடந்து சென்றால் ஊர் போய்ச் சேருவோம். வழி தெரிந்தால் மட்டும் போதாது. அந்த வழியில் நடந்தால்தான் ஊரை அடையலாம்.

* * *

சைதன்ய தேவர் தெற்கே யாத்திரை சென்றபோது, ஒரு பண்டிதர் கீதையைப் படித்து உபந்யாசம் செய்து கொண்டிருந்ததைக் கண்டார். கேட்டுக் கொண்டிருந்த கூட்டத்தில் ஒரு பக்தன் உட்கார்ந்திருந்தான். அவனுக்குக் கீதையில் ஒரு சுலோகத்தின் பொருளும் தெரிந்து கொள்ளும் சக்தி யில்லை. ஆனால் உபந்யாசம் நடந்து கொண்டிருந்த போது, அவன் கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது.

“எதற்காக அழுகிறாய், அப்பனே! என்ன தெரிந்து கொண்டாய்?” என்று சைதன்ய தேவர் கேட்டார்.

அதற்கு அந்தப் பக்தன், “தேர்மேல் கிருஷ்ண பகவானையும் அருச்சுனனையும் காண்கின்றேன். அதனால் என் கண்களில் கண்ணீர் பெருகுகிறது. உபந்யாசம் ஒன்றும் என் காதில் விழவில்லை” என்றான்.

எழுதப் படிக்கத் தெரியாத இந்த பக்தனே மெய்ஞ்ஞானி. கண்ணன் பேரில் அவனுக்கு உண்டான காதலே எல்லா சாஸ்திரங்களின் பொருளும்.



சுவரங்களின் பெயரைச் சொல்லலாம் ஒருவர். ஆனால் சுவரமும் சங்கீதமும் வேறு விஷயம். சரியான மொழிகளைக் கோத்து ஞான வைராக்கியத்தைப் பற்றிப் பிரசங்கம் செய்வது எளிது. ஆனால் ஞானமும் வைராக்கியமும் தோய்ந்த மனோ நிலையும் வாழ்க்கையும் கடினம்.

பஞ்சாங்கத்தில் இந்த மாதத்தில் இந்தத் திதியில் இத்தனை மழை பெய்யும் என்று கணக்கிட்டு எழுதியிருப்பார்கள். அப்படியே மழையும் பெய்யலாம். ஆனால் ஒருவன் பஞ்சாங்கத்தின் ஏடுகளை எடுத்துப் பிழிந்தால் தண்ணீர் வடியுமா? எவ்வளவு கசக்கிப் பிழிந்தாலும் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட வழியாது. தரும நூல்களில் அநேக நல்ல விஷயங்களைப் படிக்கலாம். ஆனால் அவற்றை ஓதுவதினாலேயே ஒருவன் பக்தி அடைந்து விட முடியாது. அந்த நூல்களில் சொல்லியபடி ஆசைகளை அடக்கினால் பக்தி உண்டாகும்.

ஆண்டவன் சந்நிதானத்தில் படிப்பும் மேதையும் எம்மாத்திரம்? அங்கே ஊமையும் பேசும்; கபோதிகளுக்கும் கண் தெரியும்; சாஸ்திரங்கள் எல்லாம் படித்தவனும் படிப்பேயில்லாதவனும் ஆண்டவனுக்கு முன் ஒன்றே.

* * *

'கஞ்சா!' 'கஞ்சா!' என்று ஆயிரம் தடவை வாயால் சொன்னாலும் போதை உண்டாகாது அல்லவா? கொஞ்சம் கஞ்சா எடுத்து இடித்துத் தண்ணீரில் கரைத்துக் குடித்தால் தான் போதை உண்டாகும். மனதை ஆண்டவனிடம் செலுத்தாமல் ஆயிரம் நாமங்களையும் வாயால் உரக்கச் சொல்லுவதில் பயனில்லை. மனதை ஒரு நிலையில் நிறுத்தித் தியானித்து அப்பியசிக்க வேண்டும். அப்போது தான் பரம்பொருளைக் காண்போம்.

* * *

ஒருவன் பள்ளிக்கூடச் சுவரில் மாட்டியிருக்கும் இந்தியா தேசத்தின் படத்தில் 'காசீ' என்ற புள்ளியைப் பார்த்து விட்டு 'நான் காசியைப் பார்த்து விட்டேன்' என்று பேசுவதைப் போன்றதுதான் சாஸ்திர நூல்களைப் படித்துவிட்டுப் பரம்பொருளை மற்றவர்களுக்கு விளக்கப் பார்ப்பது. படத்தில் சரியாகத்தான் ஊர்களும் நதிகளும் மலைகளும் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் படத்தைப் படித்து விட்டதால் நதிகளையும் ஊர்களையும் பார்த்தபடி யாகுமா? நூல்களும், தையல் நூலைப் போலத்தான் சில சமயம் சிக்கலாய்ப் போகும். சிக்கலாகிப் போய்த் தைக்கப் பயன்படாமல் போன நூலைப்போலவே, பக்தியில்லாமல், ஒழுக்கமில்லாமல், தியானமில்லாமல் படிக்கப்பட்ட தத்துவமும் சாஸ்திரமும் சிக்கலாகி ஒன்றுக்கும் உதவாது போகும். ஆண்டவன் அருளால், அடக்கமும் பக்தியும் பெறாமற்போனால் ஒருவன் கற்ற நூல்கள் எல்லாம் ஆணவத்தைப் பெருக்குமேயொழியப் பயன்படாது. அடைந்த படிப்பினால் 'நான்' என்பது முன்னைவிடப் பெரிதாக வளர்ந்து உள்ளத்தில் ஞானத்துக்கு இடம் தராமல் தடுத்து விடும்.

சக்கரவர்த்தி ராஜகோபாலச்சாரியார்



ராமகிருஷ்ண உபநிஷதம்

8. ஊமையும் பேசும்!

ஒரு நாள் புகழ் பெற்ற பிரம்ம சமாஜ ஆசாரியரான கேசவ சந்திர சேனர் பகவான் ராமகிருஷ்ணரை தக்ஷிணேசுவரக் கோயிலில் கண்டு பேசிக் கொண்டிருந்தார்.

"என்ன காரணமோ, ரொம்பப் படித்த வித்வான்களுங்கூட மூர்க்கர்களாகவே இருக்கிறார்கள்! சாஸ்திரங்களையெல்லாம் நன்றாகக் கற்றும் ஞானம் அடையாமல் ஆசைகளையும் பற்றுகளையும் விடாமல் தத்தளிக்கிறார்கள். இது வியப்பாக இருக்கிறது!" என்றார் கேசவசந்திரர்.

"பருந்துகள் ஆகாயத்தில் பறக்கின்றன. வெகு உயரமாகத்தான் சுத்த வாயு மண்டலத்தில் பறக்கின்றன. ஆனாலும் அவற்றின் கண்கள் கீழே செத்த பிராணி, மாமிசம், எலும்பு இவற்றைத்தான் தேடி உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கும்" என்றார் ராமகிருஷ்ண பரமஹம்சர்.

உயர்ந்த நூல்களைப் படித்தாலும் மனம் காமப் பொருள்களிலேயே உலாவித் திரியும். படிப்பு வேறு, ஆசைப்படும் விஷயம் வேறு. ஆசைகளினாலும் பற்றுக்களினாலும் நாம் நூல்களிலிருந்து ஞானம் அடைவது தடைப்படுகிறது.

படிப்பதனால் மட்டும் பயன் பெற முடியாது. மொழிப்பயிற்சியைப் பெறுவோம், நல்ல சுலோகங்களை ஒப்புவிக்கலாம், மந்திரங்களைத் தவறின்றி உச்சரிக்கலாம், அவ்வளவுதான். எந்த விஷயங்களில் ஆசை செலுத்துகிறோமோ அவைதான் நம்மை உயர்த்துகின்றன, அல்லது தாழ்த்துகின்றன. மண்ணும், பொன்னும், பெண்ணும் நம் உள்ளத்தைக் கவர்ந்து நிற்க விட்டோமானால், எவ்வளவு சாஸ்திரங்கள் ஓதினாலும் அறிவும் வராது; மோக்ஷமும் கிட்டாது. படித்துவிட்டு மிக நன்றாக உபன்னியாசம் செய்யலாம். பிரம்மம், பரம்பொருள், ஞான யோகம், பக்தி யோகம், மூலப் பிரகிருதி, ஜீவாத்மா, பரமாத்மா என்றெல்லாம் வாதித்து, கேட்பவர்களைப் பிரமிக்கச் செய்யலாம். ஆனால், பேசும் விஷயங்கள் பேச்சளவில்தான் நிற்கும். உள்ளம் உருகி ஆண்டவனிடத்தில் மனதைச் செலுத்தினால் படிப்பின் பயனை அடைவோம். இல்லாவிடில் சாஸ்திரமும் புராணமும் ஒன்றும் பயன் தராது. ச, ரி, க, ம, ப, த, நி, என்று





மேல்நாட்டுக் கடற்கரைகளில் வாழும் 'பெலிகன்' என்னும் பட்சிகள் மீன்களைத் தின்று ஜீவிக்கின்றன. இவற்றின் வாயில் ஒரு விசேஷப் பை இருக்கிறது. இவை கடலில் பாய்ந்து அந்தப் பையில் மீனுடன் ஜலத்தையும் நிரப்பிக் கொண்டு வருகின்றன. அந்தப் பையிலுள்ள ஜலத்தை வடித்து மீனைத் தின்னப்போகும் சமயம் பார்த்து 'கல்' என்னும் பறவை பறந்து வந்து அதன் வாயில் உள்ள மீனைக் கொத்திக் கொண்டு போய்விடும். இம்மாதிரி சந்தர்ப்பங்களில் பெலிகனின் நிலைமை பரிதாபகரமாகத்தான் இருக்கும்.






பெலிகன் குட்டியாக இருக்கும் பொழுது அசாத்தியமாகச் சத்தம் போடுகிறது. அது பெரிய பறவை ஆனவுடன் சத்தம் போடும் சக்தியை இழந்து விடுகிறது. குட்டிகள் ஓயாமல் சத்தம் போடும் சமயங்களில் தாய் பெலிகன் குட்டிகளின் தலையில் அலகினால் ஓங்கி அடித்துச் சத்தத்தை அடக்கும். ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆




உலகத்திலேயே இதுதான் மிகவும் குறுகலான தெரு. இதற்கு 'எக்ஸீட்டர் தெரு' என்று பெயர். இது இங்கிலாந்தில் இருக்கிறது. இந்தத் தெருவின் அகலம் இருபத்தேழு அங்குலம் தான். ☆ ☆ ☆ ☆




மேலே உள்ள படத்தில் எந்தக் குரங்கின் தூண்டிலில் மீன் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைக் கண்டுபிடியுங்கள்!



இது அமெரிக்கா தேசத்தின் கொடி. இதிலுள்ள நாற்பத்தெட்டு நட்சத்திரங்களும் அமெரிக்காவிலுள்ள நாற்பத்தெட்டு மாகாணங்களைக் குறிக்கின்றன. பட்டைக் கோடுகள் பூர்வீக காலனிப் பிரதேசங்கள் பதின்மூன்றையும் குறிக்கின்றன.





சென்ற வாரம் பாப்பா மலரில் வெளிவந்த புதிருக்கு விடை.

"ஏன் அக்கா?"

"உனக்கு ஒரு கலியாணம் ஆகட்டும்; பிறகு பிரசங்கம் செய்யலாம்!"

"கலியாணத்துக்கும் பிரசங்கத்துக்கும் என்ன சம்பந்தம்?"

"உன் பிரசங்கத்தைக் கேட்க ஒரு ஆளாவது வேண்டாமா?"

இப்படி எத்தனையோ ஹாஸ்யங்கள் பளீர் பளீர் என்று மின்னல் வேகத்தில் தோன்றி நமது மனதைக் கவருகின்றன. மிகவும் சிக்கலான பிரச்னைகளை ஸ்ரீ என். எஸ். கிருஷ்ணனும் ஸ்ரீமதி டி. ஏ. மதுரமும் தங்களுடைய ஹாஸ்யப் பேச்சாலும் அருமையான நடிப்பாலும் கணீரென்ற பாட்டாலும் சுலபமாக விளக்கி விடுகின்றனர். இதனால் "ஐம்பதும் அறுபதும்" என்ற நாடகத்தைப் பார்த்தவர்களெல்லாம் ஏதாவது ஒரு அநியாய நிகழ்ச்சியை எங்கேயாவது பார்த்து விட்டால், "என்ன, இது அறுபதாம் வருஷத்துச் சம்பவம் மாதிரி யல்லவா இருக்கிறது!" என்று சொல்லிச் சிரித்து மகிழ்கிறார்கள்.

* * *

"ஐம்பதும் அறுபதும்" என்ற நாடகத்துக்கு முன்னால் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் கோஷ்டியார் "வாழும் வகை" என்ற அருமையான நாடகத்தையும் சேர்த்து நடத்துகிறார்கள்.

"வாழ்வை நம்பாதே—மனமே
வாழ்வை நம்பாதே...!"

என்ற பிச்சைக்காரனின் பாட்டுடன் "வாழும் வகை" என்னும் நாடகம் ஆரம்பமாகிறது. புத்தி என்ற பெயருள்ள பெண்மணி அந்தப் பிச்சைக்காரனைக் கூப்பிட்டு, "'வாழ்வை நம்பாதே!' என்று சொல்லிவிட்டுப் பிறகு - ஏன் பிச்சை கேட்கிறாய். போ!" என்று விரட்டுகிறாள். புத்தியின் கணவன் மனம் அங்கு வருகிறார். அடாடா! புத்தியும் மனமும் சேர்ந்துகொண்டு என்ன பாடு படுத்துகிறார்கள்! பிச்சைக்காரர்களின் தொல்லையை ஒழிக்கப் பிச்சையிடுவதை நிறுத்தச் சொல்லுகிறார்கள். சோம்பேறியாகத் திரிந்த அந்தப் பிச்சைக்காரனைத் தொழிலாளியாக்கி, கடைசியில் விறகு டிப்போ முதலாளியாகவே மாற்றி விடுகிறார்கள். மாதம் பூராவும் தொழிலாளிகளிடம் வேலை வாங்கிக்கொண்டு, அவர்களுடைய சம்பளத்தை அடுத்த மாதம் ஏழாந் தேதியும் இருபதாம் தேதியும் கொடுக்கும் முதலாளிகளை ஒவ்வொரு மாதமும் முதல் தேதியே சம்பளம் கொடுக்கும்படி செய்கிறார்கள். வரவுக்கு மிஞ்சிச் செலவுசெய்து விட்டு வாடும் மத்தியதரக் குடும்பத்தைச் சீர்திருத்தி வரவுக்குத் தகுந்த செலவு செய்யும்படி செய்கிறார்கள். நூற்றுக் கணக்கான ரூபாய்களை அவர்கள் ஆடை அலங்காரத்துக்கும், அனாவசியச் சடங்குகளுக்கும் செலவு செய்துவிட்டு அவதிப்படும் கொடுமையையும் அந்த ரூபாய்களையே முதலாக வைத்துக் கொண்டு ஏழை எளியவர்கள் சுதந்திரமாகவும் சந்தோஷமாகவும் வாழ்வதையும் காட்டுகிறார்கள். இப்படி ஊருக்கெல்லாம் உபதேசம் செய்த ஸ்ரீமதி புத்தியும் ஸ்ரீமான் மனமும் கடைசியில் தங்களுக்குள்ளாகவே மனஸ்தாபப்பட்டுப் பிரிந்து விடுகின்றனர். மனம் புத்தியில்லாமலும் புத்தி மனமில்லாமலும் கஷ்டப்படுகின்றனர். பிறகு புத்தியும் மனமும் ஒன்று சேருகின்றனர். கணவனும் மனைவியும் சந்தோஷமாக வாழ்கிறார்கள்.

காலத்துக்கு ஏற்ற கருத்துக்களையும் அன்றாடம் நமது வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களையும் வைத்துக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கும் இந்த நாடகத்தில் ஹாஸ்யரஸம் ததும்புகிறது. புத்தியாக நடித்த ஸ்ரீமதி மதுரமும் மனமாக நடித்த கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனும் தங்களுக்கே உரிய ஹாஸ்யப் பேச்சுக்களினாலும் அற்புதமான நடிப்பினாலும் நாடகம் பார்ப்பவர்களின் மனதைப் பெரிதும் கவர்ந்து விடுகிறார்கள்.

ஜே ஹிந்த்! வாழ்க, சுதந்திரம்!

தேச பக்தருக்குக் காட்டி மனைவி பரிகசிக்கிறாள். "சுதந்திரமாம், சுதந்திரம்! ஊரிலே மழையில்லை. ரேஷன் அரிசியிலே கல்லையும் மண்ணையும் தவிர அரிசி இருப்பதில்லை..." என்றெல்லாம் சொல்லிச் சுதந்திரத்தைப் பரிகசிக்கிறாள்.

சுதந்திரத்தின் அருமையையும் பெருமையையும் உணர்ந்த தேச பக்தர் எவ்வளவோ சமாதானம் சொல்லுகிறார். அவள் கேட்கவில்லை. கடைசியில், "புளியங்கொட்டையைப் பூமியிலே நட்டுவிட்டு உடனேயே ஆகாசத்தை அண்ணாந்து பார்த்தால் புளியம் பழம் கிடைக்குமா?" என்று அன்போடு கேட்டு அவளைத் தமது மனோரதத்தில் ஏற்றிக்கொண்டு தேச பக்தர் 1960-ம் வருஷத்துக்குப் போகிறார்.

பத்து வருஷங்கள் ஓடி மறைகின்றன. 1960-ம் வருஷம் வருகிறது.

1960-ம் வருஷத்தில் பாரத தேசமெங்கும் நீர்வளமும் நிலவளமும் செழித்துச் செல்வம் கொழிக்கிறது. தேசத்தில் உள்ள ஜீவ நதிகளுக்கெல்லாம் பெரிய பெரிய அணைகள் கட்டி, தண்ணீரைத் தேக்கி, விவசாயத்தைப் பெருக்கியிருக்கிறார்கள். அரிசிக் கடையிலிருந்து ஒருவன் நல்ல பச்சரிசி இரண்டு மூட்டை கொண்டு வந்து போட்டு, "சமைத்துச் சாப்பிட்டுப் பார்த்து அரிசி நல்லாயிருந்தா பணம் கொடுங்க!" என்று சொல்லிவிட்டுப் போகிறான். இன்னொரு இடத்தில் 'க்யூ'வில் வரிசையாக நிற்கிறார்கள். "அது என்ன, கையிலே ஏதோ வைத்துக் கொண்டு வரிசையாக நிற்கிறார்களே!" என்று கேட்கிறாள் தேச பக்தரின் மனைவி. "அதுவா, கடையில் சர்க்கரை இல்லை. 'தேவைக்கு அதிகமாக யாரிடம் சர்க்கரை இருக்கிறதோ அவர்களெல்லாம் தயவு செய்து சர்க்கரையைத் திருப்பிக் கொண்டு வந்து கொடுக்க வேணும்' என்று பத்திரிகையில் விளம்பரம் செய்தார்கள். அதன் பலன்தான் இது!" என்கிறார் தேசபக்தர்.

1960-ம் வருஷத்தில் ஊரிலே ரிக்ஷா வண்டியே கிடையாது. ஒரு ரிக்ஷாவை மாதிரிக்கு மியூஸியத்திலே வைத்து, அதற்கு அடியில் 'பத்து வருஷங்களுக்கு முன்னால் கருணையில்லாதவனாயிருந்தான் மனிதன்' என்று எழுதி வைத்திருக்கிறது. சாலையோரத்தில் இருக்கும் கார்ப்பொரேஷன் குழாயில் தண்ணீர் தானே ஓடிக்கொண்டிருப்பதைப் பார்த்து ஒருவர் ஓடோடியும் சென்று மூடுகிறார். வேலைக்குப் போகும் ஆபீஸர்கள் கூட வீதியில் கிடக்கும் குப்பையையும் செத்தையையும் பொறுக்கி எடுக்கிறார்கள். கடைக்காரன் இல்லாத கடைகளில் தங்களுக்கு வேண்டிய சாமானைத் தாங்களே எடுத்துக் கொண்டு, அதற்குரிய பணத்தைப் பொது ஜனங்கள் சரியாக வைத்துவிட்டுப் போகிறார்கள். வீட்டுக் கதவுகளுக்கெல்லாம் தாழ்ப்பாள் கிடையாது. சிலருக்கு அன்னதானம் செய்ய ஆசையிருக்கிறது. ஊரில் அரிசி தாராளமாகக் கிடைக்கிறது. ஆனால் பிச்சைக்காரர்கள் கிடைக்கவில்லை. 'பிச்சைக்காரர்கள் தேவை' என்று பத்திரிகையில் விளம்பரம் செய்து வெளி நாட்டிலிருந்து பிச்சைக்காரர்களைத் தருவிக்க வேண்டியிருக்கிறது. ஊரிலே கலகம் முதலியவைகள் இல்லாததால் போலீஸ்காரர்களெல்லாம் சுகாதாரத்தையும் முதியோர் கல்வியையும் கவனிக்கிறார்கள். அழகான யுவதி ஒருத்தி விலை உயர்ந்த வயிர நகைகளைப் பூட்டிக் கொண்டு ஆண் துணை இல்லாமல் இரவு வேளைகளில் ஆறு மைலுக்கு அப்பாலுள்ள கிராமத்திலிருந்து தன்னந்தனியே வருகிறாள். இந்த அற்புதங்களைப் பார்த்த தேச பக்தரின் மனைவி தான் ஒரு காலத்தில் சுதந்திரத்தைப் பழித்தது குறித்து மிகவும் வருந்துகிறாள். இந்த அதிசய நிகழ்ச்சிகளெல்லாம் நடக்கும்படி செய்துவிட்டுப் போன காந்தி மகானுக்குச் சென்னைக் கடற்கரையிலே வானளாவ ஒரு ஞாபகார்த்த ஸ்தம்பம் கட்டியிருக்கிறது. அதன் அடியில் நின்று தேசபக்தரும் அவர் மனைவியும் நன்றியுடன் வணங்குகிறார்கள்.

கடைசியில் தேச பக்தர் தம் மனைவியை "50-க்குப் போகலாம் வா!" என்று கூப்பிடுகிறார். அவள் வர மறுக்கிறாள். "அவசரப்படாதே, வா!" என்று சொல்லி அவளை அழைத்து வருகிறார்.

"அம்மா, தாயே! பிச்சை போடு, அம்மா!" என்ற பிச்சைக்காரன் குரல் 1950-ம் வருஷத்தை நினைவூட்டுகிறது.

மேற்படி சம்பவங்களையெல்லாம் சேர்த்துத்தான் "ஐம்பதும் அறுபதும்" என்ற நாடகமாகத் தயாரித்து இருக்கிறார்கள். தேசபக்தராக ஸ்ரீ என். எஸ். கிருஷ்ணனும், அவருடைய மனைவியாக ஸ்ரீமதி டி. ஏ. மதுரமும் நடிக்கின்றனர்.

சுமார் மூன்று மணி நேரம் அன்று இந்த உலக நினைவே இல்லாமல் சபையோர் குலுங்கக் குலுங்கச் சிரித்து மகிழ்ந்தனர். நாடகத்தின் நடு நடுவே ஏராளமான ஹாஸ்யத் துணுக்குகள் கும்மாளி போட்டுக்கொண்டு ஓடி வருகின்றன.

"அக்கா! நான் பிரசங்கம் செய்யப் போகட்டுமா?"

"வேண்டாம், தம்பி!"

ஐம்பதும் அறுபதும்

◇ பகீரதன் ◇

"'சுதந்திரம் வந்தால் மக்கள் கஷ்டம் தீரும்; தேசம் சுபிட்சமடையும்' என்று சொன்னார்கள். அதற்கு நேர் மாருக இப்பொழுதுதான் தேசத்தில் கஷ்டம் அதிகரித்திருக்கிறது; சுதந்திரம் வந்ததிலிருந்து ஊரிலே மழையே இல்லை!" என்று டிராமிலும் பஸ்ஸிலும் கடைவீதிகளிலும், இன்னும் எங்கெங்கு நாலுபேர் கூடி நிற்கிருர்களோ, அங்கெல்லாம் சில வம்பர்கள் பேசிக் கொள்கிருர்கள் அல்லவா?

அவர்களுக்கு முன்னல் நீங்கள் தைரியமாகப் போய் நிமிர்ந்து நில்லுங்கள். அந்த மகானுபாவர்கள் முகத்தைக் கொஞ்சம் காட்டச் சொல்லுங்கள்; "ஏன் இப்படி உங்கள் முகத்தில் அசடு வழிகிறது?" என்று கேளுங்கள்.

"இந்தியாவுக்குக் கிடைத்த சுதந்திரம் உங்களுக்கும் கிடைத்துத்தானே இருக்கிறது? சுதந்திரதேவியின் வெற்றியில் உங்களுக்கு மட்டும் ஏன் சந்தோஷமில்லை?" என்று கேளுங்கள். "வீணுக உளறவேண்டாம்; மனதை அலட்டிக் கொள்ள வேண்டாம். கிடைத்தற்கரிய சுதந்திரம் கிடைத்திருக்கிறது; பெறற்கரிய பாக்கியத்தை நாம் பெற்றே விட்டோம்" என்று நீங்கள் அவர்களுக்கு ஆறுதல் சொல்லுங்கள். சந்தர்ப்பம் வாய்க்கும் பொழுது, "ஐம்பதும் அறுபதும்" என்ற நாடகத்தைப் போய்ப் பார்க்கும்படி அந்த மகானுபவர்களுக்கு யோசனை கூறுங்கள்.

சென்ற மாதம் 23-ம் தேதி சென்னைக் கார்ப்பொரேஷன் மைதானத்தில் காந்தி மகானின் ஞாபகார்த்த ஸ்தூபி நிதிக்காகக் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் ஸ்ரீமதி டி. ஏ. மதுரம் கோஷ்டியார் "ஐம்பதும் அறுபதும்" என்ற நாடகத்தை நடித்துக் காட்டினர். அந்த நாடகத்தைப் பார்த்து அனுபவித்தவர்கள் அதைப் பற்றிப் பேசிக்கொண்டு போனதிலிருந்து நான் திட்டமான ஒரு முடிவுக்கு வந்தேன். அதாவது, "ஐம்பதும் அறுபதும்" என்ற நாடகத்தையும் அதை நடித்து வரும் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் கோஷ்டியாரையும் சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டும். நமது நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம் இந்த நாடகத்தைப் போட்டு மக்களை இலவசமாகப் பார்க்கும்படி செய்யவேண்டும். படித்தவர்களும், பாமரர்களும், ஏழைகளும், தொழிலாளர்களும், பணக்காரரும், மத்தியதர வகுப்பாரும் அந்த நாடகத்தை ஒரு தடவை இரண்டு தடவை அல்ல, பல தடவை பார்க்க வேண்டும்.

"ஐம்பதும் அறுபதும்" சுதந்திரத்தைக் கேலி செய்பவர்களின் கோணல் புத்திக்கு ஏற்ற மாற்று. சுதந்திரத்தின் அருமையையும் பெருமையையும், அதைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டிய அவசியத்தையும் பற்றித் தலைவர்களும் தொண்டர்களும் ஆயிரமாயிரம் மேடைகளில் நின்று பிரசங்கம் செய்தாலும், அதைக் கேட்டு ஜனங்கள் அடைய முடியாத பலனை இந்த நாடகத்தைப் பார்ப்பதின் மூலம் அடைந்து விடுவார்கள். சுதந்திரத்தின் சுகத்தை உணர்ந்து உற்சாகத்துடன் உழைக்க ஆரம்பிப்பார்கள்.

இது மட்டுமா? நகர வாழ்க்கையில் இருக்கும் கஷ்டத்தையும் கிராம வாழ்க்கையில் இருக்கும் சுகத்தையும் உணர்வார்கள். கிராமங்களை விட்டு நகரத்துக்கு வந்து குடியேறும் ஆசையை ஒழித்துக் கிராம முன்னேற்றத்துக்காகப் பாடு படுவார்கள்.

இதைக் காட்டிலும் தற்சமயம் நமது நாட்டுக்குச் செய்யக்கூடிய சேவை வேறு என்ன இருக்கிறது?

* * *

1950-ம் வருஷம். குடியரசு வாரம் கொண்டாடப்படுகிறது. நமக்குச் சுதந்திரத்தை வாங்கித் தந்த காந்தி மகானின் சரித்திரம் வில்லுப் பாட்டாகப் பாடப்படுகிறது. இது முடிந்ததும் கொடியேற்றுவிழா நடக்கிறது. கடைசியில், தமக்குப் போட்ட ரோஜாப்பூ மாலைகளை எல்லாம் மூட்டை கட்டிக் கொண்டு ஒரு தேசபக்தர் தம் வீட்டுக்கு வருகிருர். வரும்போதே, "இன்று முதல் எல்லாரும் இந்நாட்டு மன்னர்" என்று உற்சாகத்துடன் சொல்லிக் கொண்டே வருகிருர். தேசபக்தரின் மனைவி கொஞ்சம் பொல்லாதவள். அவள் இதைக் கேட்டதும் "நமது உதவிப் பிரதம மந்திரி படேல் ஐயா காதில் விழுந்துவிடப் போகிறது!" என்று சொல்லித் தேச பக்தரைக் கேலி செய்கிருள். "பொதுக் கூட்டத்தில் பேசி விட்டுப் பூ மாலையோடு வந்தால் பூவாவுக்கு எங்கே போகிறது?" என்று வேறு கோபிக்கிருள். அதே சமயத்தில் "அம்மா, தாயே! பிச்சை!" என்று ஒரு பிச்சைக்காரன் வாசலில் சத்தம் போடுகிருன். "இதோ வந்து பாருங்க, ஒரு ராஜாவை!" என்று பிச்சைக்காரனைத்

இந்தச் சண்டையிலிருந்து ஒரு விஷயம் தெளிவாக விளங்கியது. இந்த ரயில் யாரோ ஒரு அன்னிய தேசத்தவருடைய உடைமை. இந்தத் தேசத்து மக்களின் அப்பன் வீட்டு, தாத்தா வீட்டுச் சொத்து இல்லை என்பதுதான்.



ஆனால் நான்கு வருடங்களுக்குப் பிறகு, இப்பொழுது இந்த நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்து குடியாட்சி ஏற்பட்ட பிறகு, இந்த நாட்டின் பொதுச் சொத்துக்கள் ஒவ்வொன்றையும் தங்கள் சொந்தச் சொத்தாக ஜனங்கள் பாவிக்கும் உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஆம், இந்த உரிமை உணர்ச்சி சிறிது எல்லை கடந்து விட்டது என்றும் சொல்லலாம். உதாரணமாக சமீபத்தில் டிக்கட் இல்லாமல் ரயிலில் பிரயாணம் செய்த ஒருவரை டிக்கட் பரிசோதகர் டிக்கட் கேட்டாராம். அதற்கு அந்தப் பிரயாணி 'குடியரசு இந்தியாவில் எங்கள் ரயிலில் நாங்கள் போவதற்கு எதற்காக டிக்கட்?'' என்றாராம்.

சுதந்திரக் குடியரசு நாட்டில் மக்கள் தங்களுக்குள்ள உரிமையை இவ்வளவு உணர்ந்து நடந்து கொள்வதில் சந்தோஷப்பட வேண்டியதுதான்.

சுதந்திரக் குடியரசு இந்தியாவில் ரயிலில் பிரயாணம் செய்ய ஒவ்வொருவருக்கும் தாராளமாக உரிமை உண்டு. அந்த உரிமையைத் தடுக்க எவருக்கும் உரிமை இல்லை. இடம்கொண்ட வரையில் உட்காரலாம். சௌகர்யமாக இடவசதி இருந்தால் படுக்கலாம். மைல் கணக்காக நின்றும் பிரயாணம் செய்யலாம். ஆனால் ஒன்றை யாவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ரயிலில் பிரயாணம் செய்ய எப்படி ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டோ அதேபோல டிக்கட் வாங்கிக் கொண்டுதான் ரயிலில் பிரயாணம்செய்ய வேண்டுமென்பது கடமை. இதைத் தெரிந்து கொள்ளாதவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால் அதற்காக கோடை விடுமுறைப் பள்ளிக்கூடம் ஒன்றை இந்த முச்சந்தியில் நடத்துவதற்கு நான் தயாராயிருக்கிறேன். அப்படி நடத்தினால் அந்தப் பள்ளிக்கூடத்தில் முதல் மாணவராக ஆந்திர கேசரி ஸ்ரீ பிரகாசம் பந்துலுகாரு சேருவாரென்று எதிர்பார்க்கிறேன். ஏனென்றால் சில தினங்களாக அவர் சட்ட சபையில் இடம் மாறி உட்கார்ந்து உரிமை எது கடமை எது என்று தெரியாமல் தடுமாறுகிறார்.

* * *

சமீபத்தில் ஜோதிபுரி மகாராஜாவின் சகோதரிக்கும் பரோடா யுவராஜாவுக்கும் வெகு விமரிசையாக விவாகம் நடைபெற்றதாம். அதற்கு எனக்கு அழைப்பு வரவில்லை. அதற்காக நான் வருத்தப்படவில்லை. எந்தச் சுப காரியத்தைச் செய்ய ஆரம்பித்தாலும் முதலில் என்னை நினைத்துத்தானே தலையில் குட்டிக் கொண்டாக வேண்டும்?

''வரதட்சணை வாங்குவது அநியாயம். அதை எதிர்க்க வேண்டும். தடுக்க வேண்டும். நிறுத்த வேண்டும். சட்டம் செய்ய வேண்டும்'' என்று கிளர்ச்சி செய்து கொண்டிருக்கும் இந்தக்காலத்தில் ஜோதிபுரி மகாராஜா பரோடா யுவராஜாவுக்கு பதினைந்து லக்ஷ ரூபாய் வரதட்சணை கொடுத்தாராம்! மேலும் நாற்பத்தேழு தோழிகள், ஒரு யானை, பதினேழு குதிரை, ஐந்து மோட்டார் இவைகளெல்லாம் இந்த வரதட்சணை ஜாபிதாவில் சேர்ந்தவைகளாம். போகட்டும். மகாராஜாக்கள் விஷயம் என்று விட்டு விடலாம். ஆனால் இதைக் காதும் காதும் வைத்தாற்போல் செய்திருக்கக் கூடாதா? மாப்பிள்ளை ஊர்வலமாய் வரும்போது அவர் மீது பதினாயிரம் ரூபாயை ஆகாயத்திலிருந்து மழை போல் பொழிந்தார்களாம்! அதோடு நாற்பத்து ஏழு தோழிகள், ஒரு யானை, பதினேழு குதிரை, ஐந்து மோட்டார் ஆகியவற்றையும் மாப்பிள்ளையின் மீது ஆகாயத்திலிருந்து வர்ஷிக்காமல் விட்டார்களே என்பதற்காக நான் வருந்துகிறேன். போகட்டும்; அவர்கள் செய்யத் தவறிய இந்தக் காரியங்களைத் தமிழ் நாட்டு மாமனார்களாவது தவறாமல் செய்வார்கள் என்று நம்புகிறேன். ஐந்து மூட்டை அரிசி, ஏழு மூட்டை சர்க்கரை, ஐம்பது மணு கற்கண்டு, ஆறு குண்டு விறகு. பத்து மூட்டை புளி இவைகளை ஊர்வலமாக வரும் மாப்பிள்ளைகள் மீது ஆகாயத்திலிருந்து வர்ஷித்தால் வரதட்சணை வாங்கப் பிரியப்படும் மாப்பிள்ளைகள் எல்லோரும் அளவற்ற ஆனந்தமும் திருப்தியும் அடைவார்கள் என்று நம்புகிறேன்.

முச்சந்தி

துதிக்கையர் எழுதுகிறார் :

முருகன் வந்தான். "என்ன அண்ணா! இப்படி சந்தியிலே நிற்கிறாய்?" என்றான்.

எனக்குக் கோபம் கோபமாக வந்தது. வந்த கோபத்தை ஒரு விதமாக அடக்கிக் கொண்டேன். என்ன இருந்தாலும் தப்பிதானே! விளையாட்டுப் பிள்ளை. குறும்புத்தனம் அவன் பிறவியோடு வந்த சுபாவம். "தம்பி! இப்படி நான் முச்சந்தியிலே நிற்காவிட்டால் என்ன விபரீதம் நடக்கும் தெரியுமா? அது உனக்குத் தெரியாது; அதனால்தான் கேலி செய்கிறாய்" என்றேன்.

"எனக்குத் தெரியும், அண்ணா! தெரியும். இந்த முச்சந்தியிலே நீ நிற்காவிட்டால் சாலையில் எதிர் எதிரே வரும் மோட்டார், சைக்கிள் முதலிய வாகனங்களெல்லாம் ஒன்றோடொன்று மோதிக் கொள்ளும்" என்றான் கேலியாகச் சிரித்துக் கொண்டே.

"அதற்காக நான் நிற்கவில்லை. அதோ பார்! ஒரு போலீஸ்காரன் நிற்கிறான். நான் எதற்காக நிற்கிறேன் தெரியுமா? இந்த உலகத்தில்; அன்றன்று நடக்கும் அரசியல், சமூகம், பொருளாதாரம், இன்னும் துண்டு துக்கடா விஷயங்களையெல்லாம் சேகரித்து நல்லவை கெட்டவைகளைப் பிரித்து அலசி ஆராய்ந்தறியத்தான்" என்றேன்.

"நீ மாத்திரம் அலசி ஆராய்ந்து அறிந்து விட்டால் போதுமா, அண்ணா? மற்றவர்களும் தெரிந்து கொள்ள வேண்டாமா?" என்றான் முருகன்.

"கட்டாயம் அறிந்து கொள்ள வேண்டியதுதான். இதோ பார்......" என்று துதிக்கை இடுக்கில் மறைத்து வைத்திருந்த ஒரு கத்தை காகிதத்தையும் பேனாவையும் எடுத்துக் காட்டினேன்.

"சபாஷ், நன்றாக எழுது!" என்று சொல்லிக் குறும்பாகச் சிரித்து விட்டு முருகன் ஓடி மறைந்து விட்டான்.

*　　*　　*

நான்கு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் ரயில் பிரயாணம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. என்ன செய்வது, என் வாகனமாகிய மூஷிகனுக்குக் கொஞ்சம் கால் சுளுக்கு! அவனை ஒரு வாரம் ஓய்வு எடுத்துக்கொள்ளச் சொல்லிவிட்டு ரயில் மூலம் பிரயாணம் செய்ய உத்தேசித்தேன். நான் ரயிலில் பிரயாணம் செய்தேன் என்றால் ஏதாவது 'குட்ஸ்' வண்டியில்தான் வசதியாக இடம் கிடைத்திருக்கும் என்று நீங்கள் சகஜமாக நினைக்கக்கூடும். அப்படி நினைத்தாலும் நினைப்பதாயிருந்தாலும் தவறு. சாதாரண பிரயாணிகள் செல்லும் மூன்றாவது வகுப்பு வண்டியிலேயே என் பிரயாணத்தைத் தொடங்கினேன்.

நான் ஏறியிருந்த பெட்டியில் என்னைப் போலவே உடல் ஆகிருதியுள்ள வேறொரு மனிதர் நான்கு பேர் உட்காரும் இடத்தை ஆக்கிரமித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். வண்டியில் கூட்டம் அதிகமாய் இருந்ததால் அனேகம் பேர் நின்றுகொண்டே பிரயாணம் செய்ய நேர்ந்தது. அந்தப் பருத்த மனிதர் ஒருவரே நான்கு பிரயாணிகளின் இடத்தை அடைத்துக்கொண்டு உட்கார்ந்திருப்பது, கால் கடுக்க நின்று நெடு நேரமாகப் பிரயாணம் செய்து கொண்டு வந்த ஒருவருக்கு ஆத்திரத்தை உண்டாக்கியது. அவரை வம்புக்கு இழுக்க வேண்டுமென்ற நோக்கத்தில் "சார்! கொஞ்சம் நகர்ந்து நான் உட்கார இடம் தருகிறீர்களா?" என்று கேட்டார்.

அந்தப் பருமனான மனிதர் எந்தப் பக்கம் நகர்ந்து மற்றவருக்கு இடம் கொடுக்க முடியும் என்றுதான் எனக்கு விளங்கவில்லை. கொஞ்சம் அசைந்து கொடுத்தார். ஆனால் இடம்தான் ஏற்படவில்லை. "இங்கே இடம் சரியாக இருக்கிறதே; நான் எங்கே எப்படி நகர்ந்து இடங் கொடுக்க முடியும்?" என்றார் அனுதாபத்தோடு.

"எங்கே நகருகிறதா? நல்ல நியாயம். நீயே நாலு பேர் உட்காருகிற இடத்தை அடைத்துக் கொண்டிருக்கிறாயே? இது என்ன உன் அப்பன் வீட்டு ரயிலா?" என்று கோபமாகக் கேட்டார் நின்று கொண்டிருந்த பிரயாணி.

தடித்த மனிதருக்கும் சிறிது கோபம் வந்தது. "எங்க அப்பன் வீட்டு ரயில் இல்லே! உங்கப் பாட்டன் வீட்டு ரயில்" என்று உறுமினார்.

இப்படியே வார்த்தை வளர்ந்தது. வாய் வீச்சு மீறி கை வீச்சுக்கு வருமோ என்று எல்லோரும் எதிர்பார்க்கும் நிலைமையில் வண்டி ஒரு ஸ்டேஷனில் நின்றது. நல்லவேளை அந்தப் பருத்த மனிதர் இறங்க வேண்டிய இடம் அதுதான் போலிருக்கிறது. அவர் மெதுவாக இறங்கினார். அதனால் வண்டியில் நாலு பேருக்கு வசதியாக உட்கார இடம் கிடைத்தது.

மாபெரும் தலைவராகவும் மகத்தான தேசபக்தர் என்றும் கருதுகிறார்கள் என்பதை நான் மறந்துவிட முடியாது. உங்களுடைய அரசியல் கொள்கைகளுடன் மாறுபட்டவர்களும் உங்களை உயர்ந்த இலட்சியங்களுடைய உத்தம புருஷராகக் கருதுகிறார்கள். எனினும், நான் உங்களை ஒரே ஒரு முறையில்தான் பார்க்க வேண்டியதாயிருக்கிறது. நீங்கள் சட்டத்துக்கு உட்பட்ட பிரஜை; சட்டத்தை மீறிக் காரியம் செய்ததாக நீங்களே ஒப்புக் கொள்கிறீர்கள். நீங்கள் பலாத்காரத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்து வந்திருப்பதை நான் மறந்துவிடவில்லை. பல சமயங்களில் பலாத்காரம் நிகழாமல் தடுப்பதற்கும் முயன்றிருக்கிறீர்கள். ஆனாலும் உங்களுடைய அரசியல் பிரசாரத்தின் இயல்பும், யாரிடையே பிரசாரம் செய்தீர்களோ அவர்களுடைய இயல்பும் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அப்படித் தெரிந்தும் உங்களுடைய பிரசாரம் பலாத்காரத்திலேயே வந்து முடியும் என்பதை எப்படி நீங்கள் அறிந்து கொள்ளாமலிருந்தீர்கள் என்பதை என்னால் அறிந்து கொள்ளவே முடியவில்லை.

உங்களைச் சுதந்திரமாக விட்டு வைப்பது எந்த அரசாங்கத்துக்கும் முடியாத காரியமாகச் செய்து விட்டீர்கள். இதைக் குறித்து இந்தியா தேசத்தில் உண்மையாக வருத்தப்படாதவர்கள் யாருமே இல்லை. உங்களுக்கு நான் செலுத்த வேண்டிய கடமையையும் பொது நன்மைக்காக நான் செய்ய வேண்டிய கடமையையும் சீர்தூக்கிப் பார்த்துத் தண்டனை விஷயமாக ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன். பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னால் கிட்டத்தட்ட இதே விதமான வழக்கு ஒன்று இதே சட்டத்தின் கீழ் நடைபெற்றது. பால கங்காதர திலகரின் வழக்கைச் சொல்லுகிறேன். அவர் மீது முடிவாக விதிக்கப்பட்ட தண்டனை ஆறு வருஷம் வெறுங்காவல். ஸ்ரீ திலகருடன் உங்களை ஒப்பிட்டு நடத்துவது நியாயமே என்று நீங்களே ஒப்புக் கொள்வீர்கள். ஒவ்வொரு குற்றத்துக்கும் இரண்டு வருஷம் வீதம் மொத்தம் ஆறு வருஷம் வெறுங்காவல் தண்டனை உங்களுக்கு அளிப்பது என் கடமை என்று கருதி அவ்விதமே தீர்ப்பளிக்கிறேன். ஆறு வருஷத்துக்கு முன்னதாகவே இந்தியாவின் நிலைமையில் ஏற்படும் மாறுதலினால் உங்களுடைய தண்டனைக் காலத்தைக் குறைத்து அரசாங்கம் உங்களை விடுதலை செய்வது சாத்தியமானால் அதன் பொருட்டு என்னைக் காட்டிலும் அதிக மகிழ்ச்சி வேறு யாருக்கும் இராது.''

இந்தியாவை அரசுபுரிய வந்த ஆங்கிலேய அதிகாரிகளில் ஒரு சிலர் தீர்க்க திருஷ்டியும் பெருந்தன்மையும் படைத்தவர்களாயிருந்திருக்கிறார்கள். அவர்களில் மிஸ்டர் புரூம்பீல்டும் ஒருவர். மகாத்மாவின் பெருமையையும் அவருடைய தலைமையில் இந்தியா சுதந்திரம் அடையப் போகிறது என்பதையும் ஒருவாறு மிஸ்டர் புரூம் பீல்டு உணர்ந்திருந்தார். அத்தகைய உத்தம புருஷரைத் தண்டிக்க வேண்டியிருக்கிறதே என்று கஷ்டப்பட்டுக்கொண்டே அவர் தீர்ப்பளித்திருப்பது நன்றாய்த் தெரிகிறதல்லவா?

பின்னர், ஸ்ரீ சங்கர்லாலுக்கு ஒரு வருஷம் வெறுங் காவலும் ஆயிரம் ரூபாய் அபராதமும் நீதிபதி அளித்தார்.

தீர்ப்பைக் கேட்ட பிறகு காந்திஜியும் தம்முடைய திருப்தியைப் பின்வருமாறு தெரிவித்துக் கொண்டார்:—

''ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். லோகமான்ய பால கங்காதர திலகருடன் என்னை ஒப்பிட்டுக் கூறியதைப் பெறற்கரும் பேறாகவும் மிகச் சிறந்த கௌரவமாகவும் கருதுகிறேன். எனக்குத் தாங்கள் கொடுத்திருக்கும் தண்டனையைக் காட்டிலும் குறைவாக வேறு எந்த நீதிபதியும் கொடுத்திருக்க முடியாது. தாங்கள் என்னை நடத்தியதைக் காட்டிலும் மரியாதையாக யாரும் நடத்தியிருக்கவும் முடியாது!''

இதைக் கேட்டு விட்டு நீதிபதி புரூம் பீல்டு கோர்ட்டை விட்டுச் சென்றார். மனதில் பெரும் பாரத்துடனேதான் அவர் சென்றிருக்க வேண்டும்.

காந்திஜியோ முகமலர்ச்சியுடன் தம்மைச் சுற்றி நின்றவர்களைப் பார்த்தார். ஆசிரம வாசிகளும் நண்பர்களும் அவருடைய பாதங்களைத் தொட்டு விடை பெற்றுக் கொண்டார்கள். இப்படிச் செய்கையில் சிலர் கண்ணீர் விட்டார்கள்; சிலர் விம்மி அழுதார்கள். காந்திஜி ஒவ்வொருவருக்கும் ஆறுதலாகச் சில வார்த்தைகள் சொல்லித் தைரியப்படுத்தினார். ஸ்ரீ சங்கர்லால் பாங்கரும் புன்னகையுடன் விளங்கினார். அவர் குதூகலமாயிருப்பதற்குக் கேட்பானேன்? உலக சிரேஷ்டராகிய உத்தம புருஷருடன் கைதிக் கூண்டில் நின்று தண்டனை அடைந்து சிறை செல்லுவதற்கு எவ்வளவு அவர் கொடுத்து வைத்திருக்க வேண்டும்?

நண்பர்கள் அனைவரும் மகாத்மாஜி வற்புறுத்தியதன் பேரில் பிரிய மனமின்றிப் பிரிந்து சென்றார்கள்.

பிறகு போலீஸார் மகாத்மாவையும் ஸ்ரீ சங்கர்லால் பாங்கரையும் சபர்மதி சிறைக்குக் கொண்டு போனார்கள்.

அத்தகைய ஊழியம் புரிந்தேன். இந்த ஊழியங்களுக்காகத் தென்னாப்பிரிக்கா சர்க்கார் எனக்கு மெடல்கள் வழங்கினர். இந்திய சர்க்காரும் 'கெய்ஸரி ஹிண்ட்' தங்கப் பதக்கம் எனக்கு அளித்தார்கள். இங்கிலாந்துக்கும் ஜெர்மனிக்கும் யுத்தம் மூண்டபோது நான் இங்கிலாந்தில் இருந்தேன். லண்டனில் வசித்த இந்தியர்களைக் கொண்டு யுத்த சேவைக்குத் தொண்டர் படை திரட்டினேன். கடைசியாக, 1918-ல் டில்லியில் நடந்த யுத்த மகாநாட்டில் லார்ட் செம்ஸ்போர்டு செய்த விண்ணப்பத்தை முன்னிட்டு, என் உடல் நலம் கெட்டிருந்ததையும் பொருட்படுத்தாமல், கெயிரா ஜில்லாவில் சேனைக்கு ஆள் திரட்டும் வேலை செய்தேன். இந்த ஊழியங்களை யெல்லாம் நான் செய்தபோது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் என்னுடைய நாட்டாருக்குப் பூரண சம அந்தஸ்துக் கிடைக்கப் போகிறதென்று எதிர் பார்த்தேன்.

ராவ்லட் சட்டத்தின் மூலம் எனக்கு முதலாவது பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது. அச்சட்டம் என்னுடைய ஜனங்களின் சுதந்திரத்தை அடியோடு பறிப்பதாயிருந்தது. பிறகு பஞ்சாப் பயங்கர சம்பவங்கள் தொடர்ந்தன. இந்தியாவில் முஸ்லிம்களுக்குப் பிரிட்டிஷ் முதன் மந்திரி அளித்த வாக்குறுதி காற்றில் விடப்பட்டதையும் கண்டேன்.

இவ்வளவுக்கும் பிறகு கூட, அமிருதசரஸ் காங்கிரஸில் மாண்டகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களை ஒப்புக் கொண்டு நடத்திவைக்க வேண்டும் என்று நான் போராடினேன். அதன் மூலம் பஞ்சாப்—கிலாபத் அநீதிகளுக்குப் பரிகாரம் கிடைக்கும் என்று நம்பினேன்.

என்னுடைய நம்பிக்கை பாழாயிற்று. பஞ்சாப் கொடுமைகளுக்குக் காரணமாயிருந்த அதிகாரிகள் அவர்களுடைய உத்தியோகங்களில் நீடித்திருந்தார்கள். புதிய சீர்திருத்தங்களின் மூலம் இந்தியாவின் செல்வம் மேலும் சுரண்டப்படும் என்பதும் இந்தியாவின் அடிமைத்தனம் நீடிக்கும் என்பதும் தெளிவாயின."

பிரிட்டிஷ் ஆட்சியினால் இந்தியா அடைந்துள்ள தீங்குகளை மகாத்மா விவரித்து விட்டு மேலும் கூறியதாவது:—

"இந்திய மக்களின் சுதந்திரத்தைப் பறிப்பதற்காக ஏற்பட்ட சட்டங்களுக்குள்ளே 124-ஏ முதன்மை ஸ்தானம் வகிக்கிறது. இந்திய மக்களின் பேரன்புக்குப் பாத்திரமான தேசபக்தர்கள் பலர் மேற்படி சட்டத்தின் கீழ்ச் சிறைப்பட்டிருக்கிறார்கள். ஆகவே இந்தச் சட்டத்தின் கீழ்க் கைது செய்யப் பட்டதை நான் ஒரு பாக்கியமாகவே கருதுகிறேன். தனிப்பட்ட அதிகாரி யார் பேரிலும் எனக்கு வெறுப்புக் கிடையாது. அரசரிடத்திலும் எனக்கு அப்ரீதி கிடையாது. ஆனால் இந்தியாவில் முன் நடந்த எந்த ஆட்சியைக் காட்டிலும் அதிக தீங்கு செய்திருக்கும் பிரிட்டிஷ் ஆட்சி முறையை வெறுப்பது என்னுடைய கடமை. இந்த ஆட்சி முறையில் விசுவாசம் வைப்பது பாவம். எனக்கு விரோதமான சாட்சியங்களாகக் குறிப்பிட்ட கட்டுரைகளை எழுதியது நான் செய்த பெரும் பாக்கியம்.

சட்டப் பிரகாரம் நான் செய்திருப்பது பெருங் குற்றந்தான்; ஆனால் என்னுடைய அபிப்பிராயத்தில் அது என்னுடைய பரம தர்மம். ஆகவே நீதிபதியாகிய தாங்கள் என்னைக் குற்றமற்றவன் என்று கருதினால் தங்களுடைய உத்தியோகத்தை ராஜிநாமா செய்ய வேண்டும். என்னைக் குற்றவாளி என்று கருதினால் சட்டப்படி அதிகமான தண்டனை ஏது உண்டோ, அதை அளிக்க வேண்டும்."

இவ்விதம் மகாத்மா காந்தி உலக சரித்திரத்திலேயே பிரசித்தி பெறக் கூடிய வாக்குமூலத்தைப் படித்து முடித்தார். சற்று நேரம் கோர்ட்டில் நிசப்தம் நிலவியது. கோர்ட்டில் இம்மாதிரி வாக்குமூலத்தை யாரும் அது வரை கேட்டதுமில்லை; கேள்விப் பட்டதுமில்லை.

பின்னர், நீதிபதி புரும்பீல்டு தமது கடமையை நினைவு படுத்திக் கொண்டு ஸ்ரீ சங்கர்லால் பாங்கரைப் பார்த்து, "நீங்கள் ஏதாவது சொல்லப் போகிறீர்களா?" என்று கேட்டார்.

அதற்கு ஸ்ரீ பாங்கர், "குறிப்பிட்ட கட்டுரைகளை அச்சிட்டுப் பிரசுரித்தது என்னுடைய பாக்கியம் என்று கருதுகிறேன். நான் குற்றவாளி என்று ஒப்புக் கொள்ளுகிறேன். தண்டனையைப் பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை" என்றார்.

நீதிபதி புரும்பீல்டு பின்வரும் தீர்ப்பை எழுதிக் கோர்ட்டில் படித்தார்:—

"மிஸ்டர் காந்தி! குற்றவாளி என்று ஒப்புக் கொண்டதால் என்னுடைய வேலையை ஒரு விதத்தில் சுலபமாக்கி விட்டீர்கள். ஆனாலும் உங்களுக்கு தண்டனை என்ன கொடுப்பது என்பது எந்த நீதிபதியையும் திணறச் செய்யக் கூடிய கடினமான பிரச்னைதான். சட்டமானது மனிதர்களுக்குள் பெரியவர் சின்னவர் என்ற பேதம் காட்டக்கூடாது. ஆன போதிலும் நான் விசாரித்திருக்கிற அல்லது விசாரிக்கக் கூடிய பிற குற்றவாளிகளுடனே உங்களை ஒன்றாகப் பாவிப்பது இயலாத காரியம். கோடிக் கணக்கான உங்கள் தேசமக்கள் உங்களை

டர் காந்தி அரசாங்க துவேஷப் பிரசாரம் செய்து வந்திருக்கிறார் என்றும் எடுத்துக் கூறினார். "எங் இந்தியா" பத்திரிகையிலிருந்து இன்னும் சில கட்டுரைகளைத் தம் கட்சிக்கு ஆதாரமாகக் குறிப்பிட்டார். "இந்தக் கட்டுரைகளில் மிஸ்டர் காந்தி அஹிம்சையை வற்புறுத்தியிருக்கிறார் என்பது உண்மைதான். அதனால் ஏதேனும் பிரயோஜனம் உண்டா? இந்தக் கேள்விக்குச் சௌரி சௌராவிலும், சென்னையிலும், பம்பாயிலும் நடந்த சம்பவங்கள் பதில் சொல்லுகின்றன. இந்தச் சம்பவங்களினால் எவ்வளவோ பேர் கஷ்ட நஷ்டங்களை அடைந்திருக்கிறார்கள். இதையெல்லாம் கவனித்துக் கோர்ட்டார் தண்டனையைத் தீர்மானிக்க வேண்டும்" என்று கூறி முடித்தார்.

நீதிபதி:—மிஸ்டர் காந்தி! தண்டனை சம்பந்தமாக நீங்கள் ஏதாவது சொல்லிக் கொள்ள விரும்புகிறீர்களா?

காந்திஜி:—நான் ஒரு வாக்கு மூலம் கொடுக்க விரும்புகிறேன்.

நீதிபதி:—வாக்கு மூலத்தை எழுத்தில் எழுதிக் கொடுத்து விட்டால் ரிகார்டில் சேர்த்துக் கொள்வேன்.

காந்திஜி:—வாக்கு மூலம் எழுதியிருக்கிறேன். கோர்ட்டில் படித்து விட்டுக் கொடுத்து விடுகிறேன்.

மகாத்மாவின் விருப்பத்தின்படி வாக்கு மூலத்தைக் கோர்ட்டில் படிப்பதற்கு நீதிபதி சம்மதம் கொடுத்தார்.

எழுதியிருந்த வாக்கு மூலத்தைப் படிப்பதற்கு முன்னால் மகாத்மா வாய்மொழியாகச் சில வார்த்தைகள் சொன்னார்.

"அட்வகேட் ஜெனரல் என்னைப் பற்றிக் கூறியவற்றை நான் முழுதும் ஒப்புக் கொள்கிறேன். இப்போதுள்ள அரசாங்க முறையின் மீது அப்ரீதையை உண்டாக்குவதில் நான் அளவில்லாத ஆத்திரம் கொண்டிருந்தேன். 'எங் இந்தியா'வுக்கு ஆசிரியராவதற்கு முன்னாலேயே இந்த வேலையை ஆரம்பித்து விட்டேன். பம்பாய், சென்னை, சௌரி-சௌரா சம்பவங்களுக்கு என் பேரில் அட்வகேட் ஜெனரல் பொறுப்புச் சுமத்துவதையும் நான் ஒப்புக் கொள்கிறேன். நெருப்புடன் விளையாடுகிறேன் என்பது எனக்குத் தெரிந்துதான் இருந்தது. அஹிம்சை என்னுடைய மதத்தின் முதற் கொள்கை; கடைசிக் கொள்கையும் அதுவே. ஆனாலும் என்னுடைய தேசத்துக்கு மகத்தான தீங்கிழைத்த ஆட்சி முறையை என்னால் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. ஆகவே இந்தப் போரில் துணிந்திறங்கினேன். என்னுடைய நாட்டு மக்கள் சில இடங்களில் வெறி கொண்டு பயங்கரச் செயல்களை நிகழ்த்தி விட்டார்கள். அதன் பொறுப்பை நான் தட்டிக் கழிக்க விரும்பவில்லை. இந்தக் குற்றத்துக்கு அதிகமான தண்டனை எதுவோ அதை எனக்கு விதிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்......"

உலக சரித்திரத்தில் ஆயிரக்கணக்கான வழக்குகள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் எந்தக் கோர்ட்டிலாவது, எந்த வழக்கிலாவது, இப்படிக் 'குற்றவாளி' என்று கைதிக் கூண்டில் நின்றவர் ஒருவர், "எவ்வளவு அதிகமான தண்டனை உண்டோ, அதை எனக்கு அளிக்க வேண்டும்!" என்று கேட்டதுண்டா? கிடையாது. இத்தகைய விந்தை இந்தப் புண்ணிய பூமியிலேதான் நடந்தது. ஆமதாபாத் செஷன்ஸ் கோர்ட்டில் 1922ம் வருஷம் மார்ச்சு மீ 18உ நடந்தது.

காந்திஜி பின்னர் தாம் எழுத்து மூலம் ஏற்கெனவே தயாரித்திருந்த வாக்கு மூலத்தைப் படித்தார். அந்த வாக்கு மூலத்தில், தாம் எப்படிப் பூரண இராஜ விசுவாசியாகத் தமது வாழ்க்கையைத் தொடங்கி, படிப்படியாக ஏமாற்றமடைந்து, முடிவில் அரசாங்கத்தின் மேல் விரோதத்தைப் பரப்புவதையே தம்முடைய வாழ்க்கை இலட்சியமாகக் கொள்ள நேர்ந்தது என்பதை விவரித்தார்.

அந்த வாக்குமூலத்தில் காந்திஜி கூறிய வார்த்தை ஒவ்வொன்றும் சத்தியத்தின் ஒளியினால் சுடர்விட்டுப் பிரகாசித்தது. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் கொடுமைகளையும் இந்திய மக்களின் மாசுகளையும் ஒருங்கே தகிக்கும் அக்னி ஜ்வாலையாக அந்த வாக்குமூலம் திகழ்ந்தது.

"தென்னாப்பிரிக்காவில் 1893-ம் ஆண்டில் என்னுடைய பொது வாழ்க்கை ஆரம்பமாயிற்று. அந்த நாட்டில் பிரிட்டிஷ் அதிகாரத்துடன் எனக்கேற்பட்ட முதல் அநுபவம் அவ்வளவு சந்தோஷகரமாயில்லை. நான் இந்தியனாயிருந்த காரணத்தினால் எனக்கு மனித உரிமைகளே இல்லை என்று அறிந்தேன்.

இதனால் நான் திகைப்படைந்துவிடவில்லை. பிரிட்டிஷ் ஆட்சி நல்ல ஆட்சிதான் என்றும், இந்தியர்களை நடத்தும் முறை அதில் ஏற்பட்ட சிறு கேடு என்றும், அந்தக் கேட்டைப் போக்கிவிடலாம் என்றும் நம்பினேன். ஆகையால் சர்க்காருடன் மனப்பூர்வமாக ஒத்துழைத்தேன்.

1899-ல் போயர் யுத்தம் ஏற்பட்டபோது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கே அபாயம் நேர்ந்தது. அந்த நிலைமையில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு என் மனப்பூர்வமான ஊழியத்தை அளித்தேன். போர்க்களத்தில் காயமடைந்த வீரர்களுக்குப் பணிவிடை செய்வதற்காகத் தொண்டர் படை திரட்டினேன். 1906-ம் ஆண்டில் ஸுலு கலகத்தின்போதும்

மாந்தருக்குள் ஒரு தெய்வம்

ரா. கி.

40. தண்டனை

ஆமதாபாத் செஷன்ஸ் கோர்ட்டில் 1922-ம் வருஷம் மார்ச்சு மாதம் 18-ந் தேதி அந்தச் சரித்திரப் பிரசித்திபெற்ற மாபெரும் விசாரணை நடந்தது.

முப்பது கோடி மக்களின் உள்ளத்தில் குடிகொண்டிருந்த மகத்தான தலைவர் கைதிக் கூண்டிலே நின்றார்.

அவர் பெயர் ஸ்ரீ மோகன்தாஸ் கரம்சந்த்ர காந்தி.

அன்னிய நாட்டிலிருந்து வந்த அதிகார வர்க்கத்தின் பிரதிநிதி ஒருவர் நீதிபதியின் பீடத்தில் அமர்ந்திருந்தார்.

அவர் பெயர் மிஸ்டர் ஸி. என். புரும்பீல்டு ஐ. ஸி. எஸ்.

மேற்படி வழக்கு விசாரணையின் விவரங்கள் பத்திரிகையில் வெளியானபோது கைதிக் கூண்டிலே நின்றது மகாத்மா காந்தியா அல்லது பிரிட்டிஷ் சர்க்காரா என்று சந்தேகம் தோன்றும்படியிருந்தது.

பாவம்! ஜில்லா ஜட்ஜ் மிஸ்டர் புரும்பீல்டு திணறிப் போனார்! அவருடைய திணறலுக்கு அறிகுறி அவர் கூறிய தீர்ப்பில் தெளிவாக இருந்தது.

* * *

பம்பாய் சர்க்காரின் அட்வகேட் ஜெனரல் ஸர் ஜே. டி. ஸ்ட்ராங்மான் அரசாங்கத்தின் சார்பாக மேற்படி வழக்கை நடத்தினார்.

எதிரிகளான காந்தி மகாத்மாவுக்கும் ஸ்ரீ சங்கர்லால் பாங்கருக்கும் வக்கீல் கிடையாது. எதிர் வழக்காடுவதாக அவர்களுக்கு உத்தேசமேயில்லை.

ஆரம்பத்தில் நீதிபதி குற்றப் பத்திரிகையை வாசித்துக் காட்டினார். "எங் இந்தியா"வில் எழுதிய மூன்று கட்டுரைகளுக்காக எதிரிகள் பேரில் 124-ஏ பிரிவின்படி வழக்குத் தொடரப் பட்டிருப்பதாகத் தெரிவித்தார். அரசாங்கத்தின் பேரில் துவேஷத்தை உண்டாக்குதல், வெறுப்பை வளர்த்தல், அதிருப்தியைப் பெருக்குதல் ஆகியவை மேற்படி பிரிவின் கீழ் சொல்லப்பட்டிருக்கும் குற்றங்கள். இவற்றின் கருத்தை நீதிபதி விளக்கிச் சொல்லிவிட்டு, "மிஸ்டர் காந்தி! நீங்கள் குற்றத்தை ஒப்புக் கொள்கிறீர்களா? அல்லது விசாரிக்கப்பட விரும்புகிறீர்களா?" என்று கேட்டார்.

மகாத்மா:—குறிப்பிட்ட குற்றங்கள் எல்லாவற்றையும் செய்ததாக ஒப்புக் கொள்கிறேன். குற்றப் பத்திரிகையில் அரசரின் பெயரைக் குறிப்பிடாமல் விட்டிருக்கிறது. இது சரியான காரியம்.

நீதிபதி:—மிஸ்டர் பாங்கர்! நீங்கள் குற்றவாளி என்று ஒப்புக் கொள்கிறீர்களா! அல்லது கோர்ட்டில் விசாரணை கோருகிறீர்களா?

பாங்கர்:—குற்றவாளி என்று ஒப்புக் கொள்கிறேன்.

இந்த கட்டத்தில் அட்வகேட் ஜெனரல் ஸர் ஜே. டி. ஸ்ட்ராங்மான் குறுக்கிட்டார். "எதிரிகள் குற்றவாளிகள் என்று ஒப்புக்கொண்ட போதிலும் முழு விசாரணையும் நடத்தவேண்டும் என்று நான் கோருகிறேன். சாட்சிகள் விசாரிக்கப்பட வேண்டும்" என்றார்.

நீதிபதி:—நீங்கள் சொல்வதை நான் ஒப்புக் கொள்ள முடியாது. எதிரிகள் குற்றவாளிகள் என்று ஒப்புக் கொண்ட பிறகு சாட்சி விசாரணை எதற்கு? தண்டனை விஷயம் தீர்மானிக்கப்பட வேண்டும். அது சம்பந்தமாக நீங்கள் சொல்வதையும் மிஸ்டர் காந்தி சொல்வதையும் கேட்கத் தயாராயிருக்கிறேன்.

இதைக் கேட்டுக் காந்திஜி புன்னகை புரிந்தார். விசாரணைச் சடங்குகள் அவசியமில்லை என்றும் அபிப்பிராயமே மகாத்மாவுக்கும் இருந்தது.

பிறகு ஸர் ஜே. டி. ஸ்ட்ராங்மான் எதிரிகளுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்பதற்குக் காரணங்களை எடுத்துச் சொன்னார். குறிப்பிட்ட இந்த மூன்று கட்டுரைகளும் ஏதோ யோசியாமல் எழுதப்பட்ட விஷயங்கள் அல்லவென்றும், நெடுநாளாகவே மிஸ்

ஆராய்ச்சி செய்யப் போகிறார்களாம். இத்தனை வருஷகாலமாக நன்றாக ஒட்டிக் கொண்டிருந்த கோந்து சுயராஜ்யம் வந்ததும் திடீரென்று ஒட்டிக் கொள்ளாமல் இருக்கும் மர்மம் நமக்குப் புரியவில்லை. பழைய அரசாங்கத்தின்போது அது சரியாக ஒட்டிக் கொள்ளவில்லையென்று வைத்துக் கொண்டாலும், அப்பொழுது பொது ஜனங்கள் கடிதங்களையும் ஸ்டாம்புகளையும் ஒட்டாமல் அனுப்பிக் கொண்டிருந்தார்களா? அது போல் இனிமேலும் செய்வார்கள் அல்லவா?

கவர்களையும் ஸ்டாம்புகளையும் ஒட்டுவதற்கு நல்ல கோந்து வேண்டுமானால், அங்கங்கே தபாலாபீஸ்களில் ஏதேனும் மாவைப் போட்டுக் காய்ச்சிக் கூழ் தயாரித்து வைத்துக் கொள்ளலாம். போஸ்டாபீஸில் சிப்பந்திகளுக்கு ஹிந்தி தெரிந்திருப்பதுடன் கூழும் காய்ச்சத் தெரிந்திருக்க வேண்டுமென்று உத்தரவிட்டால் போகிறது!

★

“…ம் பஞ்சாப் ஸ்டேஷனில் துணிகரக் கொள்ளை.”

—செய்தி

ஆலை முதலாளிகளின் துணிக் கொள்ளைக்குப் பிறகு இந்தத் துணிகரக் கொள்ளை வேறு வந்திருக்கிறது போலும்!

★

“பதினைந்து லட்சம் ரூபாய் செலவில் முதியோர் கல்வித் திட்டம் ஒன்றைச் சர்க்கார் பரிசீலித்து வருவதாகக் கல்வி மந்திரி கனம் மாதவமேனன் அறிவித்திருக்கிறார்.”

—ஒரு செய்தி

பின்னே என்ன குறைச்சல்? இன்று இம் மாகாணத்தில் பள்ளிக்கூடம் போகாமலிருக்கும் முப்பத்தைந்து லட்சம் குழந்தைகளும் ஐம்பது வயதைத் தாண்டிய பிறகு இந்த முதியோர் கல்வித்திட்டத்தின் கீழ் தாராளமாய்க் கல்வி கற்றுக் கொள்ளலாம்!

★

டிராம் வண்டிகளின் வரியை ஒன்றுக்கு ஒன்பது மடங்காக உயர்த்தப் போகிறார்களாம். அதாவது இப்போது ஆறு மாதத்துக்கு ஒரு டிராம் வண்டிக்கு 100 ரூபாய் வரி; இனி இந்த வரியை 900 ரூபாயாக உயர்த்துவார்களாம்.

வரி உயர்வு காரணமாகவும் தளவாடங்கள் விலை உயர்ந்து விட்டதாலும் சம்பளத் தொகை உயர்ந்து விட்டதாலும் இனி டிராம் கட்டணமும் உயர்ந்துவிடும் என்று கூறப்படுகிறது.

எது உயர்ந்த போதிலும் டிராம் வண்டி விஷயமாக ஒன்று மட்டும் உயராது என்று நிச்சயமாக நம்பலாம். அதாவது இப்போது டிராம் வண்டிகள் போடும் சத்தம் மட்டும் இனி உயர்வதற்கு இடமில்லை. அவைதான் எத்தனையோ சத்தத்தின் உச்சநிலையை எட்டிப் பிடித்து விட்டனவே!

“மக்கள் பருகும் பான வகைகள் எதுவுமே சரீர சுகத்தைப் பாதிப்பவைதான். சுத்த ஜலம் ஒன்றுதான் சரீர ஆரோக்கியத்துக்கு ஏற்றது” என்று ஆரோக்கியப் பிரசங்கி ஒருவர் அடித்துப் பேசினார்.

“அது எங்கே நம்ம ஜனங்களுக்குத் தெரிகிறது?” என்று நம்முடைய பால்காரன் தலையில் அடித்துக் கொள்ளுகிறான்.

★

“காப்பிக் குடியை விட்டுவிட வழியேயில்லையா?” என்று ஒரு சம்சாரி எழுதிய பத்திரிகைக் கடிதத்தில் கேட்டிருக்கிறார்.

“இல்லாமல் என்ன? சுலபமாய் வயிற்றுக்குள்ளே விட்டு விடலாமே!” என்கிறார் ஒரு காப்பிப் பிரியர்.

★

இந்தியாவின் வைஸ்ராயாக இருந்த லின்லித்கோ பிரபு ஸ்காட்லாந்தைச் சேர்ந்தவர். ஸ்காட்லாந்துக்காரர்கள் ரொம்பக் கருமிகள் என்பதை விளக்கும் பல கதைகள் உண்டு. ஆனால், லின்லித்கோவைப் பற்றி இப்பொழுது வெளி வந்துள்ள கதை ரொம்ப ஸ்வாரஸ்யமாயிருக்கிறது. எடின்பர்க் நகரத்தின் அருகில் 250 வருஷத்துக்கு முன்னால் கட்டப்பட்ட மாளிகை ஒன்று லின்லித்கோவுக்குச் சொந்தமானதாம். இதைக் கட்டி வெகுகாலமாகி விட்டபடியால் இதை ரிப்பேர் செய்யவேண்டிய அவசியம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. ரிப்பேர் செய்யப் பணம் வேண்டுமல்லவா? இந்த ஸ்காட்டிஷ் பிரபு கையை விட்டுப் பணம் செலவு செய்து விடுவாரா?

ஒரு யுக்தி செய்தார். இதுவரை பொது ஜனங்களுக்குத் திறந்துவிடப் படாமலிருந்த தமது மாளிகையை எல்லோரும் வந்து பார்வையிடலாம் என்று கூறினார். சும்மா அல்ல. “தலைக்கு ஒன்றரை ஷில்லிங் கொடுத்து டிக்கட் வாங்கிக் கொண்டு வந்து மாளிகைக்குள் உள்ள சித்திர சிற்ப வேலைப்பாடுகளைக் காணலாம்” என்றார். இந்த யுக்தியின் மூலம் வேண்டிய பணம் சேர்ந்து விட்டதா என்று தெரியவில்லை.

எனினும், லார்ட் லின்லித்கோவின் உதாரணத்தை நம் ஊர் மந்திரிகள் பின்பற்றலாம் என்று தோன்றுகிறது. இப்போதுதான் நம் இந்திய மாகாண சர்க்கார்களுக்குப் பண முடை அதிகமாயிருக்கிறதா? ஆகையால் நம்முடைய மந்திரிகளைப் பேட்டி காண வந்து தாழ்வாரங்களில் நிற்பவர்கள் அப்படி நிற்கும் இடத்துக்கும் நேரத்துக்கும் வாடகை கொடுக்க வேண்டும் என்று வைக்கலாம். ஸ்பெஷல் கட்டணம் கொடுத்தால் முன்னாலேயே ‘நிற்பதற்கு இடம் ரிஸர்வ் செய்யப்படும்’ என்றும் ஏற்படுத்தலாம்.

"அப்படியா? நீ ஊருக்குப் போகும் போது அவரைச் சந்தித்துக் கொஞ்சம் யோசனை சொல்லிவிட்டுப் போ" என்றார் சர்தார் படேல்.

"அவருக்கா? அவருக்கு இன்னொருவர் யோசனை சொல்வதா! அவரே உங்களுக்கெல்லாம் புத்தி சொல்லத்தானே டில்லிக்கு வரப்போகிறார்! போதும்போதாததற்கு ஆசிரியர் ரங்காவும் வருகிறார். அவர்களுடைய புத்திமதியைத் தாங்கள் கேட்டுப் பிழைத்துப் போங்கள்," என்று சொல்லி வெளிக் கிளம்பினேன்.

மார்பிலே கதர்ப் போர்வையும் கையிலே தடியும் கக்கத்தில் புகார் மூட்டையுமாக நமது ஆந்திரகேசரி பிரகாசம்காரு சர்தாரின் ஜாகை வாசலில் வந்து கொண்டிருந்தார்.

படேல்—பிரகாசத்தின் சந்திப்பு சுபமாக முடியுமென்று நம்புகிறேன்.

அக்கப் போர்

சென்ற வாரம் மைசூரில் புளி சத்தியாக்கிரஹம் நடந்தது. மைசூரில் புளியின் விலை ஏகத்தாறாக ஏறியிருந்தது. மைசூரிலிருந்து புளி ஏற்றுமதி செய்வதைத் தடை செய்ய வேண்டுமென்று கோரி ஒரு காங்கிரஸ் ஊழியர் சாகும் வரை உண்ணாவிரதம் ஆரம்பித்தாராம். நல்ல வேளையாக மைசூர் காங்கிரஸ் தலைவி ஸ்ரீமதி யசோதரம்மாவின் வேண்டுகோளின் பேரில் உண்ணாவிரதம் கைவிடப் பட்டது. காந்தி மகானின் உப்பு சத்தியாக்கிரகம் நடந்த நாட்டில் இப்பொழுது ஷிப்பன்லால் சக்ஸேனாவின் சர்க்கரை சத்தியாக்கிரகத்தையும், மைசூர்ப் புளி சத்தியாக்கிரகத்தையும் பார்க்கிறோம். இனி, மளிகைக் கடை சாமான் ஒவ்வொன்றுக்கும் மிளகு சத்தியாக்கிரகம், கொத்தமல்லி சத்தியாக்கிரகம், கடுகு சத்தியாக்கிரகம் என்று நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எதற்கெடுத்தாலும் சத்தியாக்கிரகம் செய்வது உண்ணாவிரதம் இருப்பது என்ற நிலைமை ஏற்பட்ட பிறகு, கடுகைவிடக் கண்ணுக்குத் தெரியாத சாமான்களுக்குக் கூட சத்தியாக்கிரகம் நடக்கும். சாமான் கண்ணுக்குத் தெரியாவிட்டால் என்ன, பத்திரிகைகளில் பெயர் வரும்போது அது கண்ணுக்குத் தெரியுமல்லவா?

★

மே மாதம் முதல் தேதியிலிருந்து மூன்று அமெரிக்கப் பத்திரிகைகள் வாசனை விளம்பரங்களுடன் வெளியாகும்.

—நியூயார்க் செய்தி

நாற்றமெடுக்கும் செய்திகளைப் படித்து வரும் நேயர்களுக்கு இது ஒரு நல்ல வாசனைச் செய்தியாகும்.

★

"ராமாவுக்கும் அவர் மாமாவுக்கும் இடையே சமரசம் ஏற்பட்டுவிடும் என்று தோன்றுகிறது." —பத்திரிகைச் செய்தி

இதை நம்பி ஏமாறவேண்டாம் என்று ஒரு க. மா. எச்சரிக்கிறார்.

பள்ளிக்கூடக் கட்டிடங்கள் கட்டுவதைவிட உபாத்தியாயர்கள் நிலையை உயர்த்துவதுதான் முக்கியமானது என்று [illegible] மூத்தாரில் ஒருவர் கூறியிருக்கிறார்.

உபாத்தியாயர்கள் நிலைமையை உயர்த்த வேண்டுமானால் பள்ளிக்கூடங்களை மூன்று மாடிக் கட்டிடங்களாகக் கட்டிவிட்டால் போயிற்று என்கிறார் ஒரு கண்டிராக்டர்.

★

"ஏக பத்தினிக் கொள்கைக்கு வைதிகர்களும் சாஸ்திரிகளும் எதிர்ப்பு."

—டில்லிச் செய்தி

நாலுநாள் கலியாணம் ஒருநாள் கலியாணமானதிலேயே வைதிகர்களின் வரும்படி ரொம்பவும் குறைந்து போயிருக்கிறது; ஒரு மனைவிக்கு மேல் விவாகம் செய்து கொள்ளக்கூடாது என்றால், வைதிகர்களும் சாஸ்திரிகளும் பிழைப்பதுதான் எப்படி?

★

இந்தியாவின் கால்நடைச் செல்வத்தை அபிவிருத்தி செய்வது மிகவும் அவசியம் என்று அகில இந்திய கால்நடை வைத்தியர்கள் மகாநாட்டில் பம்பாய்க் கவர்னர் கூறினார். —பம்பாய்ச் செய்தி

நம் சென்னையில் டிராம் வண்டிகளும் கவர்ன்மெண்டு பஸ்களும் கால் நடையை அபிவிருத்தி செய்யப் பெரிதும் பிரயத்தனம் செய்வதை ஏன் யாரும் பாராட்டுவதில்லை?

★

அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளில் அணு ஆராய்ச்சியும், ஜல குண்டு ஆராய்ச்சியும் நடந்து கொண்டிருக்கும் போது, இந்திய சர்க்கார் தபால் இலாகா கோந்து ஆராய்ச்சி நடத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள். தபாலாபீஸ்களில் விற்கும் ஸ்டாம்புகளிலும் கவர்களிலும் தடவியிருக்கிறார்கள் அல்லவா? அது திருப்திகரமாக ஒட்டிக் கொள்ளவில்லையாம். முதல்தரமான நல்ல கோந்து தயாரிப்பது எப்படி என்று

இவ்விதம் ராஜாஜியை ஸர்தார் படேல் கரங்களில் பத்திரமாக ஒப்படைத்து விட்டு நான் நேருஜியின் காரில் ஏறக் கொண்டேன். போகும்போது நேருஜியைப் பார்த்து "கராச்சிப் பிரயாணம் ரொம்ப அழகாய்த்தானிருந்தது. இல்லையா?" என்று கேட்டேன். "ஆமாம்; அது உனக்கு எப்படித் தெரிந்தது!" என்று அதிசயத்துடன் கேட்டார்.

"இதோ, மௌரிபூர் விமான கூடத்தில் பாகிஸ்தான் செய்தி இலாகா தங்களுக்கு அளித்த 'போட்டோ ஆல்பம்' சொல்கிறதே!" என்று கூறினேன்.

"அட! இதற்குள் நீ அதை எடுத்துப் பார்த்து விட்டாயா?..." என்றார் நேருஜி.

"தங்கள் மௌரிபூர் விமான நிலயத்தில் பதினைந்து நிமிஷ நேரம் தாமதித்துப் புறப்பட்டீர்களே; அதற்கு என்ன காரணம் என்பதுகூட எனக்குத் தெரியுமே!"

"அது என்ன? சொல் பார்க்கலாம்." என்றார் பண்டிட்.

"பாலம் விமான கூடத்தில் ராஜாஜி வந்து இறங்குவதற்கும் தாங்கள் வருவதற்கும் நேரத்தைச் சரிசெய்யவே தாமதித்துப் புறப்பட்டீர்கள். விமானத்தில் ஏறியதும் ராஜாஜியைப் பார்க்கும் ஆவலினால் விரைவாக விமானத்தை விடச் சொன்னீர்கள். ஆகையால் அரைமணி முன்னதாகவே தங்கள் விமானம் வந்து விட்டது!" என்று சொன்னேன்.

"பெரிய யமகாதகர் நீர்!..." என்று என் முதுகில் ஒரு 'ஷொட்டு' வைத்தார் பண்டித ஜவாஹர்.

* * *

அன்று மாலை ராஜாஜி சர்க்கார் மாளிகையில் ஜனாதிபதி ராஜன்பாபுவுடன் அளவளாவிக் கொண்டிருந்தார்.

நான் இடைநடுவில் புகுந்தபோது ராஜாஜி "இப்போது இங்கே எதற்காக வந்தாய்?" என்று அன்பாகக் கேட்டார்.

"வேறு வேலை இருக்கிறது. இருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் தங்களுக்கு யோசனை சொல்லி விட்டுப் போகத்தான் வந்தேன்..." என்று வினயமாகப் பதில் கூறினேன்.

"அது என்ன அப்படிப்பட்ட அபூர்வ யோசனை?" என்று கேட்டார்.

"பத்திரிகைகளில் ஏதேதோ செய்திகள் வந்த வண்ணமாயிருக்கின்றன. தங்களுக்கு யார் யாரோ என்னென்னவோ பதவிகளை வழங்கிக் கொண்டிருப்பதாகத் தினமும் ஒரு செய்தி வெளியாகிக் கொண்டிருக்கிறது. சர்வதேச ஸ்தானிகர் பதவி கொடுக்கப் போவதாக ஒரு செய்தி; டில்லி யூனிவர்ஸிடியில் வைஸ்சான்ஸ்லர் பதவி கொடுக்கப்போவதாக ஒரு செய்தி; மந்திரி உத்தியோகம் அளிக்கப் போவதாக மற்றொரு செய்தி... இந்த மாதிரி விஷயங்களில் பிறத்தியாருடைய யோசனைகளைக் கேட்காமல் தங்களுடைய யோசனைப்படியே செய்யுங்கள் என்பதுதான் அடியேனுடைய யோசனை..." என்றேன்.

ராஜாஜியும், ராஜன்பாபுவும் சிரித்துக் கொண்டார்கள்.

நான் ராஜன்பாபுவைப் பார்த்து "பாபுஜி! தங்கள் இப்போது ராஜாஜிக்கு அளிக்கவேண்டியது ஒன்றே ஒன்றுதான்......" என்று வேண்டினேன்.

"அது என்னவோ?..." என்று கேட்டார் ஜனாதிபதி.

"ஓய்வுதான்!" என்றேன்.

"ராஜாஜிக்கு 'ஓய்வு' அவ்வளவாக பிடிக்காதே! ஏதாவது வேலை செய்து கொண்டிருக்க வேண்டுமே...... !"

"அதைப் பற்றித் தாங்கள் கவலைப்பட வேண்டாம். சென்னையில் ராஜாஜி செய்வதற்கு வேலை இருக்கிறது. ஸ்ரீ ராம கிருஷ்ண உபநிஷதம் பூர்த்தியாகவில்லை. தமிழ் அகராதி வேலை இப்போதுதான் ஆரம்பமாகியிருக்கிறது......"

"அழகாய்த்தானிருக்கிறது. இதற்குத்தானா ஓய்வு கொடுக்கச் சொன்னாய்? இங்கே எவ்வளவோ வேலை அவருக்குக் காத்திருக்கும்போது......"

"இருந்தாலும் நான் சொல்லுவது அவருடைய மனதுக்கு உகந்த வேலை. மற்றப்படி, ஊர் சுற்றும் ஸ்தானிகர் வேலைக்குச் சரியான ஆசாமி வேறு யாரும் இல்லை யென்றால் நான் ஒருவன் இருக்கவே இருக்கிறேன்; கவலைப்பட வேண்டாம்" என்று கூறிவிட்டு ராஜாஜியைத் திரும்பிப் பார்க்கவே பயந்து கொண்டு ஸர்தார் படேல் ஜாகையை அடைந்தேன்.

ஸர்தார் படேல் ஆழ்ந்த கவலையுடன் அமர்ந்திருந்தார்.

"ஸ்ரீ பிரகாசம்காருவைப் பற்றித்தானே இவ்வளவு கவலையுடன் உட்கார்ந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே பிரவேசித்தேன்.

"ஆமாம்; ஆனாலும் ஸ்ரீ பிரகாசம்காரு இவ்வளவு குறுகிய நோக்கம் படைத்தவராயிருக்க வேண்டாம்......" என்றார் உதவி பிரதம மந்திரி படேல்.

"அப்படி ஒன்றுமில்லையே, ஸ்ரீ பிரகாசம்காரு இப்போது விசால நோக்கத்தோடுதானே விசால ஆந்திர மகாசபையை ஆரம்பித்து வைத்துச் சக்கைப் போடு போட்டிருக்கிறார்!" என்றேன்.

புது டில்லி விஜயம்

[நமது விசேஷ விடாக்கண்ட நிருபர் தலைவர்களுக்கு அளித்த பேட்டி விவரம்]

புது டில்லி பாலம் விமான கூடத்தில் ஸர்தார் வல்லபாய் படேல், ஸ்ரீமதி ராஜகுமாரி அமிருதகௌரி, ஸர் என். கோபாலசாமி ஐயங்கார், லேடி ரை முதலானோர் விசேஷ உற்சாகத்துடனும் ஆவல் நிறைந்த கண்களுடனும் காத்திருந்தார்கள். பாகிஸ்தானுக்கு விஜயம் செய்திருந்த பிரதம மந்திரி நேருஜி, சென்னையிலிருந்து ராஜாஜி அடியேன் ஆகிய மூவரையும் வரவேற்கவே அத்தனை பேரும் அங்கே கூடியிருந்தார்கள். குறிப்பிட்ட நேரத்தில் விமானம் வந்து இறங்கியவுடன் நான் முகத்தில் புன்சிரிப்புத் தவழ விமானத்துக்கு வெளியே பிரசன்னமானேன். அவ்வளவுதான்; எங்கிருந்தோ ஒரு பெரும் கூட்டம் 'திமுதிமு' வென்று என்னை நோக்கி விரைந்து வந்தது. என் கழுத்தில் விழுந்த மாலைகள் என் முக மண்டலத்தை மறைத்தன. (என் ஜவாஹர் கோட்டும், கதர்க்குல்லாயும் நீடூழி வாழ்க! என்னுடைய ஜவாஹர் வேஷத்தைக் கண்டதும் பத்திரிகை நிருபர்களுக்குத் தலைகால் தெரியவில்லை. அதாவது என்னுடைய தலைகாலைத்தான் சொல்கிறேன். ஜவாஹர் உடையில் இருப்பது ஜவாஹர்தானா அல்லது வேறு ஆசாமியா என்று பார்ப்பதற்குக்கூட அவர்களுக்கு அவகாசமில்லை. கராச்சியிலிருந்து நேருஜி வந்துவிட்டதாக எண்ணிக்கொண்டு மளமளவென்று கேள்விமாரிகளைப் பொழிந்தனர். நானும் குட்டை உடைக்காமல் அழுத்தலாகவே இருந்து நெருக்கடியைச் சமாளித்தேன்.)

ஒரு நிருபர் :—கராச்சிப் பிரயாணம் எப்படி இருந்தது?

அடியேன்:—ரொம்ப உற்சாகமாகவே இருந்தது.

கேள்வி :—பாகிஸ்தான் பிரதமர் ஜனாப் லியாகத் அலிகானுடன் என்னென்ன விஷயமாகப் பேச்சு நடந்தது?

பதில் :—பொதுவாக எல்லா விஷயங்களைப்பற்றியும் பேச்சு நடந்தது!

கேள்வி:—ஜனாப் ஜின்னாவின் சமாதி மீது போடப்பட்ட புஷ்பச் செண்டு இந்தியாவிலிருந்து கொண்டு போகப்பட்டதா? அல்லது, பாகிஸ்தானிலேயே தொடுக்கப்பட்டதா?

பதில் :—புன்னகை.

கேள்வி :—புஷ்பச் செண்டு சாத்திய பிறகு இரண்டு நிமிஷம் மௌனமாயிருந்தீர்களா, அல்லது ஒன்றேமுக்கால் நிமிஷமா?

பதில் :—நீண்ட மௌனம்.

கேள்வி :—கராச்சிக்கு விஜயம் செய்த போது தெருவெல்லாம் பொது மக்கள் கூடி நின்று 'ஜவாஹர் ஜிந்தாபாத்!' என்று வாழ்த்தினார்களாமே? அந்தக் கூட்டத்தில் லைக் அலியும் சேர்ந்து கோஷித்தாரா?

பதில் :—லைக் அலியைத்தான் கேட்க வேண்டும். இந்த சமயத்தில் நேருஜியே நான் இருக்க இடத்துக்குத் தாவி வந்து "விடாக்கண்டரே, வாரும்; நல்ல வேலை செய்தீர். இந்தப் பத்திரிகை நிருபர்களைச் சரியானபடி மடக்கிப் போட்டு ஏமாற்றிக் கொண்டிருந்தீர். உமக்கு ரொம்ப ரொம்ப வந்தனம்; நீர் இன்று இங்கு வரவில்லையென்றால், நான் கராச்சியிலிருந்து வந்ததும் வராததுமாக இவர்களிடம் அகப்பட்டுக்கொண்டு திண்டாடியிருப்பேன். நீர் இவர்களை மடக்கிப் போட்டதால் நான் சாவகாசமாக சர்தார் பட்டேலுடனும் சர்தார் படேல் சாவகாசமாக என்னுடனும் என் கராச்சி விஜயத்தைப் பற்றிப் பேச முடிந்தது. சரி; ராஜாஜி வரும் நேரமாகிவிட்டது. அவரை வரவேற்று அழைத்துச் செல்ல வேண்டும்!" என்றார்.

இதற்குள் பம்பாயிலிருந்து ராஜாஜி விமானம் ஜம்மென்று கீழே இறங்கிக் கொண்டிருந்தது. ராஜாஜி விமானத்தை விட்டு இறங்கியதும் காத்திருந்த கூட்டத்தை ஒரு தடவை கண்ணோட்ட மிட்டுவிட்டு "விடாக்கண்டரே! நீர் எனக்கு முன்பே வந்து விட்டீரா!" என்று கேட்டார்.

"ஆமாம்; இன்னும் இரண்டொரு தினங்களில் விஜயவாடாவிலிருந்து மற்றொரு 'விடாக்கண்டர்' வரப்போகிறார். ஒரே ஊரில் இரண்டு பைத்தியக்காரர்கள் கூடாது பாருங்கள். அதற்காகத்தான் நான் முன்கூட்டியே வந்துவிட்டேன். ஸ்ரீ பிரகாசம்காரு இங்கே வருவதற்குள் நான் திரும்பிப் போய்விடுவேன்" என்றேன். இதற்குள் ராஜாஜியை இரும்பு மனிதர் ஸர்தார் படேல் இறுகத் தழுவிக் கொண்டு முகமன் கூறிக் கொண்டிருந்தார். ராஜாஜி பேச முடியாமல் திணறிக் கொண்டிருந்தார். பிறகு இருவரும் ஒரு காரில் ஏறி ஜனாதிபதியின் மாளிகைக்குச் சென்றார்கள்.

காலத்தின் கோலம்!



எங்கே இப்படி ரொம்ப அவசரமாகக் கிளம்பி விட்டாய்?
'உட்லண்ட்ஸ்' பார்க்கில இன்றைக்குச் சாயந்திரம் கனம் மந்திரிக்கு ஒரு பார்ட்டி கொடுக்கிறார்கள். அதற்குப் போகிறேன்.
ஏன் அப்பா! சும்மா உட்கார்ந்து கொண்டிருக்கிறாய்? நான் வெளியில் போய்விட்டு வருகிறேன். அதற்குள் பாடம் பூராவும் படித்து விடு!
ஒரு கேஸ் விஷயமாக ஹைகோர்ட்டுக்குள் வந்து விட்டேன். இப்போது வெளியில் வர வழி தெரியாமல் விழித்துக் கொண்டிருக்கிறேன்!
கவலைப் படாதீர்கள்! நான் வெளியே அழைத்துக் கொண்டு போய் விடுகிறேன்!
ஸார்! அப்படி தண்டவாளம் பக்கமாக நடக்காதீர்கள். இப்பொழுதெல்லாம் அடிக்கடி ரயில் தண்டவாளத்தை விட்டிறங்கிக் கீழே விழுந்து விடுகிறது!
ஸார்! உங்களுக்கு எப்படி அந்தச் சினிமாவில் பிரம்மா வேஷம் கொடுத்தார்கள்?
நான் எழுதின கதைக்கின் கை யெழுத்துப் (குவை) பார்த்ததும் எனக்குப் பிரம்மா வேஷத்தைக் கொடுத்து விட்டார்கள், ஸார்!
பாபு

தற்கு அது ஒரு சாதனமாகும் என்று எண்ணித் திருப்தி யடையலாம்.

ஆனால் ஆங்கிலத்தை நீக்கி விட்டு அதற்குப் பதிலாக ஹிந்தியை உபயோகிப்பது என்பது முழு மடமையேயாகும்.

* * *

இந்தியாவுக்கு ஒரு தேசிய பாஷை வேண்டும் என்பதை நாம் ஒத்துக் கொள்கிறோம். அந்தத் தேசிய பாஷை ஹிந்தி பாஷையாகத்தான் இருக்க முடியும் என்பதையும் ஒத்துக் கொள்கிறோம்.

தேசிய பாஷை எந்தெந்தக் காரியத்துக்கு அவசியமோ அந்தக் காரியங்களுக்கு மட்டுமே அதை வைத்துக் கொள்வோம். அரசியல் வாழ்க்கையில் ஈடுபடுவதற்கு ஹிந்தி தெரிந்திருக்க வேண்டும். இந்திய சர்க்காரில் உத்தியோகம் பார்ப்பதற்கு ஹிந்தி தெரிந்திருக்க வேண்டும். வியாபாரிகளுக்கும் யாத்திரீகர்களுக்கும் ஹிந்தி தெரிந்திருக்க வேண்டும். சில சமயம் வரும் நல்ல ஹிந்தி சினிமாக்களைப் பார்ப்பதற்கும் ஹிந்தி தெரிந்திருக்கலாம். இதற்கெல்லாம் தெரிந்திருக்க வேண்டிய ஹிந்தி மிகவும் சொற்பம்.

மற்றப்படி அறிவைத் தேடுவதற்கோ இலக்கியச் சுவையை அநுபவிப்பதற்கோ பண்பாட்டை வளர்ப்பதற்கோ ஹிந்தி பாஷையினால் பயன் ஒன்றும் இல்லை.

தமிழிலும் ஸமஸ்கிருதத்திலும் உள்ளவை போன்ற பழம் பெரும் இலக்கியங்களை ஹிந்தியில் காண முடியாது.

தற்காலத்தில் வெளியாகும் சுமாரான ஹிந்தி இலக்கியங்கள் தமிழில் வெகு சீக்கிரத்திலேயே வந்துவிடுகின்றன.

* * *

ஹிந்தி பாஷைக்காரர்கள் அந்தப் பாஷையின் ஏகாதிபத்தியத்தை ஸ்தாபிக்க விரும்புகிறார்கள் என்று நாம் சொல்லுவது விளையாட்டல்ல; வெறும் பயமுறுத்தலும் அல்ல. வடநாட்டு அரசியல் வாதிகள் — ஹிந்தி பண்டிதர்களுக்கிடையே இத்தகைய ஏகாதிபத்திய வெறி வளர்ந்து வருகிற தென்பதற்குப் பல அறிகுறிகள் காணப்பட்டு வருகின்றன. வடநாட்டுக்குச் சென்று வரும் தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள் பலரும், வடநாட்டில் வாழ்க்கை நடத்தி வரும் தமிழர்கள் பலரும் ஏற்கனவே இதைப் பற்றிப் புகார் செய்து வந்திருக்கிறார்கள்.

அதற்கெல்லாம் சிகரம் வைத்தது போல, "காலேஜுகளில் ஹிந்தி மூலம் பாடம் போதிக்கவேண்டும்" என்ற யோசனை வெளியாகி யிருக்கிறது.

எனவே, ஹிந்தி பாஷையின் ஏகாதிபத்தியத்தை ஸ்தாபிக்கும் முயற்சி வெறும் பூச்சாண்டி அல்ல; நமக்கு ஏற்பட்டுள்ள உண்மையான அபாயம் என்றே முடிவு கட்டவேண்டியிருக்கிறது.

தமிழ் நாட்டில் ஒரு கூட்டத்தார் சில காலத்துக்கு முன்பு "ஹிந்தி ஒழிக!" என்ற கூச்சலைக் கிளப்பினார்கள். இந்தக் குறுகிய துவேஷ மனப்பான்மை கொண்ட கூச்சலைத் தமிழ்ப் பெரு மக்கள் எதிர்த்து ஒழித்துக் கட்டினார்கள்.

அதுபோலவே ஹிந்தி பாஷையின் ஏகாதிபத்தியத்தை ஸ்தாபிக்கும் முயற்சியையும் தமிழ்ப் பெருமக்கள் எதிர்த்து ஒழிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

* * *

"இந்தியாவின் தேசிய பாஷையாக ஹிந்தியைக் கொள்ளுங்கள்" என்று காந்தி மகாத்மா கூறிய உபதேசத்தை நாம் என்றும் சிரமேற்கொண்டு நடக்கச் சித்தமா யிருக்கிறோம்.

அதேமாதிரி, "தாய் மொழியைப் போற்றி வளருங்கள்" என்று காந்தி மகான் அருளிய உபதேசத்தையும் நமது இதயத்தில் பதித்து வைத்துக்கொண்டு அதன்படியே நடப்போம்.

<u>அட்டைப்பட விளக்கம்</u>

சமீப காலத்தில் வெளியாகி யிருக்கும் ஹிந்தி படங்களில் "பர்ஸாத்" (மழை) என்னும் படம் அகில இந்தியாவிலும் சினிமா ரஸிகர்களின் பாராட்டுதலைப் பெற்று இப்போது சென்னை பிரபாத் தியேட்டரில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது. நீண்டகாலமாக ஹிந்தி சினிமாவில் புகழ்பெற்ற நட்சத்திரமும் நாடகமேடை நடிகருமான ஸ்ரீ பிரிதிவிராஜின் குமாரர் ஸ்ரீ ராஜ் கபூர் இந்தப் படத்தை டைரக்ட் செய்திருப்பதுடன் கதாநாயகனாகவும் நடித்து மகத்தான வெற்றி யடைந்திருக்கிறார். தற்பொழுது வடநாட்டில் பாட்டிலும் நடிப்பிலும் மிகவும் பிரபலமடைந்து விளங்கி வரும் ஸ்ரீமதி நர்கிஸ் இந்தப் படத்தில் கதாநாயகியாகத் தோன்றி அருமையாகப் பாடி நடித்து எல்லாருடைய பாராட்டுதலையும் பெற்றிருப்பதுடன், இந்தக் "கல்கி" இதழ் அட்டையையும் அலங்கரிக்கிறார்.

எடுத்துக் கொள்வோம்!" என்று கிபந்தனை போடுவார்கள் போலும்.

இம்மாதிரி வடநாட்டுக் கல்வி ஸ்தாபனங்களில் ஏற்படும் முட்டுக்கட்டைகள் ஒருபுறமிருக்க, இந்திய சர்க்கார் உத்தியோகங்களிலும் ஹிந்தியின் ஏகாதிபத்தியம் கொடுமையுடன் ஆட்சி செலுத்தத் தொடங்கியிருக்கிறது.

எவ்வளவு நன்றாகத் தென்னிந்தியர்கள் ஹிந்தியைக் கற்றுக் கொண்டாலும் ஹிந்தியைத் தாய்பாஷையாகக் கொண்டவர்களைப் போல் அந்தப் பாஷையை லாகவமாக வழங்க முடியுமா?

ஏதோ ஆங்கிலேயர்களாவது, "இண்டியன் இங்கிலீஷ்" என்று தங்களுக்குள் சிரித்துவிட்டு, ஏதோ காரியம் நடந்தால் சரி என்று இருந்தார்கள். ஆனால் ஹிந்தி ஏகாதிபத்திய வாதிகளோ ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மற்ற பாஷைக்காரர்களை மட்டந்தட்டவும், அதைக் காரணமாகக் கொண்டு கீழே அமுக்கிவைக்கவும் பார்க்கிறார்கள். இந்த நிலைமை கொஞ்சமும் நல்லதல்ல; நியாயமும் அல்ல.

* * *

தாய் மொழியை யன்றி வேறொரு மொழியின் உதவி நமக்கு அவசியம் என்று ஏற்படும் பட்சத்தில், ஹிந்தியைக் காட்டிலும் ஆங்கிலத்தையே நாம் ஒப்புக் கொள்ளலாம். ஆங்கிலத்தை ஒப்புக் கொள்வதில் பலன் அதிகம் உண்டு. காலேஜ் வகுப்புகளில் தமிழ் மொழியில் பாடங்கள் கற்பிப்பதற்குக் காலம் வரும் வரையில் ஆங்கிலத்தில் கற்பிப்பதே உண்மையில் பயனுள்ளதாயிருக்கும்.

ஆங்கில மொழியிலுள்ள அறிவுக் களஞ்சியங்களுக்கு அளவு சொல்ல முடியாது. ஆங்கில மொழியில் உள்ள இலக்கியச் செல்வம் ஏழு சமுத்திரங்களையும் விடப் பெரியது. அந்தப் பாஷையிலேயே எழுதப்படும் நூல்களையல்லாமல் உலகில் எந்த மூலையில் எந்தப் பாஷையில் ஒரு உபயோகமுள்ள புதிய நூல் எழுதப்பட்டாலும் அது அக்கணமே ஆங்கிலத்தில் வந்து விடுகிறது.

தமிழ்நாட்டைப் பற்றிய விவரங்களைச் சொல்லும் புத்தகங்கள் தமிழில் உள்ளவற்றைக் காட்டிலும் ஆங்கிலத்தில் அதிகம் என்பது உங்களுக்குத் தெரியுமா?

எழும்பூரில் மியூஸியத்தை அடுத்துள்ள 'கனிமரா லைப்ரரி' என்று சொல்லப்படுகிற புத்தக சாலைக்குச் சென்று பாருங்கள். அதில் தமிழ்நாட்டுப் பிராணிகள், பட்சிகள், விருட்சங்கள் முதலியவற்றைக் குறித்து எழுதப்பட்டிருக்கும் ஆங்கிலப் புத்தகங்களைக் கேட்டு வாங்கிக் கொஞ்சம் புரட்டிப் பாருங்கள்.

தமிழ்நாட்டில் எத்தனைவிதமான மரங்களும் செடி கொடிகளும் இருக்கின்றன, அவற்றிற்குத் தமிழ்ப் பெயர் என்ன, தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஆங்கிலம், லத்தீன் ஆகிய மொழிப் பெயர்கள் என்ன ஆகிய விவரங்கள் அப்புத்தகங்களில் அடங்கியிருக்கின்றன. ஆகா! இத்தனை ஆயிரம் வகை மரஞ் செடி கொடிகளும் பிராணிகளும் பறவைகளும் நம் தென்னாட்டில் இருக்கின்றன என்று ஆச்சரியப் பட்டுப் போவோம். ஒவ்வொரு வகை மரஞ் செடி கொடிக்கும் இலை எப்படியிருக்கும் என்று சித்திரம் போட்டும் காட்டியிருக்கிறது.

இவ்வாறே உலகத்தில் எந்த மூலையில் எந்தப் பகுதியில் எந்தவிதமான விசேஷம் இருந்தாலும் அதைப்பற்றி ஆங்கில பாஷை மூலம் தெரிந்து கொள்ளலாம்.

ஆஸ்திரேலியா தேசத்தை யடுத்த கடல்களில் எத்தனை ஆயிரம் வகை மீன்கள் இருக்கின்றன என்பதைப் படங்களுடன் விவரமாகக் கூறும் பெரிய புத்தகங்கள் ஒன்பது இருக்கின்றன.

இன்னும், ஆங்கில பாஷையில் இது வரை அச்சாகி வெளியாகியிருக்கும் புத்தகங்களைப் பற்றி ஒரு கணக்குச் சொல்லுகிறார்கள். இரண்டு (2) என்னும் இலக்கத்தைப் போடுங்கள். அதற்குப் பின்னால் இருபது பூஜ்யங்களைப் போடுங்கள். இப்படிப் போட்ட எண்ணிக்கை எவ்வளவு என்று சொல்வதற்குச் சாதனம் ஒன்றும் கிடையாது. கற்பனை செய்து பார்த்துக் கொள்ள வேண்டியதுதான்! அத்தனை புத்தகங்கள் ஆங்கில பாஷையில் வெளிவந்திருக்கின்றன! வேறொரு பாஷையின் மூலம் நமது பிள்ளைகள் காலேஜ்ப் படிப்புக் கற்றுக்கொள்வது என்று ஏற்பட்டால், அதற்குரிய பாஷை உலக பாஷையாகிய ஆங்கிலமேயாகும்.

ஹிந்தி பாஷையை வளர்ப்பதற்கென்று இன்றைக்கு ஆரம்பித்துப் பெரும் பிரயத்தனம் செய்தால் ஒருவேளை இன்னும் நூறு வருஷங்களில் ஆங்கில பாஷைக்கு நிகரான அறிவுச் செல்வங்களையும் இலக்கியச் செல்வங்களையும் உண்டாக்கலாம். ஆனால் அதற்குள்ளே ஆங்கில பாஷை இன்னும் எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்குமோ தெரியாது!

நம்முடைய காலேஜ்களில் ஆங்கில மொழியை அகற்றிவிட்டுத் தமிழைக் கொண்டு வருவதென்றால், தாய்மொழி அபிமானம் காரணமாக அதை நாம் ஒப்புக்கொள்ளலாம். தமிழை வளர்ப்ப

ஹிந்தி ஏகாதிபத்தியம்

"தமிழ் மகன்"

"மெள்ள மெள்ள வந்தாலும் — மிளகு என்றாலும் சுக்கு என்றாலும்" என்பதாக ஒரு பழமொழி உண்டு. "இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்கினான்" என்பதாக இன்னொரு பழமொழியும் கேட்டிருக்கிறோம்.

ஹிந்தி பாஷையைத் தேசிய பாஷையாக்கும் விஷயம் ஏறக்குறைய அம்மாதிரி நிலைமைக்கு இப்போது வந்திருக்கிறது.

அதிகார ஆசையும் ஏகாதிபத்திய வெறியும் ஒரு தேசத்தார் — ஒரு இனத்தாருக்குத்தான் உண்டு என்பது இல்லை. உலகமெங்கும் சர்வ வியாபகமாக நிறைந்திருக்கின்றன. அந்த ஆசையும் வெறியும் இப்போது வடநாட்டிலுள்ள ஹிந்தி பாஷைப் பண்டிதர்களையும் அரசியல் வாதிகளையும் பிடித்து ஆட்டுகின்றன.

ஹிந்தி பாஷை இந்தியாவின் தேசிய பாஷையாவதோடு அவர்கள் திருப்தியடையத் தயாராயில்லை.

இந்தியாவில் ஹிந்தி ஏகாதிபத்தியத்தையே நிலை நாட்டிவிடப் பிரியப்படுகிறார்கள். மற்ற பாஷைகளையும் மற்ற பாஷைக்காரர்களையும் ஹிந்தி பாஷைக்கு அடிமையாக்கி விடவே எண்ணுகிறார்கள்.

இதை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. தாய் மொழிப் பற்றுள்ள யாருமே ஒப்புக் கொள்ள முடியாதுதான்.

*   *   *

சில நாளைக்கு முன்பு தினப் பத்திரிகைகளில் திடுக்கிடும் செய்தி ஒன்று வெளியாயிற்று. அகில இந்தியக் கல்வி மகாநாடு ஒன்று கூடியதாம். அதில் இந்தியாவின் பற்பல மாகாணங்களையும் சேர்ந்த கல்வி மந்திரிகளும் சர்வகலாசாலை வைஸ்சான்ஸ்லர்களும் வந்திருந்தார்களாம். பற்பல யோசனைகள் சொல்லப்பட்டனவாம்; பற்பல விஷயங்களைப் பற்றி விவாதித்தார்களாம்.

அந்த அபூர்வமான யோசனைகளில் ஒன்று,—மகாநாட்டில் விவாதிக்கப்பட்ட விஷயங்களில் ஒன்று, — இந்தியாவில் உள்ள எல்லாக் காலேஜ் வகுப்புகளிலும் எல்லா விஷயங்களையும் ஹிந்தி பாஷையில் போதிக்க வேண்டும் என்பதுதான்!

எப்படி இருக்கிறது கதை? அதாவது 'இத்தனை நாளும் நமது கல்வி முறையில் இங்கிலீஷ் வகித்த ஸ்தானத்தை இனி மேல் ஹிந்தி வகிக்கட்டும்!" என்கிறார்கள் ஹிந்தி ஏகாதிபத்திய வாதிகள்.

"இவ்வளவு நாளும் கழுத்தில் புல்லைக் கட்டிக் கொண்டு மென்று தின்றீர்களே! அதற்குப் பதிலாக இனிமேல் கல்லைக் கட்டிக் கொள்ளுங்கள்!" என்கிறார்கள்.

சென்னை மாகாணத்துக் கல்வி மந்திரி கனம் மாதவமேனன் மேற்படி யோசனையை எதிர்த்தாராம். "இப்படி நீங்கள் விதி செய்தால் அதை எங்கள் மாகாணத்தில் மீறும்படியாகவே இருக்கும்" என்று எச்சரித்தாராம்.

அத்துடன் மேற்படி யோசனை கைவிடப் பட்டதாம். "முடிவாகக் கைவிடப் பட்டது" என்று சொல்லுவதற்கில்லை. மறுபடியும் சந்தர்ப்பம் வரும்போது அதே யோசனையை ஹிந்தி ஏகாதிபத்திய வாதிகள் கிளப்பிக் கொண்டுதானிருப்பார்கள். மற்ற பாஷைக்காரர்கள் விழிப்புடனிருந்து அத்தகைய முயற்சிகளை எதிர்க்கும்படிதானிருக்கும்.

ஏன் இப்படிச் சொல்கிறோமென்றால், மேற்கண்ட யோசனையானது ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சி அல்ல; ஒரு பெரிய ஹிந்தி ஏகாதிபத்தியப் பிரசார திட்டத்தின் சிறிய அறிகுறியேயாகும்.

ஹிந்தி ஏகாதிபத்தியப் பிரயத்தனம் தற்சமயம் பல இடங்களில் பல உருவங்களில் தலைதூக்கித் திருவிளையாடல் புரிவதைப் பார்த்து வருகிறோம்.

காசி சர்வகலாசாலையில் முன்னெல்லாம் வெளி மாகாணங்களிலிருந்து வரும் மாணுக்கர்களுக்கு இடங் கொடுத்து வந்தார்கள். வகுப்புகளுக்குரிய தகுதியை மட்டும் கவனித்தார்கள்.

பிறகு, ஹிந்தி தெரிந்த மாணுக்கர்களை மட்டும் எடுத்துக் கொள்வோம் என்று சொன்னார்கள்.

அதற்குப் பிறகு, ஹிந்தியை நன்றாய்ப் படித்துத் தேறியவர்களையே எடுத்துக் கொள்வோம் என்றார்கள்.

இப்போது, ஹிந்தியைத் தாய் பாஷையாகக் கொண்டவர்களையே சேர்த்துக் கொள்வோம் என்று சொல்லத் தொடங்கியிருக்கிறார்கள்.

இன்னும் சில தினங்கள் போனால், "போன ஜன்மத்திலும் ஹிந்தியைத் தாய் பாஷையாகக் கொண்டவர்களையே

தென்னிந்தியாவெங்கும் இம் மாதம்
திரையிடும் நன்னாளை எதிர்பாருங்கள்!



சோபனாசலாவின்

லக்ஷ்மம்மா (தமிழ்)

★ கிருஷ்ணவேணி ★ நாராயண ராவ் ★ குமாரி ருக்மிணி

மற்றும் பலர் நடித்தது

★

CHAMRIA TALKIE DISTRIBUTORS

MADRAS-2 - MADURA - ERNAKULAM

பாகிஸ்தான் தலைவர்கள் முதல் பாமர ஜனங்கள் வரையில் எல்லோரும் முக மலர்ச்சியுடனும் அகமகிழ்ச்சியுடனும் நமது பிரதம மந்திரி ஜவாஹர்லால்ஜியைப் பாகிஸ்தானில் வரவேற்று உபசரித்திருப்பதன் மர்மம் என்ன?

பண்டித ஜவாஹர்லால் நேரு கராச்சிக்கு விஜயம் செய்தபோது பாகிஸ்தான் மக்கள் ஜன சமுத்திரம்போல பல மைல் தூரம் நின்று ஜெயகோஷங்களுடனும் சந்தோஷ ஆரவாரத்துடனும் நமது அருமைத் தலைவரை வரவேற்றார்கள் என்று பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

இத்தகைய மகா அற்புதமான திடீர் மாறுதலுக்கு ஏதாவது மந்திர சக்தியோ, மாய வித்தையோ காரணமல்ல. சத்திய சீலரும் சாந்தரூபியும் அஹிம்சாமூர்த்தியுமான காந்தி மகான் காட்டிய அன்பு வழியே காரணம்.

ஆத்ம சக்தியை அடிப்படையாகக் கொண்ட அந்த மகானின் அன்பு வழியே நொடிப் பொழுதில் துவேஷத் தீயை அவித்து இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் நல்லுறவு ஏற்படும்படி செய்திருக்கிறது.

• • •

பண்டித ஜவாஹர்லால் நேருவும் ஜனரல் லியாகத் அலிகானும் சந்தித்து மனம் விட்டு அன்புடன் அளவளாவிப் பேசியதன் பலன் உடனே கைமேல் கிடைத்திருக்கிறது.

அதுதான் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் உடனடியாக ஏற்பட்டுள்ள வர்த்தக ஒப்பந்தமாகும்.

அதைத் தொடர்ந்து மற்றும் பல்வேறு பிரச்னைகளை யொட்டியும் உடன்பாடு ஏற்படுமென எதிர் பார்க்கலாம்.

இதற்குமுன் இந்தியா-பாகிஸ்தான் சம்பந்தமான அற்ப பிரச்னைகளும் மலைபோல் தோன்றின. ஆனால் ஜவாஹர்-லியாகத் அலி சந்திப்புக்குப் பின் மலைபோன்ற பிரச்னைகளும் அற்பமாகத் தோன்ற ஆரம்பித்திருக்கின்றன.

பகையும் துவேஷமும் ஒழிந்து அன்பும் அந்தரங்க சுத்தியும் ஏற்படுமாயின் எத்தகைய மாபெரும் பிரச்னையையும் தீர்ப்பது எளிது என்பதுதான் மகாத்மா காந்தியின் உபதேசமாகும்.

எனவே, இந்நிலையில் சிக்கலான காஷ்மீர் பிரச்னை கூட பிறர் தலையீடு இல்லாமலே சுமுகமாகத் தீரலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

சர்வதேச அமைதியானது, காஷ்மீர் பிரச்னையை ஐக்கிய நாடுகள் சபை திருப்திகரமாகத் தீர்த்து வைப்பதையே பொறுத்திருக்கிறது என்று முழங்கி வந்த பாகிஸ்தான் வெளி நாட்டு மந்திரி சர் ஜபருல்லாகான் கூட, அந்தப் பிரச்னையை இந்தியாவும் பாகிஸ்தானும் நேரடியாகத் தீர்த்துக் கொள்வது சாத்தியமான காரியமே என்று கூறியிருக்கிறார்.

எனவே காஷ்மீர் பிரச்னையை யொட்டி ஐக்கிய நாடுகள் சபையினால் மத்தியஸ்தராக நியமிக்கப்பட்டிருக்கும் சர் ஓவன் டிக்ஸன் என்ற ஆஸ்திரேலிய நிபுணர் வந்த வழியே திரும்பிச் செல்லும்படி நேர்ந்தாலும் அதைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்தியா - பாகிஸ்தான் நட்பு நீர் மேல் குமிழி போல திடீரென்று தோன்றி மறையும் தன்மை வாய்ந்தது என்று யாரும் கூற முடியாது.

ஏனெனில், இந்தியா பிரதம மந்திரியும் பாகிஸ்தான் பிரதம மந்திரியும் இதுவரை இரண்டு தடவை சந்தித்துப் பேசியதைப்போல் இன்னும் பல தடவை அலுக்காமல் சலிக்காமல் சந்தித்துப் பேச உறுதி கொண்டிருக்கிறார்கள். அதாவது தற்போது ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்துக்கும் நட்புக்கும் எள்ளளவும் பங்கம் நேர இடம் கொடுக்கப் போவதில்லை என்பதில் அவர்கள் உறுதி கொண்டிருக்கிறார்கள்.

உலகத்திலே இதற்குமுன் எந்த இரு நாடுகளும் நேற்று வரையில் தங்களுக்குள் இருந்த பகைமையை அடியோடு மறந்து இன்று அந்தரங்க சுத்தியுடன் நட்பையும் நல்லுறவையும் ஏற்படுத்திக் கொண்டதில்லை.

இன்று ஒன்றையொன்று ஜன்ம விரோதியாகக் கருதி யுத்த பீதியை வளர்த்து வரும் வல்லரசுகளுக்குக் கூட இந்தியா-பாகிஸ்தான் நட்பு சிறந்த வழிகாட்டியாக அமைந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

இவ்வாறாக, அரசியல் சூழ்ச்சிகளின் உதவியோ ஆயுதங்களின் உதவியோ இல்லாமல் காந்தி மகான் காட்டிய வழியைப் பின் பற்றி அடிமைத் தனத்தை அகற்றிச் சுதந்திரத்தை அடைந்த பாரதநாடு, அதே வழியைக் கையாண்டு உலக நாடுகளுக்குள் இருந்துவரும் பகையை ஒழித்து நட்பையும் சமாதானத்தையும் ஏற்படுத்தலாம் என்பதை அனுஷ்டான பூர்வமாக நிரூபித்திருக்கிறது.

மந்திரமில்லை! மாயமில்லை!

ஆமாம்! ஏதாவது மந்திர சக்தியின் அற்புதமோ அல்லது ஏதாவது மாயா ஜால வேலையோ என்றே நினைக்கத் தோன்றுகிறது!

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் ஏற்பட்டுள்ள நல்லெண்ணத்தையும் நல்லுறவையும்தான் குறிப்பிடுகிறோம்.

பல மாதங்களாகக் கொழுந்துவிட்டு எரிந்த கோரத் தீ அணைந்தாலும் அதன் அனலும் ஆவியும் அடங்குவதற்கு எத்தனையோ நாட்கள் செல்லும் என்பது நிச்சயம்.

அத்தகைய பெருந் தீயின் ஜ்வாலைகள் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் அடங்கி அணையும். அணைந்த பிறகு அதன் புகைச்சலும் வெப்பமும் பல நாட்கள்வரையில் இருந்துதான் தீரும்.

அவ்விதமின்றி, நேற்று வரையில் பயங்கரமாக எரிந்து வந்த பிரளயத் தீ இன்று திடீரென முற்றிலும் அணைந்து பூமி குளிர்ச்சி அடைவதென்றால் அது அதியற்புதமான, நம்ப முடியாத சம்பவம் அல்லவா?

சரித்திரம் கண்டிராத, கண்கள் பார்த்திராத, காதுகள் கேட்டிராத அத்தகைய அற்புதம் நமது கண்ணெதிரே நிகழ்வதைக் காண்கிறோம்.

பாகிஸ்தானில் மூண்ட மத ஆவேசத் தீ பல மாதங்களாகக் கொலை வெறி நடனம் புரிந்து வந்தது. அதன் ஜ்வாலைகளிலிருந்து தெறித்த பொறிகள் இந்தியாவிலும் பல இடங்களில் தீயை மூட்டின.

அவ்வாறாக, இரு நாடுகளிலும் பீறிட்டுக் கிளம்பிய பிரளய அக்னி பல லட்சக்கணக்கான மக்களின் நல்வாழ்வையும் குடும்பங்களையும் சுட்டெரித்துச் சாம்பலாக்கி விட்டது.

அந்த மத வெறியை அடக்க யுத்தம் அல்லது ஜனப் பரிவர்த்தனையைத் தவிர வேறு வழி எதுவும் இல்லையா என்ற ஏக்கம் எல்லோருடைய மனதையும் ஆட்கொண்டது.

உலகம் தோன்றிய நாள் முதல் அரசியல் வெறி அல்லது மத வெறிக்கு ஆளான தேசங்களெல்லாம் கொடிய யுத்தத்தின் மூலம்தான் பழி தீர்த்துக் கொண்டிருக்கின்றன.

அத்தகைய நெருக்கடியான சந்தர்ப்பங்களில் போரையும் படுகளத்தையும் தவிர, சர்வ தேசச் சரித்திரம் காட்டும் பாதை வேறு எதுவுமில்லை.

*   *   *

எனினும் உலகச் சரித்திரத்தில் கண்டும் கேட்டும் அறியாத ஒரு புது வழியை ஸ்தாபிக்கும் பேறு நம் பாரத நாட்டுக்குக் கிடைத்தது.

அவ்வித வாய்ப்புக் கிடைப்பதற்குக் காரண கர்த்தாவான காந்திமகான், ஆயுதங்களுடன் கூடிய மறப்போரைக் காட்டிலும் ஆயுதமற்ற அறப் போர் ஆயிரம் பதினாயிரம் மடங்கு அதிக சக்தி வாய்ந்தது என்பதை உலகத்துக்கு நிதர்சனமாகக் காட்டினார்.

மகாத்மா காந்தி காட்டிய அற நெறியை, அன்பு வழியை, ஆத்ம சக்தியை துணையாகக் கொண்டு பாரத நாட்டு மக்கள் பெறுதற்கரிய சுதந்திரத்தைப் பெற்றனர்.

மனித வர்க்கத்தின் உடல்; பொருள், ஆவி எல்லாவற்றையும் விட மேலான சுதந்திரத்தைப் பெற இந்தியா அன்பு வழியைக் கடைப் பிடித்திருக்கையில், தற்காலிகமான இந்தியா-பாகிஸ்தான் பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக வேறு வழிகளைப் பின்பற்றுவது விபரீதத்தில் வந்து முடியும் என்பதை நமது மாபெரும் தலைவர்கள் உணர்ந்தனர்.

இந்தியத் தலைவர்கள் காந்தி மகான் காட்டின வழியை உறுதியுடன் கடைப் பிடித்ததால், நேற்று வரையில் பாகிஸ்தானில் கொழுந்துவிட்டு எரிந்து வந்த கோரத் தீ திடீரென்று முற்றிலும் அணைந்து, பாகிஸ்தான் தலைவர்களின் மனமும், பாமர மக்களின் மனமும், அந்தத் தீயினால் தகிக்கப்பட்டு வந்த சிறுபான்மையோரான ஹிந்துக்களின் மனமும் ஏக காலத்தில் குளிர்ந்திருக்கிறது.

இல்லாவிடில் ஜனாப் லியாகத் அலிகான் டில்லிக்கு விஜயம் செய்வதோ, பண்டித ஜவாஹர்லால் நேரு கராச்சிக்கு விஜயம் செய்வதோ சாத்தியமாகி இருக்க முடியுமா?

நேற்று வரையில் இந்தியாவுக்கு விரோதமாக இடைவிடாது துஷ்பிரசாரம் செய்து துவேஷத்தை வளர்த்த பாகிஸ்தான் பத்திரிகைகள், திடீரென்று மனம் மாறி பண்டித ஜவாஹர்லால் நேருவை ஏகமனதாக வரவேற்றுப் பாராட்டியிருக்கின்றன.

விசித்திர வரவேற்பு!

- சாஸ்திரி



1. Tincture Tolu
2. Tincture Cubeb
3. Acqua Rose Concentrated
4. Acqua Aurante Concentrated
5. Spirit Rose
6. Essence Orange
7. Essence Lemon
8. Extract Kamala
9. Tincture Chirata
10. Eaude Cologne

மதுசார விஷமுள்ள இத்தனை மருந்துகளும் இப்போது 16 அவுன்ஸ் புட்டிகளில் ஏராளமாக விற்பனையாகி வருகின்றன. இவற்றை மருந்துக்காக உபயோகிப்பதாயிருந்தால் கால் அவுன்ஸ் அல்லது அரை அவுன்ஸுக்குமேல் விற்க வேண்டிய அவசியமில்லை.

சில மருந்துகளுக்குப் பழ வகைகளின் பெயர்கள் கொடுத்திருப்பதைக் கவனியுங்கள். அவற்றுள் சில மருந்துப் புட்டிகளின்பேரில் "இது பேதிக்கு மருந்து; ஜீரணத்துக்கு நல்லது" என்று எழுதியிருக்கிறது. பிராந்தியின் வாசனை ஏற்றியிருப்பதால் விற்பனை பிரமாதம்.

ஸ்ரீ டி. துரைராஜன் மறுபடியும் ரிவினியூ போர்டாரின் கதவை இடித்துக் கொண்டிருக்கிறார். அந்தப் பிராயங் கடந்த கிழ ஸ்தாபனத்தின் செவிட்டுக் காதில் எப்போது விழும், என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் போகிறார்கள் என்று தெரியாது.

மேற் கூறிய மது சார விஷம் உள்ள மருந்துகள் சீமையிலிருந்து வந்து இறக்குமதியாகவில்லை. எல்லாம் சென்னையிலும் பெங்களூரிலும் உள்ள மருந்துத் தொழிற் சாலைகளிலேயே உற்பத்தியாவதாகத் தெரிகிறது. பெங்களூரிலிருந்து இந்த மருந்துகளை லாரிகளில் ஏற்றி அனுப்புகிறார்களாம்.

* * *

சென்னை சர்க்காரையும் முக்கியமாக மதுவிலக்கு மந்திரியையும் இந்தப் பெருங் கேட்டை நிவர்த்திக்க உடனே நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இந்த மாகாணத்தின் ஒரு தனிப்பட்ட பிரஜையாகிய ஸ்ரீ டி. துரைராஜனுக்கு இந்த விஷயத்தில் உள்ள சிரத்தை நம் காங்கிரஸ் மந்திரிகளுக்குக் கிடையாது என்று நம்மால் நம்ப முடியவில்லை.

வேறு பல முக்கியமான காரியங்களிலே அவர்கள் ஈடுபட்டிருப்பதால் இந்த விஷயம் அவர்களுடைய கவனத்துக்கு வரவில்லை யென்றும், அதனாலேயே இதுவரை தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை யென்றும் கருதுகிறோம்.

இது விஷயத்தில் ரிவினியூ போர்டாரின் சிவப்பு நாடா நிர்வாகத்தையும் மதுவிலக்குக் கமிஷனரின் அதிகாரவர்க்க லட்சியப் போக்கையும் நம்பிக்கொண்டு நம் மந்திரிகள் சும்மா இருந்துவிடக் கூடாது.

இது மிகவும் முக்கியமான விஷயம். மதுவிலக்குச் சட்டங் காரணமாக ஒரு சில பணப்பேய்கள் லாபம் சம்பாதிக்கும் பொருட்டு லட்சக்கணக்கான மக்களுக்கு விஷத்தைக் கொடுத்துக் குடலை எரிப்பதா என்பது பிரச்னை.

இந்தப் பயங்கரக் கொடுமையைத் தடுப்பதற்குப் பின்வரும் நடவடிக்கைகளை உடனே எடுத்துக் கொள்ளவேண்டும் :—

1. சென்னையிலுள்ள மருந்து உற்பத்தி சாலைகளை உடனே கட்டுக்குட்படுத்த வேண்டும். மதுசாரம் கலந்த மருந்துகளை 1948-ம் வருஷத்தில் உற்பத்தி செய்ததற்குமேல் அதிகமாக உற்பத்தி செய்யாமல் தடுக்க வேண்டும்.

2. மாகாணத்துக்கு வெளியிலிருந்து மேற்படி மருந்துகள் வருவதை அடியோடு தடை செய்யவேண்டும்.

3. எந்த மருந்திலாவது 100-க்கு 20 பங்குக்கு மேலே மதுசாரம் இருந்தால், அவ்விதம் மேலே ஒட்டியுள்ள சீட்டில் அச்சிடச் செய்ய வேண்டும்.

4. மருந்துக் கடைக்காரர்கள் டாக்டர்களுடைய கையெழுத்துள்ள சீட்டில் குறிப்பிட்டிருந்தாலன்றி மேற்படி மதுசார மருந்துகளை விற்கக்கூடாது.

5. வேறு கடைக்காரர்களுக்கோ தனிப்பட்ட மனிதர்களுக்கோ மேற்படி மருந்துகளை விற்பனை செய்யக் கூடாது.

6. டாக்டர்களில் யாராவது தங்கள் உரிமையைத் துஷ்பிரயோகம் செய்வதாகத் தெரிந்தால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்.

7. மருந்துக் கடைகளிலே யல்லாது வேறு சோடாக் கடை முதலியவற்றில் மேற்படி மதுசார மருந்துகளை விற்பதைத் தடை செய்ய வேண்டும்.

இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவது அப்படியொன்றும் பிரமாதமான காரியமில்லை. மதுவிலக்கில் சிரத்தையிருந்தால் தட்சணமே நிறைவேற்றலாம். அந்தச் சிரத்தை நம் காங்கிரஸ் மந்திரிகளுக்குத்தான் இருக்கக்கூடும். காலங் கடந்த ரிவினியூ போர்டையும் ஐ.சி.எஸ். உத்தியோகஸ்தர்களையும் நம்பியிராமல் நம்முடைய மந்திரிகளே நேரில் கவனம் செலுத்தவேண்டும்.

இல்லாவிடில் மதுவிலக்குச் சட்டத்தின் பேரால் பதினாயிரக்கணக்கான ஜனங்களுக்கு விஷமிட்டார்கள் என்னும் பழிச்சொல் அவர்கள் தலையில் வந்து விடியும்.

திலே மட்டும் மாதம் மூப்பதினாயிரம் ராத்தல்களுக்கு மேல் விற்கப்பட்டன. இந்த மருந்தை, சோடாக் கடைகளிலே வாங்கி வைத்துக்கொண்டு சோடா கலர்களுடனே கலந்து விற்கத் தொடங்கி விட்டார்கள். சாதாரண சோடா விலை மூக்காலணு; மேற்படி மருந்து கலந்த ஸ்பெஷல் சோடாவின் விலை ரூபாய் ஒன்று!

இப்படி மதுவிலக்குச் சட்டம் குறுக்கு வழியில் மீறப்படுவதுடன் ஆயிரக்கணக்கான மக்களின் தேக ஆரோக்கியம் பாழாக்கப்படுவதால் மேற்படி மதுசார மருந்துகளின் விற்பனையை உடனே மதுவிலக்குக் கமிஷனர் கட்டுப்படுத்த வேண்டுமென்று ஸ்ரீ டி. துரைராஜன் பிராது கொடுத்தார்.

அதிசயமான பிராது! அதிசயமான மனிதர்! பொது நன்மைக்கு உகந்த சர்க்கார் சட்டங்களை அதிகாரிகள் சரிவர அமுல் நடத்தாவிட்டால் எந்தத் தனிப்பட்ட பிரஜையும் கோர்ட்டில் பிராது கொடுத்து அச்சட்டங்களை அமுல் நடத்தச் செய்யலாம் என்பதாக ஒரு அருமையான சட்டம் இருக்கிறது. பிரிட்டிஷ் நியாய பரம்பரையில் வந்த நல்ல சட்டங்களில் இது ஒன்று.

ஸ்ரீ டி. துரைராஜன் மனச்சாட்சியும் பொதுஜன நன்மையில் ஆர்வமும் உள்ள அபூர்வ மனிதர்களில் ஒருவர். மேற்கூறிய அபூர்வ சட்டத்தை அவர் கண்டுபிடித்துச் சொந்தப் பணம் செலவழித்துக் கோர்ட்டில் வழக்குப் போட முன் வந்தார்.

வழக்கு விசாரணைக்கு வரும் தினத்துக்கு முன்னால் சர்க்கார் காரியாலயத்திலிருந்து அவருக்குத் தகவல் வந்தது; டெலிபோன் மூலமாகத்தான். "நீங்கள் குறிப்பிடும் மூன்று மருந்துகளையும் தடை செய்துவிடப் போகிறோம். வழக்கு விசாரணைக்கு வந்தால் சர்க்கார் நிலைமை சங்கடமாகப் போய் விடும். வழக்கை வாபஸ் பெறுங்கள்" என்று பெரிய இடத்து மனிதர்கள் சொன்னார்கள்.

சர்க்காரைச் சங்கடத்துக்கு உள்ளாக்குவது ஸ்ரீ டி. துரைராஜனின் நோக்கமல்ல. காரியம் ஆகவேண்டியதுதான் நோக்கம். ஆகையால் மறுநாள் ஹைகோர்ட்டில் வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்வதாகத் தெரிவித்தார். வழக்குத் தள்ளப்பட்டது. மேற்படி மருந்துகளையும் சர்க்கார் தடை செய்தார்கள். முதல் அத்தியாயம் இப்படி நல்லபடியாக முடிந்தது.

*　　　　*　　　　*

வங்காளத்தில் கோர பஞ்சம் தாண்டவமாடிய சமயத்தில் சில புண்ணியவான்கள் அரிசி முதலிய உணவுப் பொருள்களைப் பதுக்கி வைத்துக் கொள்ளை லாபத்துக்கு விற்றார்கள் என்றும், இவர்களுடைய பேராசையால் பதினாயிரக் கணக்கான மக்கள் மடிந்தார்கள் என்றும் கேள்விப்பட்டிருக்கிறோம்.

இந்தப் புண்ணியவான்களின் தாயாதிகளும் மாமன் மச்சான்களும் தென்னிந்தியாவிலும் இருப்பதாகத் தெரிகிறது.

மக்கள் விஷத்தைக் குடித்துக் குடல் வெந்து செத்துத் தொலைந்தாலும் சரி, தங்களுக்குப் பணம் வந்தால் போதும் என்று இவர்கள் நினைக்கிறார்கள். எனவே, சர்க்கார் தடை செய்த மூன்று மருந்துகளை நீக்கி விட்டு அதே மதுசார விஷமுள்ள வேறு மருந்துகளை உற்பத்தி செய்ய ஆரம்பித்தார்கள்.

1. Spirit Aether Nitrosi
2. Tincture Capsicum
3. Acqua Rose

என்னும் மூன்று மதுசார விஷ மருந்துகளை ஏராளமாக உற்பத்தி செய்து மார்க்கெட்டுக்கு அனுப்பினார்கள்.

விற்பனை வேகத்திலும் விஷக் கொடுமையிலும் இவை பழைய மூன்று மருந்துகளுக்குப் பெரியப்பன்மார்களாக விளங்கின.

கண்ணில் விளக்கெண்ணெய் போட்டுக் கொண்டு காத்திருந்த ஸ்ரீ டி. துரைராஜன் உடனே ரிவினியூ போர்டுக்கு மேற்படி மருந்துகளைப் பற்றி எழுதினார். (மதுவிலக்குச் சட்டத்தை அமுல் நடத்தும் பொறுப்பு, காலங்கடந்த கதினி மூகம்மது ஆட்சி முறையைச் சேர்ந்த ரிவினியூ போர்டாரிடம் ஒப்புவிக்கப்பட்டுத் தொலைத்திருக்கிறது!)

ரிவினியூ போர்டார் மீனமேஷம் வாரசூலை ராகுகாலம் எல்லாம் பார்த்துவிட்டு மேற்படி மூன்று மருந்துகளில் முதல் இரண்டைத் தடை செய்தார்கள். Acqua Rose (ஆக்வா ரோஸ்) என்பதைச் சும்மா விட்டு விட்டார்கள். அந்தப் பெயரைக் கேட்டதும் ரோஜாப் பன்னீரின் நறுமணம் மூக்கில் தாக்கியதால் மறந்து விட்டார்கள் போலும்! இது இரண்டாம் அத்தியாயம்.

*　　　　*　　　　*

இப்போது மூன்றாவது அத்தியாயம் ஆரம்பமாகி நடந்து வருகிறது.

விஷம் விற்றுக் கொள்ளை லாபம் கண்ட மகானுபாவர்கள் அந்தத் தொழிலைச் சுலபத்தில் விட்டு விடுவார்களா?

மதுசாரம் (Alcohol) அதிகமாயுள்ள பின்வரும் மருந்துகள் இப்போது மார்க்கெட்டுக்கு வந்திருக்கின்றன. மருந்துக் கடைகளிலும் சில சோடாக் கடைகளிலும் விற்பனையாகி வருகின்றன.

மலர் 9

கல்கி

தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா

இதழ் 40

என்ன சேதி?

மருந்துக் கடைகளில் மது விற்பனை!

சென்னை ஹைக் கோர்ட்டில் சில சமயம் விந்தை விந்தையான வழக்குகள் நடைபெறுவதுண்டு. சில தனிப்பட்ட மனிதர்களைப் பற்றிய வழக்குகள் அவை. ஆனாலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் தங்கள் சொந்த வேலை வெட்டிகளை அப்படி அப்படியே போட்டு விட்டு மேற்படி வழக்கு நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருப்பார்கள். உலகத்தின் போக்கு அப்படி; மக்களின் மன இயல்பு அப்படி.

இவ்வாறு எத்தனையோ அதிசயமான, விந்தையான, அபூர்வமான வழக்குகள் நடைபெறும் சென்னை ஹைக்கோர்ட்டில் சென்ற 1949-ம் வருஷத்தில் ஒரு விநோதமான வழக்குப் பதிவு செய்யப்பட்டது. ஜஸ்டிஸ் ராஜகோபாலன் முன்னால் இந்த வழக்கு நவம்பர் மீ 22உ விசாரணைக்கு வந்தது. வழக்குத் தொடுத்தவரின் பெயர் ஸ்ரீ டி. துரைராஜன். பிரதிவாதி சென்னை மாகாணத்தின் மதுவிலக்கு அதிகாரி (Commissioner of Prohibition). வாதி ஸ்ரீ டி. துரைராஜனின் சார்பாக வழக்கைப் பதிவு செய்தவர் சென்னையில் பிரசித்தி பெற்ற வக்கீலாகிய ஸ்ரீ வி. வி. சீனிவாசய்யங்கார்.

வழக்கு 1937ம் வருஷத்துப் பத்தாவது சட்டமாகிய மதுவிலக்குச் சட்டத்தின் கீழ்த் தொடுக்கப்பட்டது.

வாதி ஸ்ரீ துரைராஜன் தொடுத்த பிராதின் சாராம்சம் இதுதான் :—

"சென்னை மாகாணத்தில் பூரண மதுவிலக்குச் சட்டம் அமுலில் இருக்கிறது. ஆனாலும் இந்த மாகாணத்துக் கடைகளில் மதுசாரம் (Alcohol) அதிகம் உள்ள மருந்துகள் விற்கப்பட்டு வருகின்றன. இந்த மருந்துகளை மருந்துகளுக்காக அன்றி மதுபானத்துக்காக அந்தப் பழக்கமுடையவர்கள் வாங்கி அருந்தி வருகிறார்கள். சாதாரண மது வகைகளைக் காட்டிலும் இந்தப் பச்சைச் சாராய மருந்து வகைகள் ஒன்றுக்கு நூறு மடங்கு தீமை பயப்பவை. சாப்பிடுகிறவர்களின் குடல்களை எரித்துப் பலவித கொடிய நோய்களை அவை உண்டு பண்ணும். மதுவிலக்குக்கு முன்னால் இந்த மருந்துகள் எவ்வளவு விற்பனை ஆயினவோ, அதைக் காட்டிலும் முப்பது மடங்கும் சில மருந்துகள் நூறு மடங்கும் அதிகமாக விற்பனையாகின்றன. ஆகையால் இந்த மருந்துகளின் விற்பனையைத் தடுப்பதற்கு மதுவிலக்குக் கமிஷனர் உடனே ஏற்பாடு செய்யும்படி கோர்ட்டார் ஏற்பாடு செய்ய வேண்டும்."

இம்மாதிரி பச்சை மதுசாரம் அதிகமாக அடங்கிய மருந்துகள் என்று ஸ்ரீ டி. துரைராஜன் பின்வரும் மூன்று மருந்துகளைக் குறிப்பிட்டிருந்தார் :—

1. Tincture Zingiberis
2. Tincture Zingiberis Fort B. P. C.
3. Tincture Aruantii

இந்த மருந்து வகைகளை டாக்டர்கள் கொடுத்து மிக மிகச் சிறு அளவில் வேறு மருந்துகளுடன் கலந்து அருந்தினால் மருந்துகளாகும். அவற்றில் உள்ள மதுசார மயக்கத்துக்காக அதிகமாக அருந்தினால் குடலை எரிக்கும் விஷமாகும்.

இந்த மூன்று மருந்துகளில் முதலாவதான 'டிங்ச்சர் ஜிங்கிபெரிஸ்' மதுவிலக்குச் சட்டத்துக்கு முன்னால் சென்னை மாகாணம் முழுவதிலும் மாதத்துக்கு ஆயிரம் ராத்தல்கள் விற்பனையாயின. மதுவிலக்குச் சட்டத்துக்குப் பிறகு அதாவது 1949-பிற்பகுதியில் சென்னை நகரத்


கல்கி


பொருளடக்கம்

மலர் 9 | இதழ் 40 — மே 7 — விக்ருதி | சித்திரை 25

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

இப்படியும் நடக்கலாம்!





நோய் பலவீனத்தை உண்டாக்கும்.



ஆனால் ருசிமிக்க ஓவல்டின்
மீண்டும் ஆரோக்கியம் பெற உதவும்!

நோயும் ஜுரமும் உடம்பை பலவீனப் படுத்தும்போது, சுலபமாக ஜீரணித்து அதிகமான புஷ்டி தரும் உணவு அவசியம்.

பலவீனம் நீங்கி ஆரோக்கியம் பெற "ஓவல்டின்" இணையற்ற உணவு - பானம் என்று உலக முழுவதிலுமுள்ள டாக்டர்களும், நர்ஸ்களும் சிபார்சு செய்கின்றனர். அது சாப்பிட ருசியானது சுலபமாக ஜீரணமாகும். தவிர நிறைந்த புஷ்டியுள்ள உணவு ஆகையால் பலவீனமுள்ள உடலுக்கு அவசியமான போஷாக்கையளிக்கும்.

ஓவல்டினில் ஜீவசக்தியளிக்கும் குணமுள்ள பழுத்த பார்லி மால்ட்டும், சுத்தமான ஏட்டுப்பாலும் விசேஷமாகத் தயாரித்த கோக்கோவும், இருப்பதுடன் மதிப்புவாய்ந்த இயற்கை பஸ்பேட்டுகளும் விடமின்களும் சேர்ந்துள்ளன.

ஓவல்டின் என்ற பெயருள்ளது இது ஒன்றுதான். இது இணையற்ற ஒரு தனிவகையைச் சேர்ந்தது.

'OVALTINE'

ஓ வ ல் டி ன்



உலகில் மிகப் பிரசித்திபெற்ற உணவு பானம்.

வினியோகஸ்தர்கள்:— கிரஹாம்ஸ் டிரேடிங் கம்பெனி (இந்தியா) லிட்.,

OV.301.

டயபெப்ஸின்



ஆகாரம் சரிவர ஜீரணமாக டயஸ்டாஸ், பெப்ஸின் என்னும் இருவகைப் பொருள்கள் அத்யாவசியமானவை. இவைகள் இரண்டும் உயர்ந்த ரசாயன முறையில் சேர்ந்ததுதான் டயபெப்ஸின். ஆகாரத்துக்குப்பின் ஒரு டீஸ்பூன் டயபெப்ஸின் உட்கொண்டால் ஜீரணச் செயல் தக்ஷணமே ஆரம்பித்து, பாக்கி ஜீரண வேலை வயிற்றுக்கு மிக எளிதாகிறது. உங்கள் ஆகாரத்தின் முழுப் போஷணையும் அடைய இதுவே சிறந்த மார்க்கம்.

யூனியன் டிரக், கல்கத்தா

ஏஜண்டுகள்: அப்பா அண்டு கோ., மதராஸ்
மற்றும் எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்

UNION DRUG. CALCUTTA

இருமல், அவஸ்தையளிக்கும் ஆஸ்துமா, மார்ச்சளி
3 நிமிஷங்களில் ஒழிக்கப்படுகின்றன

ஆஸ்துமா, மார்ச்சளி தாக்குதலால் மூச்சுத் திணறி தூக்கமின்றி அவதியுறுகிறீர்களா? அதிகமாக இருமுவதால் பிராணவஸ்தையாக இருக்கிறதா? பலஹீன உணர்ச்சியினால் வேலை செய்ய அசக்தராகவும், ருசியான வஸ்துக்களையும் உணவுகளையும் சாப்பிட முடியவில்லையா?

எவ்வளவு நாட்களாக உபாதைப்பட்டு எதை உபயோகித்திருப்பினும் சரி, மெண்டாகோ (Mendaco) ஓர் புதிய நம்பிக்கை அளிக்கும். மயக்க மருந்துகளில்லை, புகை பிடித்தலில்லை, இஞ்சக்ஷனில்லை, ஆட்டோமைசர் தேவையில்லை. செய்ய வேண்டியதெல்லாம் ருசியற்ற இரண்டு பில்லைகளை சாப்பாட்டின் போது உட்கொள்ள வேண்டியதே. உபத்திரவங்கள் மாயமாக மறைந்துவிடும். மூன்றே நிமிஷங்களில் மெண்டாகோ (Mendaco) இரத்தத்துடன் கலந்து வேலை செய்யத் தொடங்கி, கபத்தைக் கரைத்து சிரமமின்றி ஸ்வாசத்தை அபிவிருத்தி செய்து முதல் நாள் இரவே நல்ல நித்திரையை அளித்து விரைவில் பல வருஷங்கள் யௌவன உணர்ச்சியையும் பலத்தையும் பெறுவீர்கள்.

2 வருஷங்களாக ஆஸ்துமா இல்லை

மெண்டாகோ (Mendaco) அநேகமாக உடனே குணமளித்து ஸ்வாசத்தை இலகுவாக்குவது மட்டுமன்றி எதிர்கால தாக்குதல் ஏற்படாது செய்கிறது. உதாரணமாக ஜே. கிச்சர்ட்ஸ், நாமில்டன், ஒன்ட், கனடா, இருமல் மூச்சுத் திணறலால் இரவு தூக்கமின்றி 40 பவுண்டு எடை குறைந்து, இறந்து விடுவார் என எதிர்பார்க்கப்பட்டது. மெண்டாகோ (Mendaco) ஆஸ்துமாவை முதல் நாளே நிறுத்திவிட்டது. இரண்டு வருஷங்களில் அவ்வுபாதையே மீண்டும் ஏற்பட்டதில்லை.

பணம் வாபஸ் உத்தரவாதம்

மெண்டாகோ (Mendaco) முதல் வேளை சாப்பிட்டதுமே நேரடியாக ரத்தத்துடன் கலந்து ஆஸ்துமாவை ஒழிக்கிறது. மெண்டாகோ (Mendaco) அதிவிரைவில் வயதில் பல வருஷம் யௌவன உணர்ச்சி, பலம் இவற்றை அளிக்கிறது. வாபஸ் உத்திரவாதத்தின் கீழ் மெண்டாகோ (Mendaco) உபயோகித்துப் பார்த்து தீர்ப்பளியுங்கள். மெண்டாகோ (Mendaco) சாப்பிட்டபின் பூரண குணம் பெற்று, திருப்தி யளிக்காவிடில் வெற்றுப் பெட்டியை அனுப்பினால் முழுத் தொகையும் வாபஸ் செய்யப்படும். இன்றே மருந்து வியாபாரியிடமிருந்து மெண்டாகோ (Mendaco) வாங்குங்கள். இன்றிரவு எப்படித் தூங்குகிறீர்கள், மறுநாள் காலை எவ்விதமான தெம்புணர்ச்சி ஏற்படுகிறது என்பதையும் பாருங்கள்.

Mendaco
மெண்டாகோ

உத்தரவாதம் உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது.

● ஆஸ்துமா ● மார்ச்சளி நோய் ● ஹே ஜுரம் இவற்றை நிவர்த்திக்கிறது




இதற்குமுன் கிடைத்ததில்லை

இவ்வளவு அதிக பலன்

இந்த குறைந்த கிரயத்தில்

இந்த சோப்பினால் சுக க்ஷவரத்தை நினைத்தோதும் பலமாதங்கள் வரையில் பெறலாம். எந்த சோப்புடனும் ஒப்பிடுவதை இது ஆக்ஷேபிக்கிறது. மிக்க சுத்தமானதும், இதமளிக்கக்கூடிய தாவர எண்ணெய்களிலிருந்து தயாரிக்கப்பட்ட இந்த சோப் நீடித்து நிற்கும் க்ரீம் நுரையை தெளிவான பரிமளவாசனையுள்ளது—வெளிவிடுகிறது. நீங்கள் க்ஷவரம்செய்துகொள்ள கோத்ரெஜ் சோப்பை உபயோகித்து திருப்தியடையுங்கள். தாவர எண்ணெய் சோப்புகளை முதல் முதலில் தயாரித்தவர்கள் கோத்ரெஜ் கம்பெனிக்காரர்கள்.

துரிதமானதும், வழுவழுவென்ற க்ஷவரங்களுக்கு





மற்ற கோத்ரெஜ் பொருள்கள்: டாய்லெட் சோப்புகள் - க்ளிஸரின் ஹேர் ஆயில்.

100 சதவிகிதம் பரிசுத்தத் திற்கு உத்தரவாதம். மிருகக் கொழுப்பு இல்லாதது

இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் கணக்கற்ற ஊர்களில் பெரிதும் விரும்பப்படும் இந்த "ரவுண்டுகள்" லக்ஷக்கணக்கான வாடிக்கைக்காரர்களின் நன்மதிப்பை உறுதிப்படுத்துகின்றன.

ஒரு டஜன் ரூ. 3

கோத்ரெஜ் சோப்ஸ் லிட்.—மதராஸ்: 164, பிராட்வே; கொச்சி: 6/36, கல்வத்தி